

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 89 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 21 – செவ்வாய்க்கிழமை 07 நவம்பர் 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 89 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 21 - Tuesday 07 November 2023 - Chennai 12 Pages ₹ 5.00


### மாலத்தீவு கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# தமிழ்நாட்டு மீனவர்களை உடனடியாக விடுவித்திட நடவடிக்கை எடுத்திடுக!

## படகுகளை விடுவித்து, அபராதத் தொகையையும் ரத்து செய்திட நடவடிக்கை கோரி முதல்வர் மு.க.ஸ்டாலின், ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு கடிதம்!

சென்னை,நவ.7–

**மாலத்தீவு கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளை விடுவிப்பதோடு, அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகையினை இரத்து செய்திட உரிய நடவடிக்கையை விரைந்து மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

**இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:–**

தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 மீனவர்கள், IND TN12MM6376 என்ற பதிவு எண் கொண்ட 'ஹோலி ஸ்பிரிட்' என்ற படகில் கடந்த 22 102023 அன்று மீன்பிடிக்கச் சென்ற போது மாலத்தீவு தேசிய பாதுகாப்புப் படையின் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அபராதத் தொகையினை ரத்து செய்திடவும், அவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியும், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் நேற்று (6112023) கடிதம் எழுதியுள்ளார்.

**மாலத் தீவு அரசால் விதிக்கப்பட்ட அபராதம்!**

அந்தக் கடிதத்தில், மாலத் தீவு கடலோரக் காவல் படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீன்பிடிப் படகின் ஓட்டுநருக்கு, கடந்த 1.11.2023 அன்று, மாலத்தீவு குடியரசின் மீன்



வளம், கடல் வளம் மற்றும் வேளாண்மை அமைச்சகம், மாலத்தீவின் பணமதிப்பில் 42,00,000, அதாவது, இந்திய மதிப்பில் சுமார் 2 கோடியே 25 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், அறிவிப்பு கிடைத்த 30 நாட்களுக்குள் மேற்படி அபராதத் தொகையை செலுத்த வேண்டும் என்றும், அதுவரை, அந்த மீன்பிடிப் படகு மாலத்தீவு காவல் படையினரின் வசம் இருக்கும் என்றும் மாலத்தீவு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளதை தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மாலத்தீவு கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு மீனவர்களும், அவர்களது குடும்பத்தினரும், மீன்பிடித் தொழிலை மட்டுமே தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தற்போது விதிக்கப்பட்டிருக்கும் இந்த அபராதத் தொகை மிக அதிகமானது என்றும் அவர்களது சக்திக்கு அப்பாற்பட்டது என்றும், இது அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் நிரந்தரமாக வறுமையில் தள்ளிவிடும் என்றும் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

**தக்க நடவடிக்கையை உடனடியாக எடுத்திடுக!**

இந்தப் பிரச்சினையில், மாலத்தீவில் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் சார்பாக, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, மீன்பிடிப் படகிற்கு விதிக்கப்பட்ட அபராதத்தை இரத்து செய்யவும், மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இதில் தக்க நேரத்தில் தலையிட்டு மேற்கொள்ளும் நடவடிக்கை, கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த அந்த மீனவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் உரிய நிவாரணத்தை அளிக்கும் என தான் நம்புவதாக தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### தீபாவளியை முன்னிட்டு நவ.13 அன்று

## அரசு அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, நவ.7

தீபாவளியை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு 13.11.2023 திங்கள் அன்று விடுமுறை அளித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்தி வெளியீடு வருமாறு:-

இவ்வாண்டு தீபாவளியை 12.11.2023 அன்று கொண்டாடும் பொருட்டு தமது சொந்த ஊர்களுக்குச் சென்று திரும்பும் மாணவர்கள், அவர்தம் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 13.11.2023 அன்று ஒரு நாள் மட்டும், தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை அளிக்கவும், அவ்விடுமுறையை ஈடு செய்யும் வகையில் 18.11.2023 அன்று பணி நாளாக அறிவித்தும் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறு அரசு செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### தமிழ்நாட்டில்

## 27 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை,நவ.7

தமிழ்நாட்டில் 27 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, கரூர், திருச்சி, கிருஷ்ணகிரி, தருமபுரி, ஈரோடு, சேலம், நாமக்கல், பெரம்பலூர், அரியலூர், ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், மதுரை, தேனி, திண்டுக்கல், திருப்பூர், தென்காசி, நெல்லை, கன்னியாகுமரி, ஆகிய மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

---

### பண்ணைப் பசுமை காய்கறி கடைகளில் ஒரு கிலோ ரூ.30-க்கு விற்பனை! வெங்காய விலையை

## கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசு நடவடிக்கை!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சென்னை, நவ. 7-

கடந்த இரண்டு வாரங்களாக தமிழ்நாடு உட்பட பல்வேறு மாநிலங்களில் வெங்காயத்தின் விலை அதிக அளவு உயர்ந்து வருகிறது. பொதுமக்களுக்கு நியாயமான விலையில் வெங்காயத்தினை விற்பனை செய்திட தமிழ்நாடு அரசு வெங்காயத்தின் விலை ஏற்றத்தை கட்டுப்படுத்த பல்வேறு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த விலையேற்றத்தை கட்டுப்படுத்தும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தி உள்ளார். முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் பாதிப்படையாமல் இருக்க கூட்டுறவுத் துறையின் மூலமாக முதற்கட்டமாக சென்னையில் செயல்பட்டு வரும் 10 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் 4 நடமாடும் விற்பனை வாகனங்கள் என 14 மையங்கள் மூலம் நேற்று முன்தினம் முதல் (05.11.2023) வெங்காயம் விற்பனை செய்யப்படுகிறது.

தற்பொழுது உள்ளூர் சந்தையில் ஒரு கிலோ ரூ.60 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில், கூட்டுறவுத்துறையின் மூலமாக பண்ணை பசுமை காய்கறி கடைகள் மூலம் கிலோ ஒன்றிற்கு ரூ.30/ வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், தேவைக்கேற்ப தமிழ்நாட்டில் உள்ள பிற பகுதிகளிலும் வெங்காயம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். குறுகிய காலத்திற்குள் வெங்காயம் விலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அரசு முழு முயற்சி மேற்கொண்டு வருகிறது என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

---

### வருமானத்திற்கு அதிகமாக ரூ.45.20 கோடி சொத்துக்குவித்த வழக்கு

## அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் தருமபுரி நீதிமன்றத்தில் ஆஜர்!

### வரும் 22 ஆம் தேதி மீண்டும் ஆஜராக நீதிமன்றம் உத்தரவு!

தருமபுரி,நவ.7-

சொத்துக்குவிப்பு வழக்கில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் தருமபுரி நீதிமன்றத்தில் நேற்று ஆஜரானார்.

கடந்த 2022 ம் ஆண்டு ஜனவரி 19ஆம் தேதி கே.பி.அன்பழகன் மற்றும் அவருக்கு தொடர்புடைய 58 இடங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை மேற்கொண்டனர். இதில், வருமானத்திற்கு அதிகமாக 45 கோடியே 20 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் அளவிற்கு சொத்துக்களை வாங்கி குவித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்குப்பதிவு செய்து, அதற்கான 10 ஆயிரம் பக்கங்கள் அடங்கிய குற்றப்பத்திரிகையினை தருமபுரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர். இதனையடுத்து கே.பி. அன்பழகனுக்கு சம்மன் அனுப்பப்பட்டது. மேலும் அவரது மனைவி மல்லிகா, மகன்கள் சசிமோகன், சந்திரமோகன், உறவினர்கள், சரவணன், சரவணக்குமார், மாணிக்கம், தனபால் உள்ளிட்ட 10 பேருக்கும் நீதிமன்றம் சம்மன் அனுப்பியது. இன்று முதல் விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதன்படி, கே.பி.அன்பழகன் உள்ளிட்டோர் தருமபுரி நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகினர்.

அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. இதனையடுத்து மீண்டும் வரும் 22 ஆம் தேதி நேரில் ஆஜராக இவர்கள் அனைவருக்கும் நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

---

## அரசியல் சாசனத்திற்குட்பட்டே ஆளுநர்கள் செயல்பட வேண்டும்!

### உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கருத்து!

புதுடெல்லி, நவ. 7-

ஆளுநர்களின் செயல்களுக்கு எதிராக வழக்குகள் உச்சநீதிமன்றம் வரை வருவது கவலை அளிப்பதாகவும், அரசியல் சாசனத்திற்கு உட்பட்டு ஆளுநர்கள் செயல்பட வேண்டும் என்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் தெரிவித்துள்ளார்.

ஒன்றியத்தில் பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க., ஆட்சி அமைந்தது முதல், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் பழிவாங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஆளுநர்கள் மூலம் பல்வேறு நெருக்கடிகள் கொடுக்கப்பட்டு வருகிறது. மாநில அரசால் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களிலும், முக்கிய கோப்புகளிலும் கையெழுத்திடாமல் ஆளுநர்கள் அடாவடி செய்து வருகின்றனர். இதனால் ஆளுநர்களுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மாநிலங்கள் சார்பில் வழக்குகள் தொடரப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், பஞ்சாப் ஆளுநருக்கு எதிராக அம்மாநில அரசு தாக்கல் செய்த வழக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, ஜி.எஸ்.டி உள்ளிட்ட 7 மசோதாக்களை ஆளுநர் கிடப்பில் போட்டுள்ளதாக அம்மாநில அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி குற்றம்சாட்டினார்.

பஞ்சாப்பை போல தமிழ்நாடு, கேரளா, தெலுங்கானா, மேற்குவங்கம் உள்ளிட்ட அரசுகளும் ஆளுநர்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளதை அபிஷேக் சிங்வி சுட்டிக்காட்டினார்.

மாநில சட்டப்பேரவையை கூட்டுவதற்கே ஆளுநர் முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் பஞ்சாப் அரசு குற்றச்சாட்டியது. மீண்டும், மீண்டும் ஒரே வாதத்தை முன்வைத்து ஆளுநர் தாமதம் செய்வதாகவும் மூத்த வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி புகார் கூறினார்.

இதனையடுத்து ஆளுநர் தரப்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல், மசோதாக்களை பரிசீலிக்க அவகாசம் கோரினார். அப்போது தெலுங்கானாவிலும் இதே பிரச்சினை எழுந்ததாகவும், ஏன் இது போன்ற பிரச்சினைகள் எழுவதாகவும் தலைமை நீதிபதி கேள்வி எழுப்பினார். ஆளுநர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் அல்ல என்பதை உணர வேண்டும் என தலைமை நீதிபதி தெரிவித்தார்.

ஆளுநரின் செயலுக்கு எதிராக உச்சநீதிமன்றம் வரை வழக்குகள் வருவது கவலையளிக்கிறது என்றும் அரசியல் சாசனத்துக்குட்பட்டு பஞ்சாப் ஆளுநர் செயல்பட வேண்டும் எனவும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அறிவுறுத்தினார். கோப்புகளுக்கு ஆளுநர் எப்போது ஒப்புதல் வழங்குவார் என வினவிய தலைமை நீதிபதி, கோப்புகளின் தற்போதைய நிலை என்ன என்பது குறித்து, வரும் 10ஆம் தேதிக்குள் தெரிவிக்குமாறு சொலிசிட்டருக்கு உத்தரவிட்டார்.

---

### பிற மாநிலங்களில் பதிவு செய்யப்பட்ட ஆம்னி பேருந்துகள்

## டிச. 16க்குப் பின் தமிழ்நாட்டில் இயங்க அனுமதி இல்லை!

### போக்குவரத்துத் துறை அறிவிப்பு!

சென்னை,நவ.7-

டிசம்பர் மாதம் 16ம் தேதிக்குப் பிறகு பிற மாநிலங்களில் பதிவு செய்யப்பட்ட ஆம்னி பேருந்துகள் தமிழ்நாட்டில் இயங்க அனுமதிக்கப்படமாட்டாது என்று தமிழ்நாடு அரசு திட்டவட்டமாக தெரிவித்தது.

விழாக் காலங்களில் ஆம்னி பேருந்துகளில் கூடுதல் கட்டணம் வசூலிப்பது தொடர்பான புகார்கள் வந்த நிலையில், கடந்த சரஸ்வதி பூஜை விடுமுறை நாட்களில், சிறப்புக் குழுக்கள் மூலம் பேருந்துகளில் சோதனைகள் நடத்தப்பட்டன.

பிற மாநில ஆம்னி பேருந்துகளால் தமிழ்நாடு அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 28.16 கோடி வரை இழப்பு ஏற்படுவதாகவும், பர்மிட் நிபந்தனைகளை மீறி இயங்கும் இத்தகைய வாகனங்கள் விபத்திற்கு உள்ளாகும் போது பயணிகளுக்கு இழப்பீடு கிடைப்பதும் கேள்விக்குறியாகிறது என்றும் கூறியுள்ளது.

இந்நிலையில், நேற்று (06.11.2023) மீண்டும் போக்குவரத்து ஆணையர் தலைமையில் ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில், ஆம்னி பேருந்துகளின் உரிமையாளர்கள் ஏற்கனவே வழங்கப்பட்ட கால அவகாசத்தை விட (30.11.2023) மேலும் 15 நாட்களுக்கு நீட்டித்து தர வேண்டுகோள் விடுத்தனர். அதனடிப்படையில் அனைத்து பிற மாநில ஆம்னி பேருந்துகளும் 16.12.2023க்குள் தமிழ்நாட்டில் மறுபதிவு செய்து முடிக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 07-11-2023

# ஊழல்வாதிகளைக் காப்பாற்றும் ஆளுநர்

**தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளுக்கு அரசியல் உள்நோக்கத்தோடு ஆளுநர் ஆர்.என்.ரவி தடை போட்டு வருவதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்குத் தாக்கல் செய்துள்ளது. அதில் மிக மிக முக்கிய மானது, அ.தி.மு.க. ஆட்சி காலத்து ஊழல் அமைச்சர்களை ஆர்.என்.ரவி காப்பாற்றி வருவது ஆகும். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அனுமதி மறுப்பதன் மூலமாக ஊழல்வாதிகளுக்கு சட்டரீதியான பாதுகாப்பை ஆளுநர் ரவி கொடுத்து வருகிறார்.**

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் அமைச்சர்களாக இருந்தவர்கள் செய்த ஊழல் முறைகேடுகளை விசாரணை நடத்தி அம்பலப்படுத்தி வருகிறது தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறை. முன்னாள் அமைச்சர் கே.பி. அன்பழகன் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் பணம் ரூ.2,87,98,650/, தங்கநகைகள் 6.637 கிலோகிராம், சுமார் 13.85 கிலோகிராம் வெள்ளி மற்றும் ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அதில் கணக்கில் வராத பணம் ரூ.2,65,31,650/-, வங்கி பெட்டக சாவி மற்றும் வழக்கிற்கு தொடர்புடைய ஆவணங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த எம்.ஆர்.விஜய பாஸ்கர் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் வராத ரூ.25 லட்சத்து 56 ஆயிரம் கைப்பற்றப்பட்டுள்ளது. உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த வேலுமணி வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் ரூ.13 லட்சமும், ரூ.2 கோடிக்கான வைப்புத் தொகை, நிலப்பதிவு ஆவணங்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.

வணிகவரித்துறை அமைச்சராக இருந்த வீரமணி வீட்டில் ரூ.34 லட்சம் பணம், 5 கிலோ தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது. ரூ.1,80,000 மதிப்பிலான அந்நியச் செலாவணி டாலர் கைப்பற்றப்பட்டுள்ளது. 623 சவரன் தங்க நகைகள், 47 கிராம் வைர நகைகள், 7.2 கிலோ வெள்ளிப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. முன்னர் இருந்ததை விட 646 சதவிகிதம்இவரதுசொத்துஅதிகமானதாகபோலீஸார்கணக்கிட்டுள்ளனர்.

மக்கள்நல்வாழ்வுத்துறைஅமைச்சராகஇருந்தடாக்டர்விஜயபாஸ்கர், வருமானத்துக்கு அதிகமாக ரூ.27 கோடி சம்பாதித்துள்ளதாக போலீஸார் கணக்கிட்டுள்ளார்கள். ரூ.23 லட்சம் பணமும், 4.87 கிலோ தங்கமும், 136 கனரக வாகனங்களின் ஆவணமும் அவரது வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

மின்சார அமைச்சராக இருந்த தங்கமணி ரூ.4 கோடி மதிப்பிலான தொகையை வருமானத்துக்கு அதிகமாகச் சேர்த்ததாக ரெய்டு நடத்தப்பட்டு கணக்கில் வராத பணம், சான்று பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேற்கொண்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர் மற்றும் பி.வி. ரமணா ஆகியோர் மீது ஏற்கனவே குட்கா ஊழல் நிலுவையில் உள்ளது. குட்கா வியாபாரிகளிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு விற்பனை செய்ய அனுமதித்ததாக சி.பி.ஐ. தொடர்ந்த வழக்கு இது. இந்த வழக்கில் நீதிமன்ற விசாரணையை தொடங்க சி.பி.ஐ.-க்கு அனுமதி அளிப்பதற்கான கோப்பு ஆளுநர் ஆர்.என்.ரவியிடம் இருக்கிறது.

முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர்களான டாக்டர் சி.விஜய பாஸ்கர் மற்றும் பி.வி.ரமணா ஆகியோர் குட்கா / மாவா விநியோகிப்பாளர்களிட மிருந்து சட்ட விரோதமாகப் பணம் பெற்ற குற்றச்சாட்டு தொடர்பாக உயர்நீதிமன்ற உத்தரவுப்படி கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு மத்திய புலனாய்வு அமைப்பு (சி.பி.ஐ.) வழக்குப் பதிவு செய்து விசாரித்து, இவர்கள் மீது நீதிமன்ற விசாரணை தொடங்குவதற்கு இசைவு ஆணையை சி.பி.ஐ. கோரியது. **மாநில அமைச்சரவையும் அந்த இசைவு ஆணை கோரும் சி.பி.ஐ.-யின் கோரிக்கையை ஆளுநர் அலுவலகத்துக்கு 12.09.2022 அன்று அனுப்பியது. ஆனால் இதுவரையில் இந்த கடிதம் தொடர்பாக எவ்வித பதிலும் கிடைக்கப் பெறாமல் முன்னெப்போதும் இல்லாத வகையில் தாமதப்படுவதால் இந்த வழக்கில் எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.**

சி.பி.ஐ. நீதிமன்றம் தொடர்ந்து கண்டித்து வருகிறது. “அரசின் அனுமதி கிடைக்காவிட்டால் இந்த வழக்கையே எப்படி நடத்துவது?” என்று சி.பி.ஐ. நீதிமன்ற நீதிபதி கேள்வி எழுப்பி இருக்கிறார்.

இரண்டு நிகழ்வுகளில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம், வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சராக இருந்த கே.சி.வீரமணி மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்த எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் மீது நீதிமன்ற விசாரணையை தொடங்கிட இசைவு ஆணை கோரியது. **இந்தக் கோரிக்கைகளுக்கு மாநில அமைச்சரவை அனுமதி அளித்து அதற்கான கடிதங்களை முறையே 12.09.2022 மற்றும் 15.05.2023 ஆகிய தேதிகளில் ஆளுநர் அலுவலகத்திற்கு அனுப்பியது. இந்த கோரிக்கை கடிதங்களும் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளன.**

**★ கே.சி. வீரமணி மீதான ஊழல் வழக்கு கோப்புகள் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 12 ஆம் தேதி அன்றே ஆளுநர் மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதில் லஞ்ச ஒழிப்புத் துறையின் இறுதி விசாரணை அறிக்கை முழுமையாக இருக்கிறது.**

**★ எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீதான ஊழல் வழக்கு தொடர்பான கோப்புகள் கடந்த மே 15 ஆம் தேதி அன்றே ஆளுநர் மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதிலும் லஞ்ச ஒழிப்புத் துறையின் இறுதி விசாரணை அறிக்கை முழுமையாக இருக்கிறது. இந்த கோப்பைப் பெற்றுக் கொண்டதாக ஆளுநர் மாளிகை ஒப்புதல் கடிதம் கொடுத்திருப்பதாக சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி அப்போதே சொன்னார்.**

**ஆனால் இவை அனைத்தையும் மறைத்து வருகிறார் ஆர்.என்.ரவி. அவரது உண்மையான குணத்தையும் நோக்கத்தையும் இது காட்டுகிறது.**




நீட் எதிர்ப்புக் களத்தில் முன் வரிசையில் நிற்கிற தமிழ்நாட்டின் குரலாக, கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவரணி சார்பில் ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கத்தின் ஒரு பகுதியாக, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்களை நேரில் சந்தித்து, அவரிடமும், ம.தி.மு.க. முன்னணியினரிடமும், நீட் எதிர்ப்புக்கான கையெழுத்துகளை பெற்றார். அதுபோது அமைச்சர் பி.கே.சேகர் பாபு மற்றும் ம.தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் துரைவைகோ உள்ளிட்ட ம.தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### மோசமான ரெயில் விபத்துகள் குறித்து

# ரெயில்வே நிலைக்குழு விவாதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## மக்களவைத் தலைவருக்கு - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கடிதம்!

**சென்னை, நவ. 7-**

**மோசமான ரெயில் விபத்துகள் குறித்து ரெயில்வே நிலைக்குழு விவாதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்களவைத் தலைவர் ஓம்.பிர்லாவுக்கு கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு கடிதம் எழுதியுள்ளார்.**

கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. அவர்கள் மக்களவைத் தலைவர் ஓம்.பிர்லாவுக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:-



சமீபமாக இரண்டு பெரிய ரெயில் விபத்துகள் ஏற்பட்டு ஏராளமானோர் பலியானதுடன் பலரும் படுகாயம் அடைந்துள்ளனர். அத்துடன் குறிப்பிடத்தக்க அளவிற்கு ரெயில்வே சொத்துக்களும் நாசமாகி உள்ளன.

2.6.2023 அன்று ஒடிசா மாநிலம் பாலாசார் மாவட்டத்தில் ஏற்பட்ட முதலாவது ரெயில் விபத்தில், 2 ரெயில்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டு 296 பயணிகள் பலியானதுடன், 1200 பேர் காயமடைந்துள்ளனர்.

1995 ஆம் ஆண்டு பிரோஜாபாத்தில் நடைபெற்ற ரெயில் விபத்திற்குப் பிறகு நடந்த விபத்தைக் காட்டிலும் மிகவும் மோசமானது என்பதோடு, உலகம் முழுவதிலும் 2004 ஆம் ஆண்டிற்குப் பிறகு நடைபெற்ற மிகவும் பேரழிவு என்று தான் இந்த ரெயில் விபத்து குறித்து குறிப்பிட வேண்டியுள்ளது.

ரெயில் அமைச்சரும், மூத்த அதிகாரிகளும் விபத்து நடைபெற்ற இடத்திற்கு விரைந்து சென்று, பல நாட்கள் முகாமிட்டு நிவாரணப் பணிகள், மீட்புப் பணிகள் மேற்கொண்டனர் என்பது வருத்தத்திற்குரிய ஒன்று. இந்த விபத்து குறித்து சி.பி.ஐ. விசாரணை மேற்கொண்டு வருகிறது என்று நான் கருதுகிறேன். மேற்கொண்டு என்ன நடக்கிறது என்று தெரியவில்லை.

இரண்டாவது ரெயில் விபத்து அண்மையில் 29.10.2023 அன்று ஆந்திர மாநிலம் விஜய நகரம் பகுதியில் நடந்தது. இரண்டு பயணியர் ரெயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் 14 பேர் பலியானதுடன் 50 பேர் காயமடைந்துள்ளனர். மனிதத் தவறுகள் இந்த விபத்துகளுக்கு காரணம் என்று சொல்லப்படுகிறது. அதிகாரபூர்வமாக எதுவும் தெரியவில்லை.

மேலே குறிப்பிட்ட இரண்டு விபத்துகளும் வருத்தமடையக் கூடிய ஒன்று. 5 மாத இடைவெளியில் இந்த இரண்டு ரெயில் விபத்துகள் நடந்திருப்பது அனைத்துத் தரப்பினரையும் கவலைக் கொள்ளச் செய்துள்ளது.

இந்த விபத்துகள் தொடர்பான முழு விபரங்கள் எதுவும் ரெயில்வே நிலைக்குழுவிற்கு தெரியப்படுத்தப்படவில்லை. துரதிருஷ்டவசமான கவலைக்குரிய இந்த விபத்துகள் குறித்து நாட்டில் உள்ள மற்றவர்களைப் போல ரெயில் நிலைக்குழு உறுப்பினர்களும் மிகவும் வருத்தமடைந்துள்ளனர். ஸ்ரீலங்காவில் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற மோசமான ரயில் விபத்தைக் காட்டிலும் ஒடிசா விபத்து மிக மோசமானது என்பதால் அதை நிலைக்குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்க வேண்டும்.

துரதிருஷ்டவசமாக 5 மாதங்கள் கடந்தும் அவ்வாறு நிலைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரவில்லை.

பொது முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, தாங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து மேற்குறிப்பிட்ட வேண்டு மென்றே நடைபெற்ற ரெயில் விபத்துகள் பற்றி ரெயில்வே நிலைக்குழு விரிவாக விவாதிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### இலங்கை மலையகத் தமிழர் விழாவில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி உரையை ஒளிபரப்ப தடையா?

## ஒன்றிய அரசுக்கு வைகோ கடும் கண்டனம்!

*சென்னை, நவ. 7-*

*ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கை முழுவதும் அவர்களது கட்டுப்பாட்டில் இருந்தது. அங்கு அவர்களுக்குத் தேவையான தேயிலை, காபி, ரப்பர் தோட்டங்கள் ஏராளமாக பயிரிடப்பட்டன. அதில் குறைந்த கூலிக்கு வேலை செய்யவும் அங்கு இருந்த வனம் சார்ந்த இடங்களை விவசாயத்திற்கு ஏற்ப பண்படுத்தி பிரிட்டிஷாருக்குத் தேவையான விவசாயம் உற்பத்தி சார்ந்த துறைகளில் உழைப்பதற்காகவும் தமிழ்நாட்டு மக்கள் வலுக்கட்டாயமாக இலங்கைக்கு கொண்டு போகப் பட்டார்கள்.*

*தென் தமிழகத்தில் இருந்த அப்பாவி மக்களை வலு கட்டாயமாக இந்தியாவில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தியது பிரிட்டிஷ் அரசு. அவர்கள் இலங்கை மலையகத் தமிழர்கள் என்ற பெயரில் அடையாளப் படுத்தப்பட்டார்கள்.*

*பிரிட்டிஷாரால் வலுக்கட்டாயமாக கொண்டு போகப்பட்டு இலங்கையில் குடியமர்த்தப்பட்ட மலையகத் தமிழர்கள் புலம்பெயர்ந்த 200 வது ஆண்டு தற்போது அனுசரிக்கப்படு கிறது.*

*“நாம் 200 ஒற்றுமை பன்முகத்தன்மை மற்றும் பாரம்பரியத்தின் முழக்கம்” என்ற பெயரில் மூன்று நாட்கள் நிகழ்ச்சிகள் நடந்தது.*

*இந்நிகழ்ச்சியை இலங்கை மலையகத் தமிழர்களுக்காக இலங்கையின் உள்நாட்டு தோட்ட தொழில் துறை மற்றும் அரசு தொழில்துறை அமைச்சகம் முன்னெடுத்தது.*

*இலங்கையில் உள்ள மலையகத் தமிழர்களின் உறவு பாலமாக இலங்கை அமைச்சர் ஜீவன் தொண்டமான் முன்னெடுத்த, இந்த நிகழ்ச்சியில் மலையகத் தமிழர்கள் அவர்களின் பூர்வீக தமிழ் பூமி சார்ந்த அரசியல் பிரதிநிதிகளாக தமிழ்நாட்டிலிருந்தும் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டது.*

*இதில் தமிழகத்தை பூர்வீகமாக கொண்ட இந்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார் .*

*இலங்கை அரசின் பங்களிப்புடன் இலங்கை அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்க வேண்டும் என இலங்கை அமைச்சர் ஜீவன் தொண்டமான் வேண்டுகோள் விடுத்திருந்தார்.*

*அதனை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக மலையகத் தமிழர்களின் ‘நாம் 200’ விழாவிற்கு வாழ்த்துரை வழங்கி அனுப்பியிருந்தார்.*



*அந்த உரையில், “மனிதன் வாழ்ந்திராத மலைக் காடுகளை மலையகத் தோட்டங்களாக மாற்றியவர்கள் மலையகத் தமிழர்கள்! மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் வரலாறு இலங்கையில் காப்பி பயிர் செய்யப்பட்ட ஆரம்பகாலம் முதல் தொடங்குகிறது.*

*1823ஆம் ஆண்டு கம்பளைக்கு அருகே உள்ள சிங்கபிட்டிய என்ற கிராமத்தில் கேப்டன் ஹென்றி பேட் என்ற பிரிட்டிஷ்காரர், 14 இந்தியத் தொழிலாளர்களையும் சில சிங்களத் தொழிலாளர்களையும் வைத்து காப்பித் தோட்டம் தொடங்கினார். இது இலங்கைப் பொருளாதாரத்தில் மகத்தான மாற்றத்தை உருவாக்கியது.*

*காப்பித் தோட்டங்கள் பெருகப்பெருக இந்தியத் தொழிலாளர்கள் ஏராளமாக இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். காப்பி தோட்டத்தையடுத்து தேயிலைத் தோட்டங்கள் அதிகமானது. அதனையும் மலையகத் தமிழர்கள் வளப்படுத்தினார்கள். பின்னர் ரப்பர், தென்னை என அனைத்துப் பணப் பயிர்களது உற்பத்தியும் மலையகத் தமிழர்களது உழைப்பால் உருவானதுதான்.*

*இலங்கை நாட்டுக்காக தங்களது உழைப்பை வழங்கியவர்கள் மலையகத் தமிழர்கள். இலங்கை நாடு உயர உழைத்தவர்கள். தங்களது ரத்தத்தையும் வியர்வையையும் காலத்தையும் கடமையையும் அந்த நாட்டுக்காகவே ஒப்படைத்தவர்கள்.*

*“கடல் நீர் உப்பாக இருப்பது ஏன்? அது கடல் கடந்த தமிழர்களின் கண்ணீரால்!” என்று எழுதினார் பேரறிஞர் அண்ணா அவர்கள். மலையகத் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு திரும்பியபோது அவர்களை அரவணைத்து தமிழக மலைப்பகுதிகளில் குடியமர்த்தி, அரசு ரப்பர் தோட்டங்கள் மூலம் அவர்கள் வாழ்வில் உயர வழிவகை செய்தோம். அந்த உணர்வோடுதான் அனைத்துப் பிரச்சினைகளையும் அணுகி துயர் துடைக்கும் பணிகளில் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம். உரிமை காக்கவும் உதவிகள் செய்து வருகிறோம். அந்த வகையில், மலையக தமிழ் மக்களின் நீதியும் உரிமையும் நிலைநாட்டப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.*

*மலையக தமிழர்களின் குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இலங்கையில் வாழும் அனைத்து மக்களையும் போல கல்வியிலும் பொருளாதார முன்னேற்றத்திலும் அவர்கள் மேலெழும்பும் காலத்தை எதிர்நோக்கி தமிழ்நாடு காத்திருக்கிறது. கல்வி, சுகாதாரம், வாழிட உரிமைகள், பொருளாதார உதவிகள், சமூக உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும். நாட்டை வாழ வைத்த மக்களை வாழ வைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். அதற்காக தொப்புள் கொடி உறவுகளான தமிழ்நாடு என்றும் குரல் கொடுக்கும்” என்று முதல்வர் ஸ்டாலின் அவர்கள் உரையில் குறிப்பிட்டி ருந்தார்.*

*முதல்வரின் உரை ஊடகங்கள் மற்றும் ஏடுகளுக்கும் அளிக்கப்பட்டிருந்தன.*

*ஆனால் நவம்பர் 3 ஆம் தேதி கொழும்பில் நடைபெற்ற மேற்கண்ட விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் காணொலி உரையை ஒளிபரப்பக் கூடாது என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு தடை போட்டு விட்டது என இன்று வெளியான இந்து ஆங்கில நாளேடு (06.11.2023) விரிவாக செய்தி வெளியிட்டு இருக்கிறது.*

*இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்கே மற்றும் பிரதமர் உள்ளிட்டோர் கலந்து கொண்ட அந்த நிகழ்ச்சியில் இந்திய அரசின் சார்பில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டார்.*

*தமிழ்நாடு பா.ஜ.க. தலைவரும் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*ஆனால் தொப்புள் கொடி உறவுகளான தமிழ்நாட்டு மக்களின் சார்பில் வாழ்த்துரை வழங்கி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அனுப்பிய காணொலி உரையை அந்த விழாவில் ஒளிபரப்ப தடை விதித்ததன் மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சிறுமைப்படுத்துவதற்கு முயன்றுள்ள ஒன்றிய பா.ஜ.க. அரசின் செயல் ஏற்றுக்கொள்ள முடியாதது, கடும் கண்டனத்துக்குரியது.*

*இவ்வாறு வைகோ அவர்கள், தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*

## வாக்குச் சாவடி பொறுப்பாளர்களின் பணி தேர்தல் வெற்றிக்கு மிகவும் முக்கியம்!

# ‘இந்தியா’ கூட்டணியின் வெற்றி, இந்தியாவின் வெற்றி!

## திருவள்ளூரில் இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ. 7 -**

**தேர்தல் வெற்றிக்கு மிகவும் முக்கியம் வாக்குச் சாவடி பொறுப்பாளர்களின் பணியாகும். அதை உணர்ந்து அவர்கள் செயல்பட வேண்டும். ‘இந்தியா’ கூட்டணியின் வெற்றிதான் இந்தியாவின் வெற்றி என்று திருவள்ளூரில் நடைபெற்ற சென்னை மண்டல வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.**

திருவள்ளூரில் சென்னை மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டம் நேற்று முன்தினம் (5.11.2023) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு தி.மு.க. இளைஞர் அணி செயலாளர் மற்றும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:-

நாடாளுமன்றத் தேர்தல் களத்தில், நம்முடைய வெற்றியை உறுதி செய்திடும் விதமாக, இந்தச் சென்னை மண்டல வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் கூட்டம் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருச்சி - இராமநாதபுரம் - திருப்பூர் - திருவண்ணாமலை ஆகிய இடங்களில் எழுச்சியுடன் நடைபெற்ற பாக முகவர்கள் கூட்டத்தில், நம் கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று உரையாற்றினார். இன்றைய கூட்டத்தில் நம் முதலமைச்சர் - கழகத்தலைவர் அவர்களால் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை. ஆனாலும், அவருடைய நினைப்பெல்லாம் இங்குதான் இருக்கும். இன்னும் சொல்லப்போனால், தொலைக்காட்சியில் நேரடியாக இப்போது அவர் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

அவரால் கலந்து கொள்ள முடியவில்லையென்றாலும், என்னை அழைத்து, ‘நீ போய் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி வந்து விடு’ என்று என்னை அனுப்பிவைத்திருக்கிறார் நம்முடைய கழகத்தலைவர் அவர்கள்.

வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தை ஒரு மாநாடு போல நடத்திட முடியுமென்றால், இந்தியாவிலேயே ஒரே இயக்கம் நம் தி.மு.கழகம்தான். அதற்கு இந்தக் கூட்டமே சாட்சி.

இங்கு அரங்கிற்கு உள்ளே வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் வெள்ளம் போல் திரண்டுள்ளீர்கள். அதே போல, அரங்கிற்கு வெளியேயும் நம் தொண்டர்கள் கடல் போல் கூடியிருக்கிறார்கள்.

### தலைவர் சொல்லும் பணிகளை பொறுப்போடு செய்பவர் ஆர்.காந்தி!

இந்த மாநாட்டை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள, மாவட்டப் பொறுப்பு அமைச்சர் ராணிப்பேட்டை காந்தி அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகள். ராணிப்பேட்டை காந்தியை பொறுத்தவரை, தலைவர் சொல்வதை தலைமை சொல்கிற எந்தப் பணியையும் சிறப்பாகச் செய்து முடிப்பதுதான் அவரது தலையாய பணி. மேலும் இந்த கூட்டத்தைச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள, திருவள்ளூர் மாவட்டக் கழகத்தினருக்கும் என்னுடைய வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று காலை 8.00 மணியிலிருந்து பல்வேறு நிகழ்ச்சிகள் இங்கே நடைபெற்றிருக்கின்றன.

கழக மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, அமைச்சர் தா.மோ.அன்பரசன், லெனின், மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், இயக்குநர் சகோதரர் கரு. பழனியப்பன் ஆகியோர் இங்கே பல்வேறு தலைப்புகளில் உரையாற்றி இருக்கிறார்கள்.

அவர்கள் பேசியதையெல்லாம் நீங்கள் உள்வாங்கி இருப்பீர்கள் என்று நம்புகிறேன். அவர்களுக்கு என் அன்பும், வாழ்த்தும்.

இன்றைக்குத் திருவள்ளூர் மத்தி - திருவள்ளூர் கிழக்கு - திருவள்ளூர் மேற்கு, சென்னை கிழக்கு - சென்னை தென் மேற்கு - சென்னை மேற்கு - சென்னை வடக்கு - சென்னை வட கிழக்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு மற்றும் காஞ்சிபுரம் தெற்கு என மொத்தம் 11 மாவட்டக் கழகங்களிலிருந்து 10 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் இங்கு வருகை தந்துள்ளீர்கள்.

நம்முடைய இயக்கத்தின் பொதுக்குழுவை, நம் தலைவர் அவர்கள் நமது `கழகத்தின் இதயம்’ என்று எப்போதும் குறிப்பிடுவார்கள். அது போல தி.மு.க.வின் ரத்த அணுக்கள் என்றால், அது வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்களாகிய நீங்கள்தான்.



நமது உடலில், தலையில் இருந்து கால் வரை பயணம் செய்து கொண்டிருப்பது ரத்த அணுக்கள். அதே மாதிரி நமது கழகத்தின் தலைவர் முதல் தொண்டர்கள் வரை எல்லோருடனும் தொடர்பில் இருப்பவர்கள் வாக்குச்சாவடி முகவர்களாகிய நீங்கள்தான்.

உடல் ஆரோக்கியத்துக்கு எப்படி ரத்த அணுக்கள் முக்கியமோ, அதே மாதிரி வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் சரியாகச் செயல்பட்டால் தான் நமது கழகம் பலத்துடன், சோர்வின்றிச் செயல்பட முடியும், என்பதை நீங்கள் அறிவீர்கள்..

எனவே உங்களை எல்லாம் இங்கே சந்தித்து, உங்களுடன் உரையாடும் வாய்ப்பை அளித்த கழகத் தலைவருக்கும் மாவட்டக்கழகத்துக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாநாட்டிலே உங்களையெல்லாம் சந்திப்பதிலே கூடுதல் மகிழ்ச்சி. இரண்டு மடங்கல்ல மூன்று மடங்கு மகிழ்ச்சி.

அதற்கு காரணம் நம்முடைய சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொ2குதியினரும் இந்தக்கூட்டத்திலே கலந்துகொண்டிருக்கிறீர்கள். அதைவிட பெருமை நம்முடைய தலைவருடைய தொகுதி கொளத்தூர் தொகுதி சென்னை கிழக்கு மாவட்டத்தினுடைய வாக்குச்சாவடி பொறுப்பாளர்களும் இதில் கலந்து கொள்வது கூடுதல் பெருமை.

**பா.ஜ.க. என்கிற சுத்தியலால் எவ்வளவு ஓங்கி ஓங்கி அடித்தாலும், அதனால் தமிழர்களின் இதயத்தை ஒரு நாளும் திறக்க முடியாது. காரணம், தமிழ்நாட்டின் இதயத்தைத் தொடும், திராவிட இயக்கக் கொள்கை எனும் சாவியைத் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், நம் தலைவர் முதலமைச்சர் அவர்கள் கையில் ஒப்படைத்துச் சென்றிருக்கிறார்கள்.**

நமது கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் மீது எந்த அளவு நம்பிக்கை வைத்திருக்கிறார் என்பதற்கு ஒரு சிறிய சம்பவம் ஒன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

### ஜனநாயக முறைப்படிதான் ஆட்சிக்கு வருவோம்!

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அம்மையார் ஜெயலலிதா அவர்களின் மறைவுக்குப் பிறகு அந்தக் கட்சியில் பெரிய குழப்பம் ஏற்பட்டது. அந்தக் கட்சி இரண்டாக மூன்றாக நான்காக பல்வேறு அணிகளாக பிரிந்தது.

அப்போது பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும் வல்லுநர்களும் நம் கழகத் தலைவர் அவர்களுக்கு ஆலோசனை கொடுத்தார்கள். அ.தி.மு.க.வினுடைய எம்.எல்.ஏ.க்களை எல்லாம் வளைத்துப்போட்டு, தி.மு.க. ஆட்சிக்கு வர வேண்டும் என்று பல பேர் ஆலோசனை கொடுத்தார்கள்.

ஆனால், நம்முடைய தலைவர் அவர்கள் தெளிவாக சொன்னார். எந்தவொரு குறுக்கு வழியிலும் ஈடுபடாமல் ‘நமது கழகம் ஜனநாயக முறைப்படி மக்களைச் சந்தித்து, தான் ஆட்சிக்கு வருமே தவிர, வேறு எந்தக் குறுக்கு வழியிலும் தி.மு.க. ஆட்சி அமைக்காது’ என்று நமது தலைவர் அவர்கள் தெளிவாகக் கூறினார்.

எந்த நம்பிக்கையில் நமது தலைவர் அவர்கள் அப்படிச் சொன்னார்கள் என்றால், நீங்களெல்லாம் வாக்குச்சாவடி முகவர்களாக இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையில்தான் நமது தலைவர் அவர்கள் அப்படிச் சொன்னார்கள். சொன்னது மட்டுமல்ல, சொன்ன மாதிரி தலைவர் செய்தும் காண்பித்தார்.

நமது தலைவர் உங்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையை நீங்கள் காப்பாற்றிக் காட்டியிருக்கிறீர்கள். இன்றைக்கு நாம் பெருமையாகச் சொல்கிறோமே `திராவிட மாடல் அரசு’ நமது கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கிறது என்றால், அதற்கு முக்கிய காரணம் நீங்கள்தான். யோசித்துப்பாருங்கள். நாம் இங்கு பாக முகவர்கள் கூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், அ.தி.மு.க.வுக்கோ பா.ஜ.க.வுக்கோ இப்படிப்பட்ட கூட்டங்களை நடத்தியதே கிடையாது. அவர்களுக்கு வாக்குச்சாவடி முகவர்கள் மீது எந்த நம்பிக்கையும் கிடையாது.

எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக சென்ற முறை அமர்ந்திருந்தாலும் ஒன்றை மட்டும் நீங்கள் யோசித்துப்பார்க்க வேண்டும். அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் கிடையாது.

நம்முடைய கழகத்தலைவர்கூட அவருக்கு ஒரு பட்டப்பெயர் வைத்திருக்கிறார் `பாதம் தாங்கி பழனிச்சாமி’ என்று பட்டப்பெயர் வைத்திருக்கிறார்.

அதற்கு காரணம் என்னவென்று உங்களுக்கே தெரியும். அவர் தாங்காத பாதம் கிடையாது. அவருக்கு தெரிஞ்சதெல்லாம் வெறும் பாதம்தான்.

எப்படி முதலமைச்சரானார்? கொடநாட்டில் எல்லா எம்.எல்.ஏ.க்களையும் கொண்டு போய் அடைத்து வைத்து விட்டு, டேபிள் சேர் அடியில் புகுந்து போய் சசிகலா காலைப் பிடித்து முதலமைச்சர் ஆனவர்தான் பாதம் தாங்கி பழனிச்சாமி.

கடைசியில அந்த அம்மா காலையே வாரி விட்டுட்டார். அந்த அம்மாவை கட்சியை விட்டு நீக்கினார். கூட இருந்த ஓ.பன்னீர்செல்வம் அவர்களுடைய காலையும் வாரிவிட்டார்.

இப்போ அமித்ஷா அவர்கள் மோடி அவர்கள் காலை பிடித்து இருக்கிறார். அத்னால் தான் முதலமைச்சர் அவர்கள், அவரை `பாதம் தாங்கி பழனிச்சாமி’ என்று சொல்கிறார்கள்.

### பா.ஜ.க. ஆட்சியின் சாதனை ரூ.7.5 லட்சம் கோடி ஊழல்!

பா.ஜ.க ஒன்றிய அரசாக இருந்தாலும் பல மாநிலங்களில் அந்தக்கட்சிக்கு மக்கள் ஆதரவு கிடைக்கவில்லை. ஏதாவது நல்லது செய்திருந்தால்தானே மக்கள் ஆதரவைப் பெற முடியும். பா.ஜ.க.வினுடைய ஒரே சாதனை... ஒன்பது ஆண்டு கால சாதனை... சமீபத்தில் சி.ஏ.ஜி. அறிக்கை அந்த அறிக்கையில் புட்டு புட்டு வைத்து விட்டார்கள் 9 ஆண்டுகளில் ஏழரை லட்சம் கோடி ரூபாய் பணத்தை காணவில்லை அந்த அளவு ஊழல் செய்திருக்கிறார்கள். இதை நான் சொல்லவில்லை. சி.ஏ.ஜி. ரிப்போர்ட் சொல்கிறது. சி.ஏ.ஜி. என்கின்ற அமைப்பு ஒன்றிய மாநில அரசுகளுடைய செலவுகளை ஆய்வு செய்வதுதான் அதனுடைய வேலை.

தணிக்கை செய்வது தான் அதனுடைய வேலை. அவர்கள் சொல்லிவிட்டார்கள், ஏழரை லட்சம் கோடி ரூபாய்க்கு கணக்கு இல்லை. பணம் எங்க போனது என்றே தெரியவில்லை.

துவாரகா சாலை என்று ஒரு திட்டம். ஒரு கிலோமீட்டர் அளவுக்கு சாலை போடுவதற்கு எவ்வளவு தெரியுமா செலவு சொல்லி இருக்கிறார்கள்? 250 கோடி ரூபாய் செலவு கணக்கு காண்பித்து இருக்கிறார்கள்.

அதுபோல `ஆயுஷ்மான் பாரத்’ என்ற ஒரு திட்டம். இறந்து போன 88 ஆயிரம் பேருக்கு மருத்துவ காப்பீட்டுத் திட்டம் மெடிக்கல் இன்சூரன்ஸ்.

இதையெல்லாம் நம்முடைய தலைவர் அவர்கள் ஆதாரத்தோடு புட்டு புட்டு வைத்தார்கள். எந்தவித பதிலும் இதற்கு கிடையாது.

சமீபத்தில் இந்த சி.ஏ.ஜி. அறிக்கையைத் தயாரித்த அதிகாரிகள் அத்தனை பேரும் கூண்டோடு மாற்றப்பட்டு இருக்கிறார்கள். இது ஒரு புறமிருக்க...

நம்முடைய ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் எங்கு போனாலும், இந்தியாவில் எந்த மாநிலத்துக்கு போனாலும் நம்மைப் பற்றியும் நம்முடைய தலைவரைப் பற்றியும் தி.மு.க.வை பற்றியும் தான் பேசிக் கொண்டிருக்கிறார். நினைத்துக்கொண்டும் இருக்கிறார்.

### தி.மு.க.வை மறக்காதவர் பிரதமர் மோடி!

மத்திய பிரதேசத்தில் போய் பேசுகிறார், `தி.மு.க.வுக்கு வாக்களித்தால், வாழ்வது ஒரே குடும்பம்தான் அது கலைஞரின் குடும்பம் தான்’ என்று பேசுகிறார்

நம்முடைய தலைவர் அவர்கள் பதில் கூறினார். `ஆமாம் ஒரே குடும்பம்தான். தி.மு.க.வுக்கு வாக்களித்தால், தமிழகம் என்கிற ஒரே குடும்பம்தான் வாழ்க்கை நடத்தும். ஒட்டுமொத்த தமிழ்நாடுமே எங்கள் கலைஞருடைய குடும்பம்தான்’ என்று சொன்னார்

நான் உங்களைக்கேட்கிறேன்.

நீங்கள் ஆட்சிக்கு வந்து 9 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை என்ன செய்து கிழித்தீர்கள்? எங்கள் தலைவர் தேர்தல் வாக்குறுதி தந்தார். மகளிர்க்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்று. கலைஞர் மகளிர் உதவித் தொகை தருவேன் என்று சொன்னார். இரண்டு மாதங்களாக கொடுத்தாகிவிட்டது. நீங்கள் கூறிய 15 லட்சம் என்ன ஆயிற்று? தேர்தல் வாக்குறுதிகள் என்று கூறியவற்றில் ஒரு வாக்குறுதியைகூட நீங்கள் நிறைவேற்றவில்லை.

உங்களாலே வாழ்ந்த ஒரே ஒரு குடும்பம் யார் என்று சொன்னால், அது உங்களின் நெருங்கிய நண்பர் அதானியினுடைய குடும்பம்தான் உங்களால் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு குடும்பம்.

அதானி ரயில்வேஸ், அதானி ரோடு, அதானி ஏர்போர்ட், அதானி துறைமுகம், அதானி மின்சாரம், அதானி ஸ்டேடியம்

இப்படிஅனைத்து பொதுத்துறைகளையும் தூக்கி, அதானியிடம் கொடுத்ததுதான் 9 ஆண்டு கால சாதனை.

அமெரிக்காவிலிருந்து ஹிண்டன் பர்க் என்ற ஒரு நிறுவனம் சமீபத்தில் ஒரு ஆய்வு அறிக்கையை வெளியிட்டது. அதானி, உலக பணக்காரர்களின் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கிறார். இதில் ஏதோ முறைகேடு இருக்கிறது என்று ஹிண்டன்பர்க் நிறுவனம் ஆய்வு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் இப்படி ஒரு நிறுவனம் 8 ஆண்டுகளில் உலக பணக்காரர்களின் பட்டியலில் எப்படி இடம்பெறக்கூடிய அளவுக்கு வளர்ச்சி ? உலகிலேயே இதுதான் முதல் முறை என்று அந்த அறிக்கை கூறுகிறது.

இதை நம்முடைய சகோதரர் ராகுல் காந்தி அவர்கள் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்கள். கழக உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்கள் இதுவரைக்கும் அதற்கு பதில் கிடையாது.

ஒன்றிய அரசு நடத்துவது, மக்களுக்கான ஆட்சி கிடையாது. கார்ப்பரேட்டுகளுக்கான ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

### ஒன்றிய பா.ஜ.க.வின் ஆட்சி கார்ப்பரேட்டுகளுக்கானது!

கார்ப்பரேட் கம்பெனிகளின் வாராக் கடன் 25 லட்சம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்துள்ளார் திரு. மோடி அவர்கள்.

9 ஆண்டுகளில் தமிழ்நாட்டினுடைய வரிப்பணமாக தமிழ்நாட்டு அரசு கொடுத்தது 5 லட்சம் கோடி ரூபாய். ஆனால், ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்குத் திருப்பிக் கொடுத்தது வெறும் 2 லட்சம் கோடி ரூபாய். ஆனால், உத்தர பிரதேசம் மாநிலம் வரியாக கொடுத்தது 3 லட்சம் கோடி. ஒன்றிய அரசு அதற்கு திருப்பி கொடுத்தது ஒன்பது லட்சம் கோடி ரூபாய். இப்படி பா.ஜ.க. அரசு இல்லாத மாநிலங்களையெல்லாம் இந்த ஒன்றிய அரசு பழிவாங்கிக் கொண்டிருக்கிறது.

நான் இப்போது சொல்லுகிறேன், உங்களுடைய கூட்டணி நீங்கள் ஐ.டி மற்றும் ஈ.டியோடு கூட்டணி வைத்து இருக்கிறீர்கள்.

இப்போது கூட நம்முடைய அமைச்சர் எ.வ.வேலுவின் இல்லத்திலும் அவருக்குச் சொந்தமான நிறுவனங்களிலும் ஐ.டி சோதனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது

மீண்டும் மீண்டும் சொல்கிறேன். மோடி அவர்களே, நாங்கள் மோடியை. பார்த்தும் பயப்பட மாட்டோம். ஈ.டியை பார்த்தும் பயப்பட மாட்டோம்.

உங்களைப் பார்த்து எங்கள் கழகத்தினுடைய முன்னணித் தலைவர்கள் அல்ல, எங்களுடைய கழகத்தின் கிளைச் செயலாளர்கூட பயப்பட மாட்டார்.

இதையெல்லாம் பார்க்கும் போதுதான் நம்முடைய தலைவர் அவர்கள் வாக்குச்சாவடி முகவர்கள் மீது வைத்திருக்கக் கூடிய நம்பிக்கை புரிகின்றது. தலைவர் அவர்களும் கழக மூத்த தலைவர்களும் நானும் பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு அடுத்தடுத்த தொகுதிகளுக்குப் போய் விடுவோம்.

சாவடி பொறுப்பாளர்களான நீங்கள் தான் அந்த பிரச்சாரத்தை மக்களிடத்தில் எடுத்துக் கொண்டு சேர்த்து அதை வாக்குகளாக தேர்தல் நாளன்று வாக்காளர்களை வாக்கு செலுத்த வைத்து அந்தப் பணியை சிறப்பாக முடிப்பீர்கள். தேர்தலில் வெற்றி நிச்சயம் ஆகும் வரை கடைசி வரை உழைப்பது யார் என்றால் வாக்குச்சாவடி பொறுப்பாளர்களான நீங்கள்தான்.

உங்கள் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து தெரிந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அந்த ஊரைப் பொறுத்தவரை அந்த வாக்குச்சாவடியைப் பொறுத்தவரை நீங்கள் தான் தி.மு.க.வினுடைய முகம் என்பதை நீங்கள் உணர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் தி.மு.க.வினுடைய முகம் மட்டுமல்ல. நம்முடைய தலைவருடைய முகம் நம்முடைய திராவிட மாடல் அரசினுடைய முகம் நீங்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

நீங்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் உங்களால் முடியாததை ஒன்றியச் செயலாளர் மாவட்டச் செயலர்களிடமும் மாவட்ட அமைச்சரிடமும் எடுத்துச் சென்று சொல்லி, உங்களால் முடிந்ததை அவர்களுக்குச் செய்து கொடுங்கள்.

### தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றம்!

அதேபோல் அரசினுடைய திட்டங்களை உங்கள் பகுதி மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டிய மிகப்பெரிய கடமை உங்களிடம் உள்ளது. முக்கியமாக கலைஞர் உரிமைத் திட்டம் இன்று சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு கோடி 6 லட்சத்து 58 ஆயிரத்து மகளிர் இந்தத் திட்டத்தினால் பயன்பெறுகிறார்கள். மாதா மாதம் ஆயிரம் ரூபாய். இதை நாம் வாக்குறுதியாக கொடுத்தோம்.

ஒன்றிய பா.ஜ.க. அரசும் அ.தி.மு.க.வும் இந்தத் திட்டத்தை நிறைவேற்றவே முடியாது என்று சொன்னார்கள். நம்முடைய தலைவர் அவர்கள் அண்ணாவின் பிறந்தநாள் அன்று, கலைஞர் நூற்றாண்டில் கலைஞர் பெயரிலேயே திட்டத்தை அறிவித்து இரண்டு மாதங்கள் இரண்டாயிரம் ரூபாய் பணம் கொடுத்தாகிவிட்டது.

நம் திட்டத்தைக் குறை சொன்னவர்கள் இன்றைக்கு சட்டீஸ்கர் மாநிலத் தேர்தல் பிரச்சாரத்தில், மகளிர்க்கு வருடத்துக்கு பன்னிரண்டாயிரம் ரூபாய் என்று அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்.

நம்முடைய திட்டங்களைக் காப்பியடிப்பதுதான் பா.ஜ.க.வினுடைய வேலை.

அதேபோல் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி மாதம் ஆயிரம் ரூபாய் அதில் சேமிக்கிறார்கள். புதுமைப்பெண் திட்டம். பெண்கள் உயர் கல்வி படிக்க வேண்டும் என்றால், அரசு பள்ளிக்கூடத்தில் படித்து, கல்லூரியில் படிப்பதற்கு மகளிருக்கு வசதியாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் சிறப்பாக செயல்பட்டு அவர்களின் கணக்கில் பணம் வரவு வைக்கப்படுகிறது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்வீர்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை... 3ஆம் பக்கத் தொடர்ச்சி

அதேபோல் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இதை அத்தனை மாநிலங்களும் பாராட்டுகிறார்கள். பக்கத்து மாநிலங்களில் உள்ள கர்நாடகா, தெலங்கானா மாநிலத்தில் உள்ள அரசு அதிகாரிகள் இங்கு வந்து இந்த திட்டம் செயல்படும் விதத்தை பார்வையிட்டுச் சென்று, அங்கு அதை அமல்படுத்துகிறார்கள்.

அதேபோல் நான் முதல்வன் திட்டம். இந்த திட்டங்களையெல்லாம் மக்களிடம் கொண்டு போய் நீங்கள் சேர்க்க வேண்டும்.

நம்முடைய கழகத்தைப் பற்றி, தலைவர்களை பற்றி, கழகத்தினுடைய கொள்கைகளைப் பற்றி, பரப்பப்படும் அவதூறுகளை பரப்புகிறவர்களுக்கும் பொய்ச் செய்திகளுக்கும் துணிச்சலாக உடனுக்குடன் பதில் சொல்ல வேண்டும்.

உங்களுக்கே தெரியும், சமீபத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்பு, நான் ஒரு கூட்டத்தில் பேசியதை பொய்யாக பரப்பி, நான் பேசாததையெல்லாம் பேசினேன் என்று கூறி, அதைப்பற்றி ஒட்டுமொத்த இந்தியாவுமே 10 நாள் பேசினார்கள்.

**'மன்னிப்பெல்லாம் - நான் கேட்கமாட்டேன்!'**

இப்போது என் மீது வழக்கு போட்டு இருக்கிறார்கள் கோர்ட்டில் வந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கேட்கிறார்கள். நான் பேசினால் பேசியதுதான் என்று கூறியிருக்கிறேன்.

நான் பேசியது சரிதான். மன்னிப்பெல்லாம் கேட்க முடியாது. நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள் என்று கூறி விட்டேன்.

நான் கலைஞரின் பேரன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய மகன் நான் மன்னிப்பு எல்லாம் கேட்க மாட்டேன் என்று கூறிவிட்டேன்.

கொள்கையில் உறுதியாய் இருப்பேன் என்று நான் சொல்லிவிட்டேன். ஒரு காலத்தில் ஆள்பலம் தேவை என்று சொல்வார்கள். இன்னொரு பலம், பண பலம் தேவை என்று சொல்லுவார்கள். இதெல்லாவற்றையும் விட ரொம்ப முக்கியமான பலம் என்னவென்றால், பிரச்சார பலம்.

எதுவுமே செய்யாவிட்டாலும், எல்லாமே செய்ததைப் போல் சொல்லுவார்கள்.

பா.ஜ.க. காரர்களைக் கூப்பிட்டு கேட்டால், சொல்லுவார்கள் எங்க மோடி எப்படிப்பட்டவர் தெரியுமா? எல்லாரும் பயப்படுவார்கள் மற்ற நாடுகள் எல்லாம் பயப்படும் என்பார்கள். அமெரிக்காவெல்லாம் எங்களைப் பார்த்து பயப்படுகிறது என்பார்கள். ஐரோப்பா மோடியைப் பார்த்து பயப்படுகிறது என்பார்கள். ஆனால் சைனாவைப் பற்றி ஒரு வார்த்தைகூட சொல்ல மாட்டார்கள் .ஏனென்றால், சைனா பக்கத்து நாட்டுக்காரன்.

மோடி அவர்களே பார்த்து பயப்படக்கூடிய ஆள் நம்முடைய கழகத் தலைவர் அவர்களை பார்த்துதான்.

அ.தி.மு.க. கட்சிக்காரர்களிடம் கேட்டால் தி.மு.க ஊழல் கட்சி என்பான். யோசித்துப் பாருங்கள். தி.மு.க.வில் ஒருவர் கூட குற்றம் நிருபிக்கப்பட்டு தண்டனை பெறவில்லை.

**குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டவர் அ.தி.மு.க. தலைவிதான்!**

குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை பெற்ற ஒரே தலைவர், அ.தி.மு.க.வினுடைய முன்னாள் முதல்வர், இந்நாள் தலைவர் ஒருவர் தான். அவர்களுடைய கட்சித்தலைவிதான்.

அவர்கள் பொய்யையே இவ்வளவு உரக்கப் பேசும்போது நாம் உண்மையை இன்னும் உரக்கமாகப் பேச வேண்டும். தைரியமாகப் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சிலரிடம் தன்மையாக பேச வேண்டும். சிலரிடம் ஆணித்தரமாக பேச வேண்டும். சிலரிடம் குரலை உயர்த்திப் பேச வேண்டும். சிலரிடம் குரலை தாழ்த்தி பேச வேண்டும். அந்த சூட்சுமம் உங்களுக்குத் தெரியும். ஆனால், எப்படி என்றாலும் நம்முடைய கருத்துகளை திட்டங்களை பற்றி தமிழ்நாட்டின் மூலை முடுக்கெல்லாம் நாம் பேசியே ஆக வேண்டும்.

நீட் விலக்கை வலியுறுத்தி, நம்முடைய இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி, என்று மாபெரும் கையெழுத்து இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம் இன்று காலை உங்களிடத்திலே அதற்குரிய தபால் கடிதம் எல்லாம் உங்களிடம் கொடுக்கப்பட்டிருக்கும் அதில் நீங்கள் எல்லாம் கையெழுத்து போட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்.

முதன் முதலில் நம்முடைய ஆட்சியில் தான் ஏழை எளிய மக்கள் வாழும் கிராமப்புற ஏழை மாணவர்கள் மருத்துவம் படிக்க வேண்டும் என்று நம்முடைய கலைஞர் அவர்கள்தான் நுழைவுத் தேர்வை ரத்து செய்தார்கள்.

அதன் பிறகு அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா அம்மையார் இறந்த பிறகு, பா.ஜ.கவின் அழுத்தத்தால் அடிமை அ.தி,மு.க. அரசு அந்த நீட் தேர்வை தமிழ்நாட்டுக்குள் வரவழைத்து விட்டது. இந்த ஆறு வருடங்களில் மட்டும் அரியலூர் அனிதாவில் ஆரம்பித்து, சென்னை ஜெகதீஸ்வரன் வரை 22 பேர் இறந்து போயிருக்கிறார்கள்.

இவை தற்கொலை கிடையாது. கொலை, இந்தக் கொலையை பண்ணியது ஒன்றிய பா.ஜ.க. அரசும் அதற்கு துணை போன அடிமை அ.தி.மு.க.வும்தான்.

நீட் விலக்குக்காக மிகப்பெரிய உண்ணா விரத போராட்டம் நடத்தினோம். இந்த நீட் தேர்வு தி.மு.க.வினுடைய தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. தி.மு.க இளைஞர் அணியினுடைய பிரச்சினை கிடையாது.

**'நீட்' விலக்குப் பிரச்சினை: தமிழ்நாட்டின் பிரச்சினை!**

ஒட்டுமொத்த தமிழ்நாட்டினுடைய பிரச்சினை. ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மாணவர்களுடைய பிரச்சினை. கல்வி உரிமையை நம் மாணவர்களுக்குப் பெற்றுத்தர கடிதத்திலே உங்கள் கையெழுத்தை இட்டு எங்களுக்குத் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சட்டசபையில் ஏற்கனவே நீட் விலக்கு தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பி இருக்கிறோம். ஜனாதிபதி கையெழுத்து போடாமல் இருக்கிறார்கள். 50 நாட்களில் 50 லட்சம் போஸ்ட் கார்டுகள் 50 லட்சம் கையெழுத்துகள், இளைஞர் அணி மருத்துவ அணி மாணவர் அணி என வாங்கி தருகிறோம் என்றுசொல்லி இருக்கிறோம். இந்த கையெழுத்துக்களை டிசம்பர் 17 மாநாட்டுல தலைவர் கையில ஒப்படைக்கிறோம்.

.தமிழ்நாட்டு மாணவர்களுடைய கல்வி உரிமையை மீட்டெடுப்போம் அவர்கள் நீங்கள் அத்தனை பேரும் துணை நிற்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்போது மிக மிக முக்கியமான ஒரு காலகட்டத்தில் இந்த கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய மிக முக்கியமான பொறுப்பு, உங்களுடைய கைகளில் இருக்கிறது.

தலைவர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக இந்தக் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் தான் இந்தியாவின் எதிர்காலத்தை காப்பாற்ற போகிறவர்கள்.

இந்தியாவின் ஜனநாயகம் மதச்சார்பின்மை கூட்டாட்சி மாநில சுயாட்சி எல்லாவற்றையும் நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும்.

நம்முடைய தலைவருக்கு நீங்கள் அத்தனை பேரும் தோள் கொடுக்க வேண்டும் தோள் கொடுப்பீர்கள் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்

**தேர்தல் வெற்றிக்காக பொறுப்போடு செயல்படுவீர்!**

வருகின்ற நாடாளுமன்ற கூட்டணியில் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்ற பொறுப்புணர்வோடு நீங்கள் அத்தனை பேரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திட்டங்களால் பயனடைந்த மக்களை சந்தித்து அவர்களை நம்முடைய ஆதரவாளர்களாக மாற்றி, அவர்களின் வாக்குகளில் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களிக்கும்படி செய்ய வேண்டும் என்று நான் உங்களை கேட்டுக்கொள்கின்றேன்.

வாக்காளர் பட்டியலைச் சரிபார்ப்பது தொடங்கி வாக்காளர்களை நம்மை நோக்கி ஈர்ப்பது, தேர்தல் அன்று வாக்காளர்களை வாக்குப்பதிவு மையங்களுக்கு வர வைப்பது என்று நீங்கள் தான் செயல்பட வேண்டும். இந்த நேரத்தில் ஒரு கதையை மட்டும் நான் சொல்லி விடுகிறேன்.

ஒருமுறை சாவியைப் பார்த்து, சுத்தியல் கேட்டது. “உன்னைவிட நான் வலிமையாக இருக்கிறேன். ஆனாலும், என்னால் பூட்டை திறக்கவே முடியவில்லை. மிகவும் கஷ்டப்படுகிறேன். நீ மட்டும் எப்படி எளிதாகப் பூட்டை திறக்கிறாய் என்று சாவியிடம் சுத்தியல் சொன்னது.

அதற்குச் சாவி சொன்னது. நீ என்னை விடப் பலசாலி தான். என்னை விட உருவத்தில் கூடப் பெரிய ஆள் தான். ஆனால், பூட்டை திறப்பதற்கு, அதன் தலையில் ஓங்கி அடிக்கிறாய்.

ஆனால், நானோ பூட்டின் இதயத்தைச் சென்று தொடுகிறேன். அதனால் தான் என்னால் பூட்டை எளிதாகத் திறக்க முடிகிறது என்றது சாவி.

இங்கே பூட்டு என்பது தமிழ்நாடு, சுத்தியல் என்று நான் சொன்னது பா.ஜ.க. சாவி என்றது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்.

எனவே, பா.ஜ.க. என்கிற சுத்தியலால் எவ்வளவு ஓங்கி ஓங்கி அடித்தாலும், அதனால் தமிழர்களின் இதயத்தை ஒரு நாளும் திறக்க முடியாது. காரணம், தமிழ்நாட்டின் இதயத்தைத் தொடும், திராவிட இயக்கக் கொள்கை எனும் சாவியைத் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், நம் தலைவர் முதலமைச்சர் அவர்கள் கையில் ஒப்படைத்துச் சென்றிருக்கிறார்கள்.

எப்படி 2021இல் அடிமைகளை விரட்டி ஒட்டுமொத்த தமிழ்நாட்டுக்கும் நம் தலைவர் அவர்கள், விடியலை தந்தார்களோ, அதே போல, 2024 இல் அடிமைகளையும் - அவர்களின் எஜமானர்களையும் விரட்டி அடித்து, ஒட்டு மொத்த இந்தியாவுக்கே தலைவர் அவர்கள் விடியலைத் தருவார்கள். இந்தியா கூட்டணியின் வெற்றி இந்தியாவின் வெற்றி. இனி வருகிற ஒவ்வொரு நாளும் மிகமிக முக்கியமான நாள்.

தமிழ்நாடு, தமிழ்நாடாக இருக்க, இந்தியா, இந்தியாவாகவே நிலைக்க இந்தியா கூட்டணியின் வெற்றி முக்கியம்.

இந்த வேண்டுகோளை உங்கள் முன் வைத்து, கழகத்தின் ரத்த அணுக்களாக இருக்கிற உங்களுக்கு எனது நன்றியையும் அன்பையும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்பட உள்ள

## தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கு!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

*சென்னை, நவ.7-*

*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படவுள்ள தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கத்தை (டாஸ்கான் 2023) இன்று (07.11.2023) தொடங்கி வைக்கவுள்ளார்.*

*இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 2023-2024 ஆண்டிற்கான தமிழ்நாடு பட்ஜெட்டில் விளையாட்டு அறிவியல் தொடர்பான சர்வதேச கருத்தரங்கம் நடத்தப்படும், கருத்தரங்கம் நடத்திட ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும் என்று அறிவித்தார். அதனடிப்படையில், தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கம் (டாஸ்கான் 2023), சென்னை தாஜ் கோரமண்டலில் 2023 நவம்பர் 7 மற்றும் 8 ஆகிய இரண்டு நாள்கள் நடைபெறவுள்ளது. இதில் இந்தியா, பிரிட்டன், நெதர்லாந்து, மலேசியா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து விளையாட்டு அறிவியல் தொடர்பான அறிஞர்கள் தலைமையில் சுமார் 250 பிரநிதிகள் பங்கேற்க உள்ளனர்.*

*சர்வதேச விளையாட்டு அறிவியல் கருத்தரங்கம் தமிழ்நாட்டில் நடத்துவது இதுவே முதல் முறையாகும். இம்மாநாடு விளையாட்டு விஞ்ஞானிகள், பயிற்சியாளர்கள், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வீரர்-வீராங்கனைகள் மற்றும் விளையாட்டு தொடர்பான கொள்கை வகுப்பாளர்களை ஒன்றிணைக்கிறது. இந்த சர்வதேச கருத்தரங்கத்தில் விளையாட்டு வீரர்களின் செயல்திறன் மற்றும் அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்த விளையாட்டு அறிவியலைப் பயன்படுத்துவது தொடர்பாகவும், மேலும் தமிழ்நாட்டில் விளையாட்டு அறிவியலின் எதிர்கால வளர்ச்சி தொடர்பாக விவாதிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*இந்த தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கத்தில் விளையாட்டு மருத்துவம் மற்றும் விளையாட்டு மறுவாழ்வு, விளையாட்டு நிர்வாகம் மற்றும் மேம்பாடு, ஃப்ரான்சைசஸ் லீக்ஸ் (Franchise Leagues), விளையாட்டு பயோமெக்கானிக்ஸ் (Sports Bio mechanics), விளையாட்டு உடலியல் (Sports Physiology), ஊட்டச்சத்து (Nutrition), உயர் செயல்திறன் விளையாட்டுப் பயிற்சி (High-Performance Sports Training), விளையாட்டு தொழில்நுட்பம் (Sports Technology) மற்றும் இ-விளையாட்டு (E-Sports) போன்ற சர்வதேச அளவில் விளையாட்டு துறை தொடர்பான முக்கிய தலைப்புகளை உள்ளடக்கிய குழு விவாதங்கள் பன்னாட்டு விளையாட்டு துறை நிபுணர்களால் நிறுவகிக்கப்பட உள்ளது.*

*தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கம் (டாஸ்கான் 2023) 2 நாள் நிகழ்வுகள் அனைத்தும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அதிகாரப்பூர்வ ட்விட்டர், யூடியூப் மற்றும் ஃபேஸ்புக் சமூக ஊடக பக்கத்தில் நேரலை செய்யப்படும்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. வேல்சாமி

**நவம்பர் 7 (2007)**



**இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.**

**நாமக்கல் மாவட்டம், மோகனூர் பகுதியில் முதன்முதலாக பல்வேறு கிளைக் கழகங்களை அமைத்தவர்.**

**மோகனூர் கிளைக் கழகம் அமைத்து, அதன் செயலாளர் பின்னர் மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**1996ல் நாமக்கல் தொகுதியில் கழக சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்

## சி.எச்.சேகர் தாயார் திருமதி சி.எச்.கிருஷ்ணவேணி மறைவு!

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ.7-

கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் சி.எச்.சேகர் தாயார்திருமதிசி.எச்.கிருஷ்ணவேணி மறைவு அறிந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி முன்னாள் உறுப்பினரும், கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளருமான சி.எச். சேகரின் தாயாரும், சி.எச்.அப்பல் நாயுடுவின் மனைவியுமான திருமதி. சி.எச்.கிருஷ்ணவேணி (வயது 69) அவர்கள் நேற்று (6.11.2023 - திங்கள்கிழமை) இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தி அறிந்ததும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கலில்,

**கும்மிடிப்பூண்டி சட்டமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினரும் கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் மாநிலத் துணைச் செயலாளருமான சி.எச்.சேகர் அவர்களின் தாயார் திருமதி சி.எச்.கிருஷ்ணவேணி மறைந்தார் என்று அறிந்து வேதனையடைந்தேன்.**

**தனது அன்னையை இழந்து தவிக்கும் சி.எச். சேகர் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---



திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூவிருந்தவல்லி நகர தி.மு.க. சார்பில் நீட் தேர்வினை ரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்தி நகர கழகச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை ஏற்பாட்டில் பூவிருந்தவல்லி குமரன்சாவடி பேருந்து நிலையம் அருகில் முன்னாள் அமைச்சரும் மாவட்டக் கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமையில் மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் பேருந்து பயனாளிகளிடம் நீட் தேர்வை எதிர்த்து கையெழுத்து பெறப்பட்டது. அருகில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாவட்ட துணை செயலாளர் கே.ஜெ.ரமேஷ், பொதுகுழு உறுப்பினர் காஞ்சனா சுதாகர், ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், நகர மன்ற துணை தலைவர் க.ஸ்ரீதர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே. சுரேஷ்குமார், நகர நிர்வாகிகள் எச்.தாஜுதீன், துரை பாஸ்கர், பி.ஆர்.பி.அப்பர் ஸ்டாலின், டில்லிராணி மலர் மன்னன், எஸ்.அசோக்குமார், ஜெ.சுதாகர், இரா.புண்ணியகோட்டி, ப.அன்பழகன், பி. சௌந்தரராஜன், வட்ட செயலாளர் உமா சங்கர், உள்பட மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வட்டக் கழக செயலாளர் கவுன்சிலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (06.11.2023) சோழிங்கநல்லூர் மண்டலம், நீலாங்கரையில் ரூ.418.20 கோடி மதிப்பீட்டில் கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மற்றும் ரூ.77.03 கோடி மதிப்பீட்டில் நீலாங்கரை பகுதிக்கான குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்கள். இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ்குமார், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி. ஜி.வினய், செயல் இயக்குநர் செ.சரவணன், சோழிங்கநல்லூர் மண்டலக் குழுத்தலைவர் வி.இ.மதியழகன், பெருங்குடி மண்டலக் குழுத்தலைவர் எஸ்.வி.இரவிச்சந்திரன், நிலைக்குழு தலைவர் (கல்வி, பூங்கா (ம) விளையாட்டுத்திடல்) த.விஸ்வநாதன், மாமன்ற உறுப்பினர்கள் மரு.தமிழரசி சோமு, சென்னை குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர் எம்.ஜெய்கர் ஜேசுதாஸ், தலைமைப் பொறியாளர் ஆர்.கண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.77.03 கோடியில் குடிநீர் வழங்கும் பணி! நீலாங்கரை - கொட்டிவாக்கம் - பாலவாக்கம் பகுதிகளுக்கு

# ரூ.418.20 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம்!

## அமைச்சர் கே.என்.நேரு திட்டப்பணியை தொடங்கி வைத்தார்!

சென்னை, நவ.7-

ரூ.418.20 கோடி மதிப்பீட்டில் கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டம் மற்றும் ரூ.77.03 கோடி மதிப்பீட்டில் நீலாங்கரை பகுதிக்கான குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளுக்கு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (06.11.2023) நீலாங்கரையில் அடிக்கல் நாட்டினார்.

ரூ.418.20 கோடி மதிப்பீட்டில் கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டம் மற்றும் ரூ.77.03 கோடி மதிப்பீட்டில் நீலாங்கரை பகுதிக்கான குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளுக்கு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்கே.என்.நேரு நேற்று (06.11.2023) நீலாங்கரையில் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்விற்கு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:

பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு 181, கொட்டிவாக்கம், வார்டு182, பாலவாக்கம் மற்றும் வார்டு192, நீலாங்கரை பகுதிகளுக்கான பாதாள சாக்கடை திட்டப் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கொட்டிவாக்கம், பாலவாக்கம் மற்றும் நீலாங்கரை ஆகிய பகுதிகளில் உள்ள 12,776 குடியிருப்புகளுக்கு கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்படும். இதன் மூலம், 1 இலட்சத்து 3 ஆயிரத்து 971 பொதுமக்கள் பயன் பெறுவர். இத்திட்டத்தின் கீழ், 17 கழிவு நீர் உந்துநிலையங்கள் அமைக்கப்பட்டு 139.54 கி.மீ நீளத்திற்கு பிரதான குழாய்கள் பதிக்கப்படும். மேலும், 24.66 கி.மீ நீளத்திற்கு உந்து குழாய்கள் பதிக்கப்பட்டு, 1,633 இயந்திர துளைகள் அமைக்கப்படும்.

மேலும், நீலாங்கரை பகுதிக்கான குடிநீர் வழங்கல் திட்டப் பணிகளின் மூலம் அப்பகுதியில் உள்ள 4,986 குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படுவதன் மூலம் 42 ஆயிரத்து 206 பொதுமக்கள் பயன் பெறுவர். இத்திட்டத்தின் கீழ் 51.651 கி.மீ நீளத்திற்கு குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கப்படும். மேலும், 525 மீட்டர் நீளத்திற்கு உந்து குழாய்கள் பதிக்கப்பட்டு 22 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியும், 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு கீழ்நிலை நீர்த் தேக்கத் தொட்டியும் அமைக்கப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.398 கோடி மதிப்பீட்டில், மணலி, திருவொற்றியூர், மாதவரம், வளசரவாக்கம், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் மண்டலங்களைச் சார்ந்த பகுதிகள் பயன் பெறும் வகையிலான குடிநீர் திட்டப் பணிகளை தொடங்கி வைத்துள்ளார். இதன் மூலம், 76 ஆயிரத்து 749 பொதுமக்கள் பயன் பெற்று வருகின்றனர். மேலும், பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.698.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள்/கழிவுநீர் கட்டமைப்புகள் மேம்படுத்தும் பணிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 2 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் பயன் பெற்று வருகின்றனர்.

தற்பொழுது ரூ.5,239.20 கோடி மதிப்பீட்டில் பல்வேறு குடிநீர் திட்டப் பணிகள் (150 எம்.எல்.டி மற்றும் 400 எம்.எல்.டி உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையங்கள் உள்பட) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் 36.57 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள். மேலும், ரூ.799.32 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டங்களின் கீழ் பாதாள சாக்கடை திட்டப் பணிகள்/கழிவுநீர் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் நிறைவுற்ற பின்னர் 7 இலட்சம் மக்கள் பயன் பெறுவார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு நாளொன்றுக்கு 1000 எம்.எல்.டி வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நாளொன்றுக்கு 960 எம்.எல்.டி. கழிவுநீரை சுத்திகரிக்கும் 16 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் மேற்கொள்வதற்கான உட்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 650 எம்.எல்.டி கழிவுநீர் தினந்தோறும் சுத்திகரிக்கப்பட்டு தொழிற்சாலைகளின் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், நெம்மேலியில் ரூ.1516 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் பணிகள் 95 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது. விரைவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். இந்நிலையத்திலிருந்து பெறப்படும் குடிநீர் மூலம் வேளச்சேரி, உள்ளகரம்புழுதிவாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர் உள்ளிட்ட 12 பகுதிகளில் உள்ள 9 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

மேலும், இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ள அனைத்து பணிகளும், நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்கப்பெற்று பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் வசதி, சாலைகள் மேம்பாடு, மழைநீர் வடிகால் பணிகள் போன்ற பல்வேறு பணிகள் எவ்வித தொய்வுமின்றி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வெள்ளத் தடுப்புப் பணிகளை மேற்கொள்வதோடு மட்டுமல்லாமல் சென்னையைச் சுற்றியுள்ள பல்வேறு வடிநிலப் பகுதிகளை மேம்படுத்துவதற்காக பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நீர்வளத்துறை ஆகியவற்றின் மூலம் மேற்கொள்வதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் சுமார் 4 ஆயிரம் கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.


பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 876 கி.மீ தூரத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், 2,000 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் போடப்பட்டுள்ளன. மேலும், 3000க்கும் மேற்பட்ட சாலைப்பணிகள் விரைவில் முடிக்கப்பட உள்ளது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு. மகேஷ்குமார், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், செயல் இயக்குநர் செ.சரவணன், சோழிங்கநல்லூர் மண்டலக் குழுத்தலைவர் வி.இ.மதியழகன், பெருங்குடி மண்டலக் குழுத்தலைவர் எஸ்.வி.இரவிச்சந்திரன், நிலைக்குழு தலைவர் (கல்வி, பூங்கா (ம) விளையாட்டுத் திடல் த.விஸ்வநாதன், மாமன்ற உறுப்பினர் மரு.தமிழரசி சோமு, சென்னை குடிநீர் வாரிய பொறியியல் இயக்குநர் எம்.ஜெய்கர் ஜேசுதாஸ், தலைமைப் பொறியாளர் ஆர்.கண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### முனைவர் மா. நன்னன்

### நவம்பர் 7 (2017)



தந்தை பெரியார், புரட்சிக் கவிஞர் பாவேந்தர், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பேராசிரியர் அன்பழகனார் ஆகியோரோடு நட்புக் கொண்டு, பகுத்தறிவுக் கொள்கைப் பாதையில் தொடர்ந்து பயணித்தவர்.

தொடக்கப்பள்ளி முதல் படிப்படியாக உழைப்பால் உயர்ந்து, கல்லூரிப் பேராசிரியர், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் எனப் பணியாற்றி பல பெருமைகளைப் பெற்றவர்.

திராவிட இயக்கம், சுயமரியாதை, தன்மானம், பகுத்தறிவு, தமிழ் மொழி ஆகியவற்றில் பற்றுக்கொண்டு வாழ்ந்தவர். இளைஞர்களுக்கு திராவிட இயக்க உணர்வுகளை ஊட்டி தமிழ்த் தொண்டு ஆற்றி வந்தவர். கழகத்தின் தொடக்க காலத்திலிருந்தே உறுப்பினராக இருந்தவர். கழக தலைமை இலக்கிய அணியில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது, கழக இளைஞர் அணி சார்பில் தமிழகம் முழுவதும் நடைபெற்ற ஒவ்வொரு "பயிற்சி பாசறை" வகுப்புகளில் பங்கேற்று சமூகநீதி, திராவிட இயக்கம், சுயமரியாதை பற்றி கழக இளைஞர் அணியினருக்கு விளக்கியவர்.

1991–ல் நடைபெற்ற முப்பெரும் விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருக்கரங்களால் "பெரியார் விருது" பெற்றவர். அத்துடன் இவரது தமிழ்ப் பணிக்காக "தமிழ்ச் செம்மல் விருது", "திரு.வி.க. விருது" ஆகிய விருதுகளை பெற்றவர்.

தம் வாழ்நாளில் பெரும் பகுதியை தமிழ்மொழி கற்பித்தல், வளர்த்தல், பிழை திருத்தல், செம்மைப் படுத்துதல் என்ற முறையில் பணியாற்றி, பகுத்தறிவு நெறி தழுவி வாழ்வாங்கு வாழ்ந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்ட "உடன்பிறப்புகளாய் இணைவோம்"என்ற மாபெரும் முன்னெடுப்புடன் "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவள விழா ஆண்டு" புதிய உறுப்பினர் சேர்த்தல் பணிகள் முடிந்து

# புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கல்!

## தலைமைக் கழக அறிவிப்பு

இந்தியவரலாற்றில் ஜனநாயகமுறைப்படி உறுப்பினர் சேர்த்தலும் புதுப்பித்தலுமான பணிகள் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வார்டு கிளைகள், ஊராட்சி, பேரூர், ஒன்றிய, நகர, பகுதி, நகரிய, மாவட்ட, மாநகர் மாவட்ட, மாநிலஅமைப்புகள், தலைமைக் கழகம் ஆகியவற்றுக்கு தேர்தல் நடத்தி, நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்து அமைப்புக்களை செயற்படுத்தும் கட்சி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நாடறியும். ஒருஇலட்சத்து 11 ஆயிரத்து 140 வார்டு கழகங்களையும், 1 கோடியே 10 இலட்சத்திற்கு மேல் உறுப்பினர்களையும் கொண்ட தி.மு. கழகம்.

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் அரை நூற்றாண்டு காலம் கட்டிகாத்த நம் கழகத்தை மேலும் வலிமைப்படுத்த, மேலும் ஒருகோடி உறுப்பினர்கள் சேர்க்க "உடன் பிறப்புகளாய் இணைவோம்" என்ற மாபெரும் முன்னெடுப்பு கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட உள்ளது. ஏற்கனவே, ஒரு கோடி உறுப்பினர்களைக் கொண்டபேரியக்கத்தில், புதிதாக மேலும் ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்கும் பெருமுயற்சியை ஏப்ரல் 3 ஆம் தேதியன்று தொடங்கி, ஜூன் 3, 2023 தலைவர் கலைஞர் நூற்றாண்டு தொடங்குவதற்குள் இப்பணியை நிறைவேற்றுவதென இக்கூட்டம் நிறைவேற்றிடும் வகையில், துண்டறிக்கைகள் மூலமாகவும், திண்ணைப் பிரச்சாரங்கள் மூலமாகவும், முக்கிய இடங்களில் முகாம்கள் அமைப்பது மூலமாகவும், வீடு தோறும் தேடிச் சென்றும் புதியஉறுப்பினர்களைச் கழகத்தில் இணைத்திடுவோம்." ஏன கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், கடந்த 22.3.2023 அன்று நடைபெற்ற 'தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில்' நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி,

2023 ஏப்ரல் 3ஆம் தேதிமுதல் 2023 ஜூன் 3ஆம் தேதிவரை, "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டுமற்றும் கழகபவளவிழா ஆண்டு" உறுப்பினர்களை சேர்த்தல்பணிகளை "உடன்பிறப்புகளாய் இணைவோம்" என்ற மாபெரும் முன்னெடுப்புடன் ஒருகோடி புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கழகத் தோழர்கள் மற்றும் நிர்வாகிகளும் மேற்குறிப்பிட்ட தேதி முதல் உறுப்பினர்களை சேர்க்கும் பணியினைத் தொடங்கி, உடனுக்குடன் படிவங்களை தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்தனர்.

அவ்வாறு தலைமைக் கழகத்தில் வரப் பெற்றபடிவங்கள் முறைப்படி பரிசீலனை செய்யப்பட்டு, புதியதாக சேர்க்கப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை தலைமைக் கழகம் தயாரித்துள்ளது.

இப்புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட **இரசீது எண். 1 முதல் 1000 வரை**எண் கொண்ட இரசீதுகள் வைத்திருப்போர் கீழே குறிப்பிட்டுள்ள மாவட்டங்களில் இருக்குமேயானால், அந்த ஒரிஜினல் இரசீதையும், தங்களிடம் உள்ள உறுப்பினர் சேர்த்தல் பட்டியலையும், **2023 நவம்பர் 7ஆம் தேதிமுதல் 10ஆம் தேதிக்குள்**,தலைமைக் கழகத்திற்கு நேரில்வந்து, இரசீது எண்ணையும், பட்டியலையும் சரிபார்த்து பெற்றுச் செல்லவேண்டுமெனகேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புதிய உறுப்பினர்களை சேர்த்து பணம் செலுத்தி இரசீது பெற்றவர்கள், நேரில் வந்து உறுப்பினர் சீட்டுகள் பெறமுடியாத நிலை ஏற்படு மாயின், அவர்களால் நியமித்து அனுப்பப்படும் முகவரிடம், தாங்கள் கைப்பட எழுதிய பரிந்துரை கடிதமும், ஒரிஜினல் இரசீதையும் கொடுத்து புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம். இரசீதின் ஜெராக்ஸ் நகல் ஏற்றுக் கொள்ளப்படாது.

**புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை, தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொண்டவர்கள், உறுப்பினர் உரிமைச் சீட்டுக்களை உரியவரிடம் ஒப்படைத்து, அதற்குரிய அத்தாட்சி கடிதத்தை பெற்று, அக்கடிதத்தினை ஒருவாரகாலத்திற்குள் தலைமைக் கழகத்திற்கு கண்டிப்பாக அனுப்பிவைத்திட வேண்டும்.**

### உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கப்படும் மாவட்டங்கள் தலைமைக் கழக இரசீது எண். 1 முதல் 1000 வரை

1) சென்னை வடக்கு
2) சென்னை வடகிழக்கு
3) சென்னை கிழக்கு
4) சென்னை மேற்கு
5) சென்னை தென்மேற்கு
6) சென்னை தெற்கு
7) திருவள்ளூர் கிழக்கு
8) திருவள்ளூர் மத்திய
9) திருவள்ளூர் மேற்கு
10) காஞ்சிபுரம் வடக்கு
11) காஞ்சிபுரம் தெற்கு
12) வேலூர்
13) திருப்பத்தூர்
14) விழுப்புரம் வடக்கு
15) கள்ளக்குறிச்சி தெற்கு
16) கடலூர் கிழக்கு
17) தஞ்சை மத்திய
18) தஞ்சை தெற்கு
19) புதுக்கோட்டை வடக்கு
20) சேலம் கிழக்கு
21) சேலம் மத்திய
22) நாமக்கல் மேற்கு
23) கோவை வடக்கு
24) கோவை தெற்கு
25) கோவை மாநகர்
26) திருப்பூர் தெற்கு
27) ஈரோடு வடக்கு
28) மது ரவடக்கு
29) மதுரை தெற்கு
30) தேனி தெற்கு
31) தென்காசி தெற்கு

**குறிப்பு :** தலைமைக் கழக இரசீது எண்.1000க்கு மேல்உள்ள இரசீதுகளுக்கான உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கும் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



மீன்வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று 06.11.2023 திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வளாகத்தில் யானை நினைவு மண்டபம் மற்றும் புதிய பசுமடம் கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டினர். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன் மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் இரா.அருள் முருகன், அறங்காவலர் குழு உறுப்பினர்கள், இணை ஆணையர்கள் எம்.கார்த்திக், எம்.அன்புமணி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

அமைச்சர் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன் பங்கேற்பு! திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி

# திருக்கோயிலில் கந்தசஷ்டி பெருவிழா முன்னேற்பாடு பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, நவ.7

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மீன்வளம்மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் நேற்று (6.11.2023) திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயி லுக்கு வருகை தந்து, இந்தாண்டு நடைபெறவுள்ள கந்த சஷ்டித் பெருவிழா மற்றும் சூர சம்ஹார நிகழ்ச்சிக் கான முன்னேற்பாடு பணிகள் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டதோடு, திருக்கோயில் வளாகத்தில் ரூ.49.50 லட்சம் மதிப்பீட்டில் யானை நினைவு மண்டபம் மற்றும் ரூ. 97 லட்சம் மதிப்பீட்டில் புதிய பசுமடம் கட்டுவதற்கான பணிகளுக்கு அடிக்கல் நாட்டினர்.

அதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் ரூ.20.66 கோடி மதிப்பீட்டில் 123 திருக்கோயில்களில் அமைந்துள்ள 127 பசுமடங்களை மேம்படுத்தி பாதுகாத்திட பல்வேறு முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதோடு மட்டுமல்லாமல் புதிதாக இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு கோயில்பதாகை, திருவரங்கம், திருவண்ணாமலை, திருச்செந்தூர் ஆகிய 4 இடங்களில் ரூ.19 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக புதிய பசு மடங்களை கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு, இன்றைய தினம் திருச்செந்தூரில் ரூ.97 லட்சம் மதிப்பீட்டிலான புதிய பசுமடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இறைவனுக்கு நிகராக பக்தர்களால் வழிபட்டு வந்த திருக்கோயில் யானைகள் இறந்த பிறகு அதன் நினைவாக 11 இடங்களில் யானை மணி மண்டபம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. தற்போது ரூ.5.54 கோடி மதிப்பீட்டில் யானை மணி மண்டபங்கள் கட்டப்பட்டு வருகின்றன. திருச்செந்தூர் திருக்கோயி லில் இன்றைய தினம் யானை மணிமண்டபம் கட்டுவதற்கு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.206 கோடி மதிப்பீட்டில் எச்.சி.எல் நிறுவனத்தின் மூலம் 20 திருப்பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அதில் 35 சதவீத பணிகள் இதுவரையில் முடிவுற்றிருக்கின்றன. மேலும், திருக்கோயில் நிதியின் மூலம் ரூ.100 கோடி மதிப்பீட்டில் 18 திருப்பணிகளும் தொடங்கப்பட உள்ளன. இத்திருக்கோயிலில் நடைபெறும் கந்த சஷ்டி பெருவிழாவின் சூரசம்ஹார நிகழ்விற்கு லட்சக்கணக்கான மக்கள் வருகை தந்து வழிபட்டு செல்வதற்கு ஏற்ற வகையில் அனைத்து வசதிகளையும் கடந்தாண்டு திராவிட மாடல் ஆட்சி செய்து கொடுத்தது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வந்தாலும் கடந்தாண்டை போலவே பக்தர்களுக்கு எந்த விதமான அசௌகரிமும் இல்லாமல் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து தர வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தர விட்டுள்ளார்.

கந்த சஷ்டி விரதம் தொடங்கும் முதல் ஐந்து நாட்களுக்கு தினம் ஒரு லட்சம் பக்தர்களும், சூரசம்ஹார தினத்தன்று சுமார் ஐந்து லட்சம் பக்தர்களும், திருக்கல்யா ணத்திற்கு சுமார் இரண்டு லட்சம் பக்தர்களும் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒட்டுமொத்தமாக திருவிழா காலங்களில் சுமார் 20 லட்சம் பக்தர்கள் கூடுகின்ற நிலை இருக்கும் என்பதால் பக்தர்களுடைய தேவைக்கேற்க 16 இடங்களில் சுமார் 1,250 வாகனங்கள் நிறுத்தும் அளவிற்கு பார்க்கிங் வசதி ஏற்படுத்தப்பட உள்ளது. 12 இடங்களில் கண்காணிப்பு கோபுரங்களும், ஏற்கனவே இருக்கின்ற சிசிடிவி கேமராக்கள் மட்டுமின்றி 100 இடங்களில் புதிதாக சிசிடிவி கேமராக்கள் அமைக்கப்பட உள்ளன. விழா நாட்களில் 2,500 க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

அதேபோல் ஐந்து இடங்களில் ஆம்புலன்ஸ் வசதிகளும், முக்கிய இடங்களில் மருத்துவ முகாம்களும் நடத்தப்படும். தினந்தோறும் 400 தூய்மை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு குப்பைகள் உடனுக்குடன் அகற்றப்பட்டு சுகாதாரம் பேணி காக்கப்படும். திருக்கோயில் சார்ந்த பாதுகாப்பு பணியில் 180 நபர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். தற்காலிக பேருந்து நிலையங்கள் மூன்று இடங்களில் ஏற்படுத்த உள்ளோம்.

மேலும், 21 இடங்களில் கொட்டகை அமைக்கப்பட்டு, 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் தங்குகின்ற வகையில் வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். அங்கு அடிப்படை வசதிகளான கழிப்பிட வசதி, குடிநீர் வசதி போன்றவை முழுமையாக நிறைவேற்றி தரப்படும். பக்தர்களுக்கு இறைவன் அருள் கிடைக்கவும், விரைவாக தரிசனம் மேற்கொள்ளவும், தேவையான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம், இந்து சமய அறநிலையத்துறை, காவல்துறை, வருவாய்த்துறை, தீயணைப்புத்துறை மற்றும் மருத்துவத் துறை போன்ற அனைத்து அரசு துறைகளும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளும். இப்பணிகளை சிறப்பாக நிறைவேற் றிட மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. ஆகவே இந்தாண்டு கந்த சஷ்டி பெருவிழா கடந்தாண்டை போல சிறந்த முறையில் நடைபெறும்.

யாத்திரி நிவாஸ் பணிகளை கடந்த ஆட்சி காலத்தில் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று கட்டி விட்டு சென்று விட்டார்கள். அதற்கு தேவையான பர்னிச்சர்கள் வாங்குவதற்கு கூட நிதி ஒதுக்கவில்லை. சுற்றுச்சுவர் அமைக்க கூட நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டும் பணிகள் ரூ.19 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் 45 நாட்களுக்குள் பணிகள் முடிக்கப்பட்டு பக்தர்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும்.

நமக்கு ஒரு சில நாட்களில் உடல் உபாதைகள் ஏற்படுகின்ற போது கசப்பான மருந்தை உட்கொண்டு தான் ஆக வேண்டும். அப்போதுதான் ஆரோக்கியமாக இருப்போம். அதுபோல தற்போது திருக்கோயிலில் நடைபெறுகின்ற கட்டுமானப் பணிகளால் இன்னும் 50 ஆண்டு காலத்திற்கு பக்தர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் கொண்ட திருக்கோயிலாக அமையும் என்பதால், தற்போது ஏற்படும் சிறு சங்கடங்களை பக்தர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும். இருப்பினும் 21 இடங்களில் தற்காலிக ஷெட்டுகள் அமைக்கப்பட்டு முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் தங்குவதற்கான வசதியும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, பக்தர்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாது.

சஷ்யின்போது திருக்கோயிலில் ஏற்கனவே என்ன நடைமுறை இருக்கின்றதோ அந்த நடைமுறைதான் தற்போது தொடரும். புதிதாக எந்த நடைமுறையும் சஷ்டிக்கு முன்பாக கொண்டு வரப்பட மாட்டாது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பக்தர்கள் விரை வாக, எளிதாக சுவாமி தரிசனம் செய்வதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் இந்து சமய அறநிலையத் துறை மேற்கொண்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரும் அனைத்து ஏற்பாடுகளையும் தொடர்ந்து கண்காணித்து வருகிறார். பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளை கூடுதலாக செய்துதர மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்திருக்கின்றது. திருக்கோயிலில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகள் யாருக்கும் எந்த தீங்கும் ஏற்படாமல் முழுமையாக சிறந்த முறையில் நிறைவுறும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், மாவட்ட ஆட்சித்தலைவர் கோ.லட்சுமிபதி, திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் இரா.அருள் முருகன், அறங்காவலர் குழு உறுப்பினர்கள், இணை ஆணையர்கள் எம்.கார்த்திக், எம்.அன்புமணி மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

பெண்கள் முன்னேற்றத்திற்காகவே இடஒதுக்கீடு கொண்டு வருகிறோம் என ஒன்றிய அரசு மார்தட்டினாலும்

# இழுவை இடஒதுக்கீடாகவே இருக்க வாய்ப்புகள் அதிகம்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, நவ. 7-

பெண்கள் முன்னேற்றத் திற்காகவே இடஒதுக்கீடு கொண்டு வருகிறோம் என ஒன்றிய அரசு மார்தட்டினாலும் மகளிர் இடஒதுக்கீடு இழுவை இடஒதுக்கீடாகவே இருக்க வாய்ப்புகள் அதிகம் என 'தினகரன்' நாளேடு தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-



தினகரன்

நவம்பர் 6, 2023 திங்கட்கிழமை

இழுவை இட ஒதுக்கீடு

மக்களவையிலும், மாநில சட்டசபைகளிலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு என்பது இந்தியாவை பொறுத்த வரை நீண்ட நெடிய கனவு என்றுதான் சொல்ல வேண்டும். அந்தக் கனவை நனவாக்கிட பல்வேறு அரசியல் சாயங்கள் அவ்வப்போது பூசப்பட்டு வந்திருக்கின்றன. அதுமட்டுமின்றி, தேர்தல் காலங்களில் எல்லாம், தாய்மார்களின் ஓட்டுக்களைப் பெற்றிட பல்வேறு வாக்குறுதிகளை அளிப்பதும் வழக்கமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் விட, பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு என்பது அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கக்கூடிய ஒன்று. 1996ம் ஆண்டு கலைஞர்

மக்களவையிலும், மாநில சட்டசபைகளிலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு என்பது இந்தியாவை பொறுத்தவரை நீண்ட நெடிய கனவு என்றுதான் சொல்ல வேண்டும். அந்தக் கனவை நனவாக்கிட பல்வேறு அரசியல் சாயங்கள் அவ்வப்போது பூசப்பட்டு வந்திருக்கின்றன. அதுமட்டுமின்றி, தேர்தல் காலங்களில் எல்லாம், தாய்மார்களின் ஓட்டுக்களைப் பெற்றிட பல்வேறு வாக்குறுதிகளை அளிப்பதும் வழக்கமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் விட, பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு என்பது அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கக் கூடிய ஒன்று. 1996ம் ஆண்டு கலைஞர் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

இந்நிலையில், நாடு முழுவதும் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்க கடந்த செப்டம்பர் மாதம் பெண்கள் இடஒதுக்கீடு மசோதா மக்களவை, மாநிலங்களவையில் நிறை வேற்றப்பட்டு, ஜனாதிபதி ஒப்புதலும் பெறப்பட்டுவிட்டது. ஆனால், இது நடைமுறைக்கு வர வேண்டுமானால், தொகுதி மறு வரையறை செய்ய வேண்டும். அதற்கும் முன்பாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த வேண்டும். அதுவும் 2024 தேர்தலுக்கு பிறகுதான் மக்கள்தொகை, மறுவரையறை என பல ஆண்டுகள் இழுத்துக் கொண்டே போகும் நிலை தான் காணப்படுகிறது. எனவே வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கிட இப்போதைக்கு சாத்தியமில்லை என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது.

இந்த நிலையில் காங்கிரஸ் மூத்த தலைவர்களுள் ஒருவரான ஜெயா தாக்கூர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த புதிய மனுவில், பெண்களுக்கான இட ஒதுக்கீட்டை வரும் தேர்தலுக்கு முன்பாக அமல்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இந்த மனுவை ஒத்தி வைத்த உச்ச நீதிமன்றம், மகளிர் இட ஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்தக் கோரி மத்திய அரசை உத்தரவிடுவதற்கு சாத்தியமில்லை எனவும், மகளிர் இட ஒதுக்கீடுக்கான இடங்கள், உள்ஒதுக்கீடு ஆகியவற்றை முடிவு செய்த பின்னர் தான் அடுத்த கட்டத்தை நோக்கி நகர முடியும் எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பெண்களுக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு எப்போது கிடைக்கும் என்ற கேள்விக்கு அரசியல் கட்சிகளிடம் தெளிவான பதில் இல்லை. அதிலும் பல வடமாநிலங்களில் மகளிர் இட ஒதுக்கீடு என்பது பல்வேறு அரசியல் கட்சியினருக்கு வேப்பங்காயாக உள்ளதாக தெரிகிறது. எனவே, அவர்கள் முடிந்த வரை இதை தள்ளி போடவே முயற்சி செய்யவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. இந்தியாவில் 2011ம் ஆண்டுக்கு பின்னர் இன்னமும் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடக்கவில்லை. கடந்த 2021ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்த முடியாததற்கு கொரோனா பரவல் காரணமாகக் கூறப்பட்டது.

வரும் ஆண்டுகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பு முதலில் நடத்தப்பட வேண்டும். அதன் பின்னர் தொகுதி வரையறைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், தொகுதி வரையறை செய்யும் போது அதன் இறுதி அறிக்கையை வழங்க அதற்கான ஆணையம் 3 முதல் 4 ஆண்டுகள் வரை எடுத்து கொள்ளும். எனவே பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு செயல்பாட்டுக்கு வர குறைந்த பட்சம் 10 ஆண்டுகள் வரை ஆகலாம் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். பெண்கள் முன்னேற்றத்திற்காக நாங்கள் இடஒதுக்கீடு கொண்டு வருகிறோம் என ஒன்றிய அரசு மார்தட்டி கொண்டாலும், அது இழுவை இடஒதுக்கீடாகவே இருக்க வாய்ப்புகள் அதிகமுள்ளன.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டி.லோகேஷ் தலைமை! திரு.வி.க. நகர் தெற்கு - 75 'அ' வட்டம் -

# பி.உதயகுமார் தந்தை - மறைந்த பி.பாலகிருஷ்ணன் திருவுருவப் படம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்து அஞ்சலி!

சென்னை, நவ. 7-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. திரு.வி.க. நகர் தெற்கு பகுதி 75அ வட்ட கழக செயல்வீரர் பி.உதயகுமார் தந்தை பி.பாலகிருஷ்ணன் அவர்கள் 16.10.2023 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் நினைவு அஞ்சலி படத்திறப்பு நிகழ்வு நெ.98, 7வது தெரு, எஸ்.எஸ். புரம், "A" பிளாக், ஓட்டேரி, சென்னை 12ல் 28.10.2023 சனிக்கிழமை மாலை 7 மணியளவில் நடைபெற்றது.

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.லோகேஷ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெரு நகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அன்னாரின் திருவுருவப் படத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பி.சுகுமார், வனஜா சண்முகம், வி.க.வெங்கடேசன், எல்.சுப்ரமணி, இரா.தனசேகரன், ஏ.ஜி. எஸ்.கோல்டு ஜி, பா.பி.தாஸ், புரசை.சீனிவாசன், கோ.கருணாகரன், எம்.மாசிலாமணி, குப்புசாமி, சங்கர், ஏ.ராமு, சக்திவேல், ஏ.சோமு, ஜி.பிரேம், வேலாயுதம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வரத. கோபாலகிருஷ்ணன்

### நவம்பர் 7 (2001)



திருவாரூர் மாவட்டக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியப் பெருந்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

நன்னிலம் பகுதியில் கழகம் வளர்க்க பாடுபட்டவர். வாழ்நாள் முழுவதும் இயக்கப் பணிகளுக்காக தன்னையே அர்ப்பணித்தவர்.

நெருக்கடி நிலையின்போது ஓராண்டு சிறைவாசம். மேலும், கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திருவொற்றியூர் தொகுதி

# கத்திவாக்கம் பகுதியில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

## இ.ரமேஷ்-எஸ்.சுரேஷ் பங்கேற்பு!

சென்னை, நவ.7

மாநில மீனவர் அணி துணை தலைவர் திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஆலோசனைபடி திருவெற்றியூர் தொகுதிக்கு உட்பட்ட எண்ணூர் கத்திவாக்கம் 2வது வார்டு நேரு நகர் அரசு நடுநிலைப்பள்ளியில் புதிய வாக்காளர் சேர்த்தல் பெயர் நிக்கம் செய்தல் பணியில் திருவொற்றியூர் மேற்கு பகுதி முன்னாள் துணை செயலாளர் இ.ரமேஷ், தலைமையில், எஸ்.சுரேஷ் மாவட்ட வர்த்தகர் அணி துணை தலைவர் சென்னை வட கிழக்கு மாவட்டம், முன்னாள் வட்ட துணை செயலாளர் ஜெ.திலகர், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் த.தேசப்பன் பகுதி பிரதிநிதி பா.ரமேஷ் 2வது வட்ட செயல் வீரர் ஆர்.சுரேஷ் மற்றும் கழக உடன் பிறப்புகள் கழகப் பணியில் ஈடுபட்டனர்.

முன்னாள் வட்டச் செயலாளர் வி.தியாகராஜன் மகன்

# 130வது வட்ட பகுதிப் பிரதிநிதி டி.மூர்த்தி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



சென்னை, நவ. 7

சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர்நகர் மேற்கு பகுதி, 130 வது வட்டம், அழகிரி நகர் பிரதான சாலையை சேர்ந்த முன்னாள் வட்டக் கழகச் செயலாளர் வி.தியாகராஜன் மகனும், 130 வது வட்டக் கழகப் பகுதிப் பிரதிநிதி டி. மூர்த்தி நேற்று (6.11.2023 திங்கட்கிழமை) மதியம் 1.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம். அன்னாரின் மறைவு செய்தி அறிந்தும் கழக நிர்வாகிகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (7.11.2023 செவ்வாய்கிழமை) மாலை 4.30 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து புறப்பட்டு ஏ.வி.எம். இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.

இ.கண்ணப்பன் தலைமை! அறிவழகி பாலகிருஷ்ணன் முன்னிலை!

# மாதவரம் வடக்கு 16வது வட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

## பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் பங்கேற்பு!

சென்னை, நவ.7

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 16 வது வட்டத்தில் நடைபெற்ற வாக்காளர் சரிபார்த்தல் முகாமில் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

முகாமில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு உதவி செய்யும் வகையில் மாதவரம் 16 வது வட்ட தி.மு.க.வினர் டேபிள் சேர் அமைத்து மனுக்களை பூர்த்தி செய்யும் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர்.

வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் தலைமையில் மாவட்ட துணைச் செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், கவுன்சிலர் ஆ.ராஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த முகாம்களில் மாதவரம் வடக்கு பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு வாக்காளர் சேர்த்தல் நீக்கல் திருத்தல் இடமாற்றம் ஆகிய பணிகளில் ஈடுபட்டிருக்கும் கழகத்தினரை பணி விரைந்து முடிக்க துரிதப் படுத்தினார்.

16 வது வட்டத்திற்குட்பட்ட சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி ஆண்டாள் குப்பத்தில் பாகம் 1, பாகம் 2, பாகம் 3 ஆகிய பாகங்களுக்கான வாக்காளர் சேர்த்தல் மற்றும் நீக்கல் பணிகள் நடைபெற்றது.

அதேபோல சடையங்குப்பம் பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் பாகம் 4, 5 ஆகிய பாகங்களுக்கும் பேஸ் 1 பகுதியில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் 6 பாகத்திற்கும் மணலி புதுநகர் பகுதியில் அமைந்துள்ள விவேகானந்தா வித்யாலயாவில் பாகம் 7, 8, 9, 10, 11, 12 ஆகிய பாகங்களுக்குமான வாக்காளர் சேர்த்தல், நீக்கல் முகாம்கள் நடைபெற்றது.

முகாம்களில் கே.சிவ சங்கரன், நா.மோகன்குமார், நாகூரார், பா.சந்திரன், எஸ்.கருணாகரன், இ.அருள், இ. வெங்கடேசன், என்.பரசுராமன், ஆர்.குமரவேல், புவனேஸ்வரி, மகேஷ்குமார், ராஜ்மோகன், மாரி, கே.ஏ. ரமேஷ், ஆர்.முத்தையா, உத்துராஜ், வெள்ளைச்சாமி, ராஜி, மகேஷ்குமார், ரிஷி, கிருபாகரன், லோகநாதன், சடையங்குப்பம் நைனியப்பன், ராஜி, எலந்தனூர் சிவப்பிரகாஷ், முனுசாமி, டோமினிக், பிரான்சிஸ், தேவராஜ், செமின் எடிசன், உதயா, மணிகண்டன், குளக்கரை மஞ்சு நாதன், பார்கவி, தமிழரசன் மற்றும் நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாதவரம் வடக்கு பகுதி, 16 வது வட்டத்தில் நடைபெற்ற வாக்காளர் சரிபார்த்தல் முகாமில் பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்துகொண்டு பணியை துரிதப்படுத்தினார். வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் தலைமையில் மாவட்ட துணை செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், கவுன்சிலர் ஆ.ராஜேந்திரன், கே.சிவசங்கரன், நா.மோகன்குமார், நாகூரார், பா.சந்திரன், எஸ்.கருணாகரன், இ.அருள், இ.வெங்கடேசன், என்.பரசுராமன், ஆர்.குமரவேல், புவனேஸ்வரி, மகேஷ்குமார், கே.ஏ.ரமேஷ், மாரி, ராஜ்மோகன், முத்தையா உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் பாகமுகவர்கள் கலந்து கொண்டனர்.

## மலையகத் தமிழர்களின் 200-வது ஆண்டு விழாவில் முதல்வர் சார்பில் பங்கேற்க - அனுமதியை தாமதப்படுத்தி

# எனது இலங்கை பயணத்தை தடுத்தது ஒன்றிய அரசு!

## நிதியமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்!

விருதுநகர், நவ.7-

**இலங்கையில் மலையகத் தமிழர்களின் 200 ஆம் ஆண்டு விழாவில் முதல்வர் அவர்கள் பங்கேற்க இயலாத சூழ்நிலையில் அவர் சார்பில் நான் பயணத் திட்டம் வகுத்து ஒன்றிய அரசின் அனுமதிக்குக் காத்திருந்தும் உரிய நேரத்தில் எனக்கு அனுமதி தராமல் பயணத்தை ஒன்றிய அரசு தடுத்துவிட்டது என நிதியமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம் அளித்துள்ளார்.**

நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று (6.11.2023) விருதுநகரில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :

இலங்கையில் மலையகத் தமிழர்கள் அங்கே குடியேறி தோட்டப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட 200வது ஆண்டு விழாவிற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அழைக்கப்பட்டு அவர் செல்ல இயலாத நிலையில் அந்த விழாவிற்கு நான் செல்வதாக முதலமைச்சர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்ட நிலையில், நானும் அங்கே செல்ல இயலாத நிலையில் கடந்த இரு நாட்களாக பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் பல்வேறு செய்திகள் உலா வந்து கொண்டிருக்கக் கூடிய நிலையில் அதுகுறித்த விளக்கத்தினை அரசினுடைய சார்பில் நான் அளிக்க விரும்புகிறேன்.

### மலையகத் தமிழர்கள் சார்பில் முதல்வருக்கு வந்த அழைப்பு!

நான் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல, கடந்த 2ஆம் தேதி இலங்கையின் தலைநகரான கொழும்புவில் மலையகத் தமிழர்கள் அங்கே தோட்டப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு தங்களுடைய வாழ்வியலை இலங்கையின் மலை அடுக்குகளில் வாழத் தொடங்கி, அங்கே இருக்கக்கூடிய தோட்டங்களில் தங்களுடைய பணியினை, உழைப்பினை, இரத்தத்தைச் சிந்தி, வியர்வையைச் சிந்தி, அவர்கள் உழைத்த உழைப்பு அங்கே தொடங்கிய நாட்களை குறிக்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், அதற்கு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்றும் முறையான அழைப்பு தமிழ் நாடு அரசிற்கு அனுப்பப்பட்டது.



முதலமைச்சர் அவர்கள் அந்த நிகழ்வில் கலந்து கொள்ள இயலாத நிலையில், அவருக்குப் பதிலாக தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாக என்னை அந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு அவர்கள் பணித்திருந்தார்கள்.

அதனையொட்டி அந்த விழாவில் நான் கலந்து கொள்வதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யக் கூடிய வகையில், நான் இலங்கை செல்வதற்கான அந்த ஆயத்தப் பணிகளை இலங்கையில் மேற்கொள்வதற்கு முதலமைச்சர் அவர்களுக்குப் பதிலாக நான் அங்கே வருகிறேன் என்பதை அங்கு இருக்கக்கூடிய விழா ஏற்பாட்டாளர்களுக்கு முறைப்படி நாங்கள் தெரிவித்தோம். இதில் மிக முக்கியமாக, முதற்கட்டமாக, இலங்கைப் பயணம் மேற்கொள்வதற்காக ஒன்றிய அரசின் வெளிவிவகாரத் துறையிலிருந்து உரிய அனுமதியினைப் பெறுவதற்கு கடந்த மாதம் 28ஆம் தேதி உரிய வழிமுறைப்படி விண்ணப்பம் நம்முடைய பொதுத்துறையால் அனுப்பப்பட்டுவிட்டது. அதற்குப்பிறகு விழா ஏற்பாட்டாளர்களிடம் நான் தொடர்பு கொண்டு என்னுடைய பயண விவரங்கள் எல்லாம் அவர்களுக்கு அளித்து பயணத்திற்கு வேண்டிய விமான டிக்கெட்டுகள் எல்லாம் ஏற்பாடுகளை செய்துவிட்டு, political clearance என்று சொல்லக்கூடிய வெளிவிவகாரத்தின் அனுமதி கிடைப்பதற்காக நான் காத்துக் கொண்டிருந்தேன்.

### முதல்வர் சார்பில் நான் செல்ல ஒன்றிய அரசு அனுமதி தரவில்லை!

28ஆம் தேதி அன்று பொதுத் துறையின் வாயிலாக ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டது. விழா 2ஆம் தேதி மதியம். ஆனால் 1ஆம் தேதி இரவு ஒன்பது மணிவரை அதற்கான அனுமதி ஒன்றிய அரசின் வெளிவிவகாரத் துறையிடமிருந்து நமக்கு அதற்கான அனுமதி வரவில்லை. நான் அன்றைய தினம் ஏறத்தாழ எட்டு, எட்டரை மணிவரை தலைமைச் செயலகத்தில் தான் இருந்தேன். தலைமைச் செயலகத்தில் இருக்கக்கூடிய அதிகாரியிடத்தில் அதற்கான ஒப்புதல் வந்துவிட்டதா? என்று விசாரித்தபோது இது வரை வரவில்லை என்று தெரிவித்தார்.

மறுநாள் காலை விமானத்தில் நான் கொழும்பு செல்வதற்கான பயணத் திட்டங்கள் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. ஆனால், முதல் நாள் 1ஆம் தேதி இரவு எட்டரை மணி வரை நான் தலைமைச் செயலகத்தில் இருக்கும்வரை வரவில்லை. அதற்குப்பிறகு நான் அதிகாரிகளிடத்தில் கேட்டு, இதற்கு பிறகு அத்தகைய அனுமதி கடிதம் வருவது கடினம் என்ற சூழ்நிலையில், அதற்குப் பின்பு நான் இலங்கையில் இருக்கக்கூடிய விழா ஏற்பாட்டாளர்களை அழைத்து, சூழ்நிலையை அவர்களிடத்தில் விளக்கி, ஒன்றிய அரசிடமிருந்து அனுமதி இதுவரை வராத காரணத்தால் நான் பயணத்தை மேற்கொள்ள இயலாத நிலையில் இருப்பதை சுட்டிக்காட்டி, என்னுடைய பயண ஏற்பாடுகளை நான் இரத்து செய்துவிட்டு வீடு திரும்பினேன்.

### பயண ஏற்பாட்டை ரத்து செய்த பிறகு வந்த அனுமதி!

அதற்குப்பிறகு ஒன்பதரை மணிக்கு மேல் அனுமதி வந்திருக்கிறது. ஆனால் அதற்கு முன்னதாக நான் பயண ஏற்பாடுகளை எல்லாம் இரத்து செய்துவிட்ட காரணத்தினால், இரவு 8.30 மணிக்கு மேல் அத்தகைய அனுமதி கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று கருதி, முறைப்படி விழா ஏற்பாட்டாளர்களிடம் இதனைத் தெரிவித்துவிட்டு பயண ஏற்பாடுகளை எல்லாம் இரத்து செய்து விட்டோம்.

2ஆம் தேதி காலை சுமார் 11 மணிக்கு இலங்கையிலிருந்து நமது முதலமைச்சர் அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு இதுபோல தமிழ்நாடு அமைச்சர் அவர்களும் வர இயலாத சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தினால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வாழ்த்துச் செய்தியினை அனுப்பிட வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். சுமார் 11 மணிக்கு செய்தி கிடைத்த உடன் பல்வேறு அலுவல்களுக்கிடையே, இந்த நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை கருதி உடனடியாக முதலமைச்சர் அவர்கள் நேரம் ஒதுக்கி அதற்கான வாழ்த்துச் செய்தியும் உடனடியாக தயார் செய்து அங்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். அந்த வாழ்த்துச் செய்தி இங்கிருந்து பகல் 2 மணிக்குள் அவர்களுக்கு கிடைத்துவிட்டது. அவர்கள் நம்மிடத்தில் தெரிவித்தது நிகழ்ச்சியில் முதலமைச்சர் அவர்களுடைய வாழ்த்துச் செய்தி ஒளிபரப்பப்படும் (Video clipping) என்று சொன்னார்கள். அங்கே இருக்கக்கூடிய பல்வேறு செய்தி ஒளிபரப்பு நிறுவனங்களுக்கு அது அனுப்பப்பட்டிருக்கிறது.

### முதலமைச்சரின் வாழ்த்து செய்தியை இலங்கையில் ஒளிபரப்பப்படவில்லை!

ஆனால் என்னவாயிற்று என்றால், என்ன காரணத்தினாலோ முதலமைச்சர் அவர்களுடைய வாழ்த்துச் செய்தி அந்தக் கூட்டத்தில் அவர்களால் ஒளிபரப்பப்படவில்லை. பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் தமிழ்நாட்டிலிருந்தும், இந்திய அளவிலும் அந்நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கிறார்கள். ஆனால் என்ன காரணத்தினால் முதலமைச்சர் அவர்களுடைய வாழ்த்துச் செய்தி அங்கே ஒளிபரப்ப இயலவில்லை என்பது எனக்கு தெரியவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை பத்திரிகையாளர்களாகிய உங்கள் யூகத்திற்கு நான் விட்டுவிடுகிறேன். ஆனால் அதற்கு பிறகு முதலமைச்சர் அவர்களுடைய வாழ்த்துச் செய்தி பல்வேறு ஊடகங்கள் வாயிலாக வெளியே வந்திருக்கிறது. இதுதான் இந்த விஷயத்தில் நடந்தது என்பதை இந்த சந்திப்பின் மூலமாக நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். 1ஆம் தேதி இரவு முதல் 2ஆம் தேதி மதியம் வரை என்ன நடந்திருக்கிறது என்பது குறித்து நான் உங்களிடத்தில் விளக்கம் அளித்திருக்கிறேன்.

**கேள்வி :** மத்திய அரசின் தலையீடு இருக்கிறதா?

**அமைச்சர் தங்கம் தென்னரசு :** நான் குறிப்பிட்டதை போல, யாரையும் நான் நேரடியாக சொல்லவிரும்பவில்லை. ஆனால் என்ன காரணத்தினால், அங்கு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி முறையான வகையில் அவர்களால் ஒளிபரப்ப இயலவில்லை என்பதற்கான காரணத்தை உங்களுடைய யூகத்திற்கு விட்டுவிடுகிறேன்.

**கேள்வி :** அனுமதி திட்டமிட்டு மறுக்கப்பட்டதா?

**அமைச்சர் தங்கம் தென்னரசு :** முறைப்படி 28ஆம் தேதி ஒன்றிய அரசிற்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டிருக்கிறது. நான் 1ஆம் தேதி இரவு வரை தலைமைச் செயலகத்தில் இருந்தேன். அன்றைக்கு SLBC கூட்டம் இருந்தது. நான் எட்டரை மணியளவில் தலைமைச் செயலகத்திலிருந்து தகவலை கேட்டுவிட்டுதான் கிளம்பினேன். அதுவரை அனுமதி வரவில்லை. மறுநாள் காலை நான் விமானத்தில் செல்லவேண்டும், இரவு நான் தலைமைச் செயலகத்திலிருந்து புறப்படும் வரை அனுமதி வராத காரணத்தினால் நான் முறையாக விழா ஏற்பாட்டாளர்களிடம் தொடர்பு கொண்டு நிலைமையினை விளக்கியதற்குப் பிறகு என்னுடைய பயணத் திட்டங்களை நான் இரத்து செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## புதுவை மாநில முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர்

# புதுவை கண்ணன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 7-

புதுவை மாநில முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் புதுவை கண்ணன் மறைவுச் செய்தி அறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அன்னாரது குடும்பத்தினருக்கு தமது இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துள்ளார்.



புதுவை மாநில முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் புதுவை கண்ணன் அவர்களின் மறைவுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

புதுவை மாநில முன்னாள் சட்டப்பேரவைத் தலைவரும் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் எனப் பல்வேறு பொறுப்புகளில் மக்களுக்காகப் பணியாற்றிய வருமான புதுவை கண்ணன் அவர்கள் உடல்நலக் குறைவால் மறைந்தார் என்றறிந்து மிகவும் வருந்துகிறேன்.

காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்காக இளவயது முதல் பணியாற்றிய கண்ணன் அவர்கள், கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு புதுவை மக்களிடையே பெரிதும் பிரபலமும் செல்வாக்கும் நன்மதிப்பும் கொண்ட தலைவராகத் திகழ்ந்து வந்தவர் ஆவார். அவரது மறைவு புதுவை அரசியலில் எளிதில் ஈடுசெய்ய இயலாத இழப்பு ஆகும்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், அரசியல் உலக நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.பொ. அரசு
### நவம்பர் 7 (1987)



**தி.மு.க. சென்னை மாநகராட்சி மன்றத்தை கைப்பற்றியபோது தி.மு.க.வின் முதல் மேயராக பொறுப்பேற்று பணியாற்றியவர்.**

**20 ஆண்டுகாலம் மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – 1967ஆம் ஆண்டு மாதவரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.**

**1958ஆம் ஆண்டு நடைபெற்ற கருப்புக் கொடி போராட்டத்திலும், 1962ஆம் ஆண்டு விலைவாசி உயர்வை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்திலும் கலந்து கொண்டு சிறை சென்றார்.**

**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருங்கிப் பழகியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## பிற்படுத்தப்பட்டோர் – மிகப் பிற்படுத்தப்பட்டோர் துறை சார்பில்

# ரூ.16.13 கோடி மதிப்பில் புதியதாக 3 மாணவர் விடுதிகள்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, நவ.7-*

*பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் பெரம்பலூர், அரியலூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் தலா ஒரு மாணவர் விடுதி என்ற வகையில் ரூ.16.13 கோடி மதிப்பீட்டில் மூன்று விடுதிகள் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-*

*கல்வியே வளர்ச்சியின் முதுகெலும்பு. அனைவருக்கும் கல்வியை உறுதி செய்வதற்காக, குறிப்பாக சமூகத்தின் பின் தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பினைச் சார்ந்த மாணவர்களுக்காக விடுதிகள் நடத்தப்படுகின்றன. அவர்களுக்கு இலவச உணவு மற்றும் தங்குமிடத்திற்கான வசதியை வழங்குவது மட்டுமல்லாமல் அவர்களின் கல்வி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கு சாதகமான சூழ்நிலை விடுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

*தமிழ்நாட்டில் கல்வியின் முக்கியத்துவம் உணர்ந்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவ / மாணவியரின் நலனைக் கருத்தில் கொண்டு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் மூலம் 1350 பள்ளி, கல்லூரி விடுதிகள் இயங்கி வருகின்றன. இவற்றுள் 1271 விடுதிகள் அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. எஞ்சிய 79 விடுதிகள் வாடகை கட்டடங்களில் இயங்கி வருகின்றன. வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு முனைப்பாக செயல்பட்டு வருகிறது.*

*இதன்படி 2023-24-ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் மூன்று விடுதிகளுக்கு ரூபாய் 16.13 கோடி செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.*

*மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக கீழ்க்கண்ட மூன்று விடுதிகளில் மொத்தம் 250 மாணவ / மாணவியர் தங்கும் வகையில் ரூ.16.13 கோடி செலவில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.*

*1. பெரம்பலூர் மாவட்டம், வேப்பூரில் 100 மாணவிகள் தங்கும் வகையில் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி விடுதி.*

*2. அரியலூர் மாவட்டம், மீன்சுருட்டியில் 50 மாணவர்கள் தங்கும் வகையில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி விடுதி.*

*3. இராமநாதபுரம் மாவட்டம், கமுதி, கோட்டைமேட்டில் 100 மாணவிகள் தங்கும் வகையில் சீர்மரபினர் நலக் கல்லூரி விடுதி.*

*இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

---

## கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர்

# சி.எச்.சேகர் தாயார் திருமதி சி.எச்.கிருஷ்ணவேணி மறைவு!

## கழக முன்னணியினர் அஞ்சலி!



*சென்னை, நவ.7-*

*கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி முன்னாள் உறுப்பினரும், கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளருமான சி.எச்.சேகரின் தாயாரும், சி.எச்.அப்பல் நாயுடுவின் மனைவியுமான திருமதி. சி.எச். கிருஷ்ணவேணி (வயது 69) அவர்கள் நேற்று (6.11.2023 - திங்கள் கிழமை) இயற்கை யெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.*

*செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த திருமதி. கிருஷ்ணவேணி அம்மாள் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.*

*அன்னாரின் இறுதி ஊர்வலம் நாளை (8.11.2023) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு கும்முடிப்பூண்டி இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றனர்.*

---

## தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

**தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழுச் செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன், எம்.பி., அறிவிப்பு!**

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக் குழு மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 17-11-2023 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில், சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் எனது (இரா. கிரிராஜன்) தலைமையில் நடைபெற உள்ளது.


இக்கூட்டத்தில் சட்டதிட்டத் திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கழக ஆக்கப் பணிகள்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 7.11.2023

**இரா. கிரிராஜன், எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு

---



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவரது பன்முக ஆற்றலையும், தமிழ் சமூகத்தின் முன்னேற்றத்திற்காக அவர் அளித்த மக்கள் நலத்திட்டங்களையும் மக்களிடையே கொண்டு செல்லும் நோக்குடன் வடிவமைக்கப்பட்ட முத்தமிழ் தேர் அலங்கார ஊர்தியை நேற்று சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பெ.கீதாஜீவன் தூத்துக்குடியில் வரவேற்றபோது. உடன் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜீ.வி. மார்க்கண்டேயன், எம்.சி. சண்முகையா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட ஆட்சியர் லட்சுமிபதி, தூத்துக்குடி மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்த்சேகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## இளைஞர் அணிக்கு கழகத் தலைவர் அளித்த மூன்று முக்கிய பணிகள்!

# ரெய்டு - பொய்ச் செய்தியைக் கொண்டே பா.ஜ.க. கட்சியை நடத்துகிறது!

## கழக தீர்மானக்குழு சார்பில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ. 7-**

**கழக இளைஞர் அணிக்கு கழகத் தலைவர் - முதல்வர் அவர்கள் மூன்று முக்கிய பணிகளை அளித்துள்ளார் என்றும் ரெய்டு - பொய் செய்தியை வைத்துக் கொண்டே பா.ஜ.க. கட்சியை நடத்திக்கொண்டு இருக்கிறது என்று கழக தீர்மானக்குழு சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

இது குறித்து அவர் ஆற்றிய உரை வருமாறு:-

கழகத்தின் தீர்மானக்குழு சார்பாக இளைஞர் அணி திறக்கின்ற நூலகங்களுக்கு நூல் வழங்குகின்ற இந்த சிறப்பான விழாவில், நான் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். உங்களையெல்லாம் சந்திப்பதிலே நான் பெருமை அடைகின்றேன்.

10 மாவட்டங்களில் நூலகங்கள் அமைக்க, தலா ஒரு லட்சம் ரூபாய் என பத்து லட்சம் ரூபாய் மற்றும் ஒரு லட்சம் ரூபாய் இளைஞர் அணியின் மாநாட்டு நிதி வழங்குகின்ற தீர்மானக்குழுவுக்கு முதலில் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நிகழ்ச்சி முதலில் இளைஞர் அணியின் அலுவலகம் அன்பகத்தில் இருக்கக்கூடிய அரங்கத்தில் நடைபெறுவதாக இருந்தது. அங்கேதான் நடத்தப் போகிறோம் என்று என்னிடம் சொன்னார்கள். ஆனால், நான்தான் `இந்த நிகழ்ச்சியை இன்னும் பெரிதாகப் பண்ணுங்கள்' என்று சொல்லி, `அன்பகத்தில் இவ்வளவு பேர் உட்கார முடியாது. கிட்டத்தட்ட 1,000 பேர் உட்கார்ந்து இருக்கின்றீர்கள். அன்பகத்தில் ஒரு 200 பேர்தான் உட்கார முடியும். நிகழ்ச்சியைப் பெரிதாக நடத்துங்கள்' என்று நான்தான் அங்கிருந்து இங்கே மாற்றிவிட்டேன்.

ஆனால், இங்கே பார்த்தீர்கள் என்றால், அன்பகத்தில் நடத்தியிருந்தால் இளைஞர் அணிக்கு ஒரு பத்தாயிரம் ரூபாய் நிதி கிடைத்திருக்கும். அந்த அரங்கத்திற்கு வாடகை.

**என்னிடத்தில் உரிமை எடுத்துக்கொண்ட தமிழ்தாசன்**

அங்கே பத்தாயிரம் ரூபாய் விட்டு கொடுத்துவிட்டு, இங்கே 10 லட்சம் ரூபாய் வாங்க வந்திருக்கிறேன். அண்ணன் தமிழ்தாசன் அவர்கள் பேசும்பொழுது மிகுந்த உணர்வோடு பாராட்டிப் பேசினார்கள். சென்ற தேர்தலுக்கு முன்பு என்னிடத்தில் மிகுந்த உரிமையோடு. அப்போது நான் தேர்தலில் சட்டமன்ற வேட்பாளாராக அறிவிக்கப்படுவேனா இல்லையா. தேர்தலில் போட்டிபோடுவேனா, இல்லையா என்ற ஒரு சின்ன தயக்கம் இருந்தது.

அப்போது என்னிடத்தில் வந்து. மிகுந்த உரிமையோடு நீங்கள் கண்டிப்பாக சேப்பாக்கம் திருவல்லிக்கேணியில் நின்று, சட்டமன்ற உறுப்பினராக நீங்கள் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். கண்டிப்பாக, நீங்கள் அந்தத் தொகுதியில் நிற்க வேண்டும் என்று உரிமையோடு என்னிடம் வந்து சொன்னார். இப்போது பேசும் போது கூட குறிப்பிட்டு சொன்னார். வாக்கு அங்கே இருக்கிறது போல என்று அப்போது நான் நினைத்தேன்.

ஏனென்றால், அவருடைய வீடு அங்கு இருக்கிறது. ஆனால், அதற்கு அப்புறம் தான் தெரிந்தது, அவருக்கு அங்கு ஓட்டே கிடையாது என்று. அவருடைய ஓட்டு துறைமுகத்தில் இருக்கிறது. இருந்தாலும், இங்கு மிகுந்த பெருமைப்படுத்திப் பாராட்டி பேசியிருக்கிறார். அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் ஒவ்வொரு அணிக்கும் பல பணிகளைப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்.

**இளைஞர் அணி சார்பாக கலைஞர் நூலகம்!**

அதிலே இளைஞர் அணிக்கு மூன்று பணிகள். தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் இளைஞர் அணியின் சார்பாக, கலைஞர் நூலகம் அமைக்கக்கூடிய பணி, அதேபோல் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களிலும் மாரத்தான் போட்டிகள் நடத்துகின்ற பணி, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சிறந்த 100 இளம் பேச்சாளர்களைக் கண்டறிந்து கண்டறிய வேண்டும். இந்த மூன்று பணிகளை இளைஞர் அணிக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

கிருஷ்ணகிரியில்தொடங்கி, கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் கன்னியாகுமரி வரை இளைஞர் அணியின் சார்பாக இதுவரை 14 இடங்களில் கலைஞர் நூலகங்களை பணி நிறைய இருக்கிறது. அந்த நூலகங்களுக்கு நூல்களை வழங்கும் விதமாக நிதி அளித்துள்ள நம்முடைய தீர்மானக் குழுவுக்கு மீண்டும் என்னுடைய அன்பையும், நன்றியையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்பது, ஒரு அறிவு இயக்கமாக, படிக்கின்ற இயக்கமாக, பேசுகின்ற இயக்கமாகத்தான் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், இனமான பேராசிரியர் அவர்களும் நம்மையெல்லாம் வளர்த்து எடுத்தார்கள். அந்த வழியில் தான் நம்முடைய தலைவர் அவர்களும் செயல்பட்டு வருகிறார்கள்.

அதற்கு, கலைஞர் நூற்றாண்டுக் கொண்டாட்டங்களே ஒரு மிகப்பெரிய சாட்சி. அரசு சார்பில், 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் `கலைஞர் நூலகம்' திறந்தது முதல் கழகம் சார்பாக இளைஞர் அணியின் சார்பாக தமிழ்நாடு எங்கும் கலைஞர் நூலகங்களைத் திறக்க நமக்குக் கட்டளையிட்டுள்ளார்கள்.

இளைஞர் அணியின் இந்தப் பணியில் தீர்மானக் குழுவும் இணைந்து இருப்பது எங்களுக்குக் கூடுதல் மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்த நிகழ்ச்சி எப்படி அன்பகத்திலிருந்து இங்கே இந்தக் கலைவாணர் அரங்கத்திற்கு மாறியதிலே இன்னொரு சிறப்பு உண்டு.

முதலில் இந்த நிகழ்ச்சிக்கு அண்ணன் அக்ரி கணேசன் அவர்கள் தேதி வாங்கிவிட்டார். அண்ணன் தமிழ்தாசன் அவர்களும், குழு உறுப்பினர்கள் எல்லாம் தேதி வாங்கி விட்டார்கள்.

அதன் பிறகு இன்று திருவள்ளூரில் பாக முகவர்களுடைய பயிற்சிப் பாசறை மாநாடு அந்தத் தேதி முடிவானதற்குப் பிறகு இந்தத் தேதி கொஞ்சம் தள்ளி வைத்துக்கொள்ளலாம். அங்கிருந்து வர முடியுமா அப்படி என்று ஒரு சந்தேகம் இருந்தது.

இந்த நிகழ்ச்சி நடக்குமா இல்லையா என்று. ஆனால் தீர்மானக் குழு நடத்துகின்ற நிகழ்ச்சி என்பதினால். தீர்மானமாக இதை நடத்தியே ஆக வேண்டும் என்று. நேரம் கொஞ்சம் தள்ளிப்போனாலும் பரவாயில்லை. இன்று இந்த நிகழ்ச்சியை நடத்தியே ஆக வேண்டும் என்று இவ்வளவு சிறப்பாக இந்த நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

**தீர்மானக்குழு பெருமை பெற்றுள்ளது!**

கழகத்தின் எல்லா அணிகளுக்கும் மாவட்டம், ஒன்றியம், நகரம், பேரூர், கழகம் எனக் கிளைகள் இருக்கும். ஆனால், தலைமையில் தலைவருக்குப் பக்கத்திலிருந்து இயங்குகின்ற ஒன்றென்றால், இந்தத் தீர்மானக்குழுதான் அதற்கு இந்தத் தீர்மானக்குழு மிகப்பெரிய ஒரு பெருமையைப் பெற்றுள்ளது.

பொதுவாகவே, திராவிட இயக்கத்திற்கும் தீர்மானங்களுக்கும் நிறைய தொடர்பு இருக்கிறது. திராவிட இயக்க மாநாடுகளில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்குத் தனி வரலாறு உண்டு.

நம்முடைய இயக்க மாநாடுகளில் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள்தான் பின்னாளில் அரசால் சட்டங்களாக இயற்றப் படுகின்றன.

தந்தை பெரியார் அவர்கள் 1929--ஆம் ஆண்டு செங்கல்பட்டின் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்கள் வரலாற்று புகழ் பெற்றவை. பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் உரிமை தரப்பட வேண்டும் என்று அந்த மாநாட்டில்தான் தந்தை பெரியார் அவர்கள் ஒரு மிகச்சிறந்த ஒரு முக்கியமான தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்.

பின்னாளில் ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்குப் பிறகு கலைஞர் தலைமையிலான நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, அந்தத் தீர்மானத்திற்கு சட்ட வடிவம் கொடுத்தது, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

தந்தை பெரியார் அவர்களின் கடைசி காலத்தில் ஒரு மாநாடு நடத்தினர். அந்த மாநாட்டில்தான் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிப் போராட்டத்தைத் தொடங்கினார். அடுத்த சில மாதங்களில் வயது முதிர்ச்சி காரணமாக தந்தை பெரியார் அவர்கள் இறந்துவிட்டார்.

இதைத்தான் தந்தை பெரியாரை நெஞ்சில் ஒரு முள்ளோடு அடக்கம் செய்கின்றோம் என்று சொன்னார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பெரியார் இறக்கும்பொழுது.

**அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்: நிறைவேற்றிய முதல்வர்!**

இதற்காக நம்முடைய கழக அரசு எடுத்த அனைத்து முயற்சிகளையும் நீதிமன்றத்தின் வாயிலாக, நம்முடைய எதிரிகள் முடக்க முயற்சித்தார்கள். ஆனால், பெரியார் இறந்து



ஏறக்குறைய, 50 ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த நம்முடைய திராவிட மாடல் அரசினுடைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் அர்ச்சகர் பயிற்சி முடித்தவர்களுக்குக் கோயில்களில் பணி நியமன ஆணைகளை வழங்கி, தந்தை பெரியார் நெஞ்சில் இருந்த முள்ளை எடுத்தார்.

இன்னும் ஒரு படி மேலே சென்று இப்பொழுது தமிழ்நாட்டில் மூன்று பெண்கள் அர்ச்சகர் பயிற்சி முடித்திருக்கக்கூடிய நிலையை உருவாக்கி இருக்கிறது என்றால், நம்முடைய கழக அரசுதான் நம்முடைய தலைவர் அவர்கள்தான் இதற்குக் காரணம்.

இந்தித் திணிப்பை எதிர்க்க வேண்டும் என்று மாநாடுகளில் நம்முடைய தலைவர்கள் நிறைவேற்றிய தீர்மானம்தான் இன்றைக்கு தமிழ்மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும் காத்து நிற்கின்றது. இப்படி நிறைய உதாரணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

நாம் நிறைவேற்றுகின்ற மாநாட்டுத் தீர்மானங்களானாலும், சட்டமன்றத்தில் நிறைவேற்றுகின்ற சட்ட மசோதாக்களானாலும் அவற்றையெல்லாம் பாசிஸ்டுகளால் ஏற்றுக் கொள்ளவே இயலாது.

முற்போக்கான கருத்துக்களை, சமத்துவக் கருத்துக்களை பாசிஸ்டுகளால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். நமது கழக மாநாடுகளில் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள், அதையொட்டி நமது கழக அரசு கொண்டு வருகின்ற சட்டங்கள் எல்லாம் காலம் கடந்து நிற்கக் கூடியவை.

எனவேதான் நம்மைப் பார்த்தால் பழமைவாதிகளுக்கு, சங்கிகளுக்கு எப்பொழுதுமே நம்மீது கோபம் ஏற்படுகின்றது. பேரறிஞர் அண்ணாவின் சிலைகளைப் பார்த்தீர்கள் என்றால், நிறைய சிலைகள் படிப்பது போல்தான் இருக்கும்.

**முரசொலிக்கு எழுதுவது போன்று கலைஞர் சிலைகள் அமைப்பு!**

அதேபோல் நம் கலைஞரின் பல சிலைகளைப் பார்த்தால், கலைஞர் உட்கார்ந்து முரசொலிக்கு உடன்பிறப்பு கடிதம் எழுதுகின்ற மாதிரிதான் இருக்கும். இன்னும் சொல்லப் போனால், கலைஞருக்கு இன்னொரு அடையாளம் என்னவென்றால் பேனா.

கலைஞர் என்றால் பேனா என்ற அடையாளம் இருக்கிறது.

இதன் மூலம் என்ன தெரிகிறது என்றால், ஒரு இயக்கம் படிப்புக்கு எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது, கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

தமிழர்கள் எல்லாரும் படித்து முன்னேற வேண்டும் என்பதற்காகத்தான் நமது கழகம் உழைத்துக் கொண்டிருக்கிறது. நமது குழந்தைகளின் கல்விக்கும் பாசிஸ்ட்டுகள் எத்தனை முட்டுக்கட்டைகள் போட்டாலும், அவற்றை எல்லாம் எதிர்த்து, இன்றும் நம்முடைய கழகம் களத்தில் போராடிக் கொண்டிருக்கிறது.

நமது குழந்தைகளுடைய கல்விக்காகவும், வேலை வாய்ப்புக்காகவும் இட ஒதுக்கீட்டுக்காகவும் போராடினோம்.

இப்பொழுது 'நீட்' மாதிரியான போட்டித் தேர்வு கல்வி உரிமைதான் அதுவும். அதற்காக இன்றும் போராடிக் கொண்டிருக்கிறோம். 'நீட்' தேர்வுக்கு எதிரான தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளை டெல்லிக்குத் தெரியப்படுத்த கழகத்தினுடைய இளைஞர் அணி மாணவர் அணி, மருத்துவ அணி தலைவருடைய கட்டளையை ஏற்று, ஒரு மிகப்பெரிய கையெழுத்து இயக்கத்தைத் துவங்கி இருக்கின்றோம்.

50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து வாங்க போகிறோம். இன்றுகூட இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கக்கூடிய பல பேர் அந்த போஸ்ட் கார்டுகளிலும் இணையதளத்திலும் நீங்கள் கையெழுத்திட்டிருப்பீர்கள். இந்த நேரத்திலே இந்தக் கூட்டத்தின் வாயிலாக உங்களுக்கெல்லாம் ஒரு கோரிக்கை. இதை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும்.

**நீட் பிரச்சினை மாணவர்களுடைய பிரச்சினை!**

இந்த நீட் தேர்வு உதயநிதியின் தனிப்பட்ட பிரச்சினை கிடையாது. இந்த நீட் தேர்வு ரத்து என்பது தி.மு.க.வின் பிரச்சினை கிடையாது. இளைஞர் அணியின் பிரச்சினை கிடையாது. ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மாணவர்களுடைய பிரச்சினை. எதிர்க்கட்சியாக இருக்கும் பொழுது ஒரு வார்த்தை, ஆளுங்கட்சியாக இருக்கும் பொழுது ஒரு வார்த்தை என்பது கிடையாது.

எதிர்கட்சியாக இருக்கும்போது நாம் நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்று போராடினோம். ஆளுங்கட்சியானபோதும் போராடுகிறோம். இதிலிருந்து அ.தி.மு.க.வுக்கும், தி.மு.க.வுக்கும் இருக்கக்கூடிய வித்தியாசத்தை நீங்கள் மக்களிடம் எடுத்து கூற வேண்டும்.

ஆறு வருடத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் நுழைவுத் தேர்வை ரத்து செய்தார். 2007-ஆம் ஆண்டு. கிராமப்புறங்களிலிருந்து ஏழை எளிய மாணவர்கள் படித்து, பன்னிரண்டாம் வகுப்பு தேர்வு போதும், நுழைவுத் தேர்வு தேவையில்லை என்று சொல்லி நுழைவுத் தேர்வை ரத்து செய்தது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான்.

இன்னும் சொல்லப்போனால் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் அவர்கள் உயிரோடு இருக்கிறவரைக்கும் தமிழ்நாட்டுக்குள் நீட் தேர்வு உள்ளே வரவே இல்லை.

**நீட் தேர்வால் 21 மாணவர்கள் பலி**

அந்த அம்மா இறந்த பிறகு, ஒன்றிய பா.ஜ.க. அரசும் அடிமை அ.தி.மு.க. அரசும் தமிழ்நாட்டிற்குள் நீட் தேர்வைக் கொண்டு வந்தார்கள். அரியலூர் மாவட்டத்தில், அனிதா என்ற மாணவி 1,200க்கு 1,176 மார்க் வாங்கியது. அந்த மாணவி அனிதா இப்பொழுது உயிரோடு இருந்திருந்தால், டாக்டர் அனிதா. அரியலூர் அனிதாவில் ஆரம்பித்து சென்னையில் ஜெகதீஸ் என்ற ஒரு மாணவன். இந்த வருடம் இறந்து போனார். இந்த 6 வருடத்தில் மட்டும் 21 மாணவிகள் நீட் தேர்வினால் உயிரிழந்திருக்கிறார்கள்.

முதன்முறையாக இப்போது சென்னையில் ஜெகதீஸ்வரனின் தந்தையும் `பையன் டாக்டராக வேண்டுமென்று ஆசைப்பட்டான். தற்கொலை பண்ணிக் கொண்டான்' என்று மனசு தாங்காமல் இறந்து போய் விட்டார். அடுத்த நாள் தற்கொலை செய்து கொண்டார். ஒரு குடும்பத்தையே இழந்திருக்கிறோம், நீட் தேர்வுக்காக.

இது தனிப்பட்ட உதயநிதியின் பிரச்சினை கிடையாது. மாணவர்களுடைய பிரச்சினை. இதைக் காப்பதற்கும் இப்போது தி.மு.க.தான் போராட்டக் களத்தில் இறங்கி இருக்கிறது.

**தி.மு.கழகத்தின் உண்மையான வெற்றி!**

என்றைக்கு நீட் தேர்வு தமிழ்நாட்டில் இருந்து ரத்து செய்யப்படுகிறதோ அன்றைக்குத்தான் தி.மு.க.வினுடைய உண்மையான வெற்றி. இந்த நேரத்திலே திருப்பத்தூர் மாவட்டம், ஆன்லைனில் பதிவு செய்வதில் மட்டும் இதுவரை மூன்று லட்சம் கையெழுத்துக்களை நாம் பெற்றிருக்கிறோம். Banneet.in என்ற இணையதளத்தின் மூலம்.

**திருப்பத்தூர் மாவட்டம் முதலிடம்!**

திருப்பத்தூர் மாவட்டம் முதலிடம். நான்கு தொகுதிகளில் இதுவரை 40 ஆயிரம் பேரிடம் கையெழுத்து வாங்கி இருக்கிறார்கள். அதற்கு இந்த நேரத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் தேவராஜன் அவர்களுக்கும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வடிவேலு அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சென்னை மேற்கு மாவட்டம் இரண்டாவது இடம்!**

அதேபோல் இரண்டாவது இடம், சென்னை மேற்கு மாவட்டம், மூன்று தொகுதிகளி 30 ஆயிரத்திற்கும் மேல் கையெழுத்து வாங்கி இருக்கிறார்கள். மாவட்டக் கழகச் செயலாளர் சகோதரர் சிற்றரசு அவர்களுக்கும், இளைஞர் அணி அமைப்பாளர் சகோதரர் பிரகாஷ் அவர்களுக்கும் இந்த நேரத்திலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்,

இவை மட்டும் போதாது. இன்னும் நிறைய கையெழுத்துகளை நாம் வாங்க வேண்டும். இலக்கு 50 லட்சம் என்றாலும், மக்களுடைய எண்ணம் உங்களுக்குத் தெரியும்.

**இலக்கை விட அதிகமாக கையெழுத்தை பெற வேண்டும்!**

தமிழ்நாட்டு மக்கள் என்றுமே நீட் வேண்டாம் என்றுதான் இன்று வரைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இலக்கை விட அதிகமான கையெழுத்துகளை நீங்கள் பெற்று தருவீர்கள் என்று நான் நம்புகின்றேன். இந்த மேடையை அதற்காக நான் பயன்படுத்திக் கொள்கிறேன்.

இதுவரை நமது கழகம் நடத்திய எந்தப் போராட்டமாக இருந்தாலும், வரலாற்றை எடுத்துப் பார்த்தீர்களென்றால் கடைசியில் நாம்தான் வெற்றி பெற்று இருக்கிறோம்.

இதிலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. சில போராட்டங்களில் வெற்றி பெறுவதில் கொஞ்சம் கால தாமதம் ஏற்படலாம். ஆனால், இறுதியில் நாம்தான் வெற்றி பெறுவோம்.

**பா.ஜ.க.வில் இருக்கும் அணிகள்!**

பாரதிய ஜனதா கட்சிக்கு இப்பொழுதே பயம் வந்துவிட்டது. அது வெளிப்படையாகவும் தெரிகின்றது. அதனால்தான் அமலாக்கத்துறை, வருமானவரித்துறை. நான் பல மேடைகளில் சொல்லியிருக்கிறேன்.

தி.மு.க.வில் பல அணிகள் இருக்கின்றன. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி, இது போன்ற தீர்மானக்குழு எனப் பல குழுக்கள் இருக்கின்றன. தி.மு.க.வின் அணிகள் இதெல்லாம் தலைமை சொல்வதை நாம் களத்தில் இறங்கி செய்வோம். அதேபோல் பா.ஜ.க.வில் இருக்கக்கூடிய ஒரு அணி தான் இந்த அமலாக்கத்துறை, ஐ.டி இதெல்லாம் தலைமை சொல்வதை இந்த அணிகள் எல்லாம் சென்று செய்து விட்டு வரும்.

இப்போது கூட இரண்டு நாட்களுக்கு முன்பு நம்முடைய அமைச்சர் எ.வ.வேலு அண்ணனுடைய வீடுகளிலும் அவருடைய நிறுவனங்களிலும் ஐ.டி ரெய்டு நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

அ.தி.மு.க. அமைச்சர்களை, அ.தி.மு.க. அரசு இருக்கும்போது எப்படி அமைச்சர்களுக்கு எல்லாம் ரெய்டு விட்டு அ.தி.மு.க. என்ற இயக்கத்தைத் தங்களுடைய அடிமையாக வைத்துக் கொண்டார்களோ, அதேபோல் தி.மு.க.வினரையும் மிரட்டலாம் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு நினைத்துக் கொண்டிருக்கிறது. மோடி, நான் சொல்கிறேன்.

**தி.மு.க. கிளைச் செயலாளர்கள் கூட பயப்பட மாட்டார்கள்!**

நாங்கள் உங்களைப் பார்த்து, ஒன்றிய பா.ஜ.க. அரசைப் பார்த்து உங்களுடைய ஐ.டியை எல்லாம் பார்த்து எங்களுடைய தலைவர் இல்லை, எங்களுடைய முன்னணி மூத்தத் தலைவர்கள் இல்லை, தி.மு.க.வின் ஒரு கிளைச் செயலாளர் கூட உங்களைப் பார்த்து பயப்பட மாட்டார்.

எங்களுடைய வளர்ப்பு அப்படி. தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும், இனமான பேராசிரியர் தாத்தாவும் எங்களுக்கு அந்த சுயமரியாதையைக் கற்றுக் கொடுத்து விட்டுப் போய் இருக்கிறார்கள். எனவே ஒரு கட்சி கொள்கையை நம்பி, ஆட்சியில் செய்து இருக்கக் கூடிய திட்டங்களை நம்பித்தான் பொதுவாக தேர்தலை சந்திக்க வேண்டும். ஆனால், பா.ஜ.க.வைப் பார்த்தீர்கள் என்றால், வெறும் ரெய்டு, பொய் செய்திகள் இதை வைத்துக் கொண்டுதான் கட்சியே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு இன்னொரு சிறந்த ஒரு உதாரணம், கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு கூட்டத்தில் போய் பேசினேன். நான் பேசாததையெல்லாம் பேசினேன் என்று சொல்லி, நான் பாட்டுக்குப் பேசிக் கொண்டு போய் இருந்தேன் என்றால், அந்த ஹாலுக்குள்ளயே முடிந்து போயிருக்கும்.

யாருக்கும் தெரிந்திருக்கக் கூடத் தெரிந்திருக்காது. அதைப் பொய்யாகப் பரப்பி ஒட்டுமொத்த இந்தியாவுமே அதைப் பற்றிப் பேசி, இப்போது என் மீது வழக்கு போட்டு இருக்கிறார்கள். அண்ணன் சேகர்பாபு மீதும் வழக்குப் போட்டிருக்கிறார்கள். நானாவது பேசினேன். அண்ணன் சேகர்பாபு அவர்கள் வேடிக்கைதான் பார்த்தார். நீதிமன்றத்தில் வந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். நான் சொன்னேன், மன்னிப்பெல்லாம் கேட்க முடியாது, பேசியது பேசியதுதான். நான் சொன்ன கொள்கையில், உறுதியோடு இருப்பேன்.

நான் முத்தமிழறிஞர் கலைஞருடைய பேரன், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய மகன் யாரிடமும் மன்னிப்பெல்லாம் கேட்க மாட்டேன். நீங்கள் என்ன வழக்கு வேண்டுமானாலும் போடுங்கள். நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டேன்.

**தந்தை பெரியாரின் கொள்கை வாரிசுகள்**

ஆமாம், வாரிசுதான் நாங்கள் எல்லாம் தந்தை பெரியாருடைய கொள்கை வாரிசுகள். நான் மட்டுமல்ல, இங்கே இருக்கக்கூடிய உங்களையும் சேர்த்துத் தான் சொல்கிறேன். ஏதோ ஒரு நாள் கூடினோம் பேச்சைக் கேட்டோம் கை தட்டினோம் என்று கலைகிற கூட்டம் கிடையாது தி.மு.க. கூட்டம். அதை நீங்கள் உணர வேண்டும்.

கொண்ட கொள்கையில் உறுதியாக இருப்போம். எனவே, இப்போது பா.ஜ.க எல்லாருடைய வீட்டிற்கும் ரெய்டு விடுகிறார்கள். தி.மு.க.வில் இருக்கக்கூடிய அத்தனை அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் அத்தனை பேருக்கும் ரெய்டு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடைசியாக, அடுத்த வருடம் வரப்போகின்ற தேர்தலில் ஒட்டுமொத்த இந்தியாவும் பா.ஜ.க.விற்கு ரெய்டு விடப்போகிறது. அப்போது தெரியும்.

அதேபோல் சமூக வலைதளங்களில் நம்முடைய கழக மூத்த முன்னோடிகள் பற்றியும் அவர்கள் நமது கழகத்திற்காகச் செய்திருக்கின்ற வரலாற்றுச் சாதனைகள் பற்றி எல்லாம் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாம் எழுதி மற்றவர்களுக்கும் அனைவருக்கும் பரப்ப வேண்டும். நமது கழக வரலாற்றை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் வரலாற்றையும் நமது இளைஞர்கள் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்காகத்தான் நாம் தமிழ்நாடு முழுவதும் தலைவருடைய ஆணையை ஏற்று, கலைஞருடைய பெயரில் அந்த நூலகங்களை நாம் திறந்து வைத்திருக்கின்றோம்.

இந்த ஏக்கம் இப்படி வாழையடி வாழையாக கொள்கைகளை அடுத்தடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்கிறது என்பதற்கு இந்த மேடையை ஒரு சிறந்த உதாரணம்.

நமது கழகத்தின் அடுத்தடுத்த நிகழ்ச்சிகள் மாநாடுகளில் தீர்மானக்குழு உறுப்பினர்கள் வடித்துக் கொடுக்கின்ற தீர்மானங்கள் நமது தமிழ்நாட்டு மக்களுக்குப் பூச்செண்டுகளாகவும், நமது எதிரிகளின் ஆதிக்கக் கோட்டையைத் தகர்க்கின்ற கருத்து ஆயுதமாகவும் அமைய வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்புடன் கேட்டுக் கொண்டு இந்தச் சிறப்பான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தீர்மானக் குழுவுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, `வாழ்க கலைஞர் புகழ், வாழ்க கலைஞர் புகழ், வாழ்க கலைஞர் புகழ்' என்று கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் ராஜ கண்ணப்பன், மா.சுப்பிரமணியன், சேகர் பாபு, மாவட்டக் கழகச் செயலாளரும் சட்ட மன்ற உறுப்பினருமான சுதர்சனம், மயிலை வேலு, மாவட்டக் கழகச் செயலாளர் சகோதரர் சிற்றரசு, இளைய அருணா, நாடாளு மன்ற உறுப்பினரும் விளையாட்டு மேம்பாட்டு அணியின் செயலாளருமான தயாநிதி மாறன்,

சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், தாயகம் கவி, மாநகராட்சி மேயர் பிரியா,

துணை மேயர் மகேஷ்குமார், தலைமைக் கழகச் செய்தி தொடர்புக்குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், இந்த நிகழ்ச்சியைத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கக்கூடிய தீர்மானக் குழுவின் தலைவர் தமிழ்தாசன், தீர்மான குழுவின் செயலாளர் வைத்தியலிங்கம், கீரை விஸ்வநாதன், அக்ரி கணேசன், துணைத் தலைவர்கள் டாக்டர் வாசிலான், மா.இளங்கோவன், சுப.தினகரன், குழுவின் இணைச் செயலாளர்கள் முத்துசாமி, நாச்சிமுத்து, சத்தியமூர்த்தி, ஜெயக்குமார்,

தீர்மானக் குழுவின் உறுப்பினர்கள் வெங்கடபதி, தங்கவேலு, மிசா ராமநாதன், சேதுராஜன், ஆதிசங்கர், ரெஜினால்ட்,

வெற்றிச்செல்வன், சரவணன், செல்வராஜ், நாச்சிமுத்து, வீரகோபால், காமராஜ், நீலகண்டன், ரகுபதி,

மாவட்ட இளைஞரஅணி அமைப்பாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஈஸ்வரப்பன், சகோதரர் எபினேசர், பிரபாகரராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த், ராஜா அன்பழகன், வழக்கறிஞர் பிரகாஷ், லோகேஷ்,

திருப்பத்தூர் அமைப்பாளர் வடிவேலு, சகோதரர் கோல்டு பிரகாஷ், காஞ்சிபுரம் யுவராஜ், மதன்குமார், இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், சகோதரர் மதுரையைச் சேர்ந்த புண்ணியமூர்த்தி, இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், பகுதி, கழக, வார்டு செயலாளர்களே, நிர்வாகிகள் அனைத்து அணிகளின் மாநில நிர்வாகிகள், பெரியோர்கள், முத்தமிழறிஞர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகள் அனைவரும் இதில் கலந்து கொண்டனர்.

---

## சென்னை கிழக்கு மாவட்டத்தில்

# ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் படிப்பகங்கள் திறப்பு!

## மாவட்ட இளைஞர் அணிக் கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை, நவ. 7-*

*சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனை கூட்டம் 30.10.2023 திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் சென்னை ஓட்டேரி ஸ்டாரன்ஸ் ரோடு ஜி.பி.மினி ஹாலில் சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.லோகேஷ் தலைமையில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர் பாபு கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார்.*

*இந்த ஆலோசனை கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகர மேயர் பிரியாராஜன், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆலோசனை கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டன.*

*'நீட் விலக்கு நம் இலக்கு' என்பதை வலியுறுத்தி இல்லம் தோறும் சென்று கையெழுத்து பெற இருக்கும் இளைஞர் அணியின் பட்டியல் தொகுதி பகுதி வட்டம் வாரியாக விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும்.*

*இல்லம் தோறும் சென்று இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்ப்பது என்றும் இளைஞர் அணி பயிற்சி பாசறை கூட்டங்கள் வட்டம் தோறும் நடத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.*

*சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் படிப்பகங்கள் திறக்க வேண்டும்.*

*17.12.2023-ல் சேலத்தில் நடைபெறவிருக்கும் இளைஞர் அணியின் இரண்டாம் மாநில மாநாட்டிற்கு சென்னை கிழக்கு மாவட்டத்திலிருந்து தொகுதி வாரியாக, பகுதி வாரியாக, எத்தனை பேர் கலந்து கொள்வார்கள் என்று படிவத்தில் பூர்த்தி செய்து தர வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது.*

*இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர், அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற மாபெரும் தனியார்துறை சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் பணிவாய்ப்பு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மகளிர் திட்ட இயக்குநர் நா.சரவணன், வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி சௌடீஸ்வரி கோவிந்தன், வேடசந்தூர் பேரூராட்சி தலைவர் திருமதி கா.மேகலா கார்த்திகேயன், பழனி வருவாய் கோட்டாட்சியர் சௌ.சரவணன், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் உதவி இயக்குநர் திருமதி ச.பிரபாவதி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி சு.காமேஸ்வரி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் திருமதி தமிழ்ச்செல்வி ராமச்சந்திரன் உட்பட பலர் உள்ளனர்.

# ஜாதியும், நீதியும்; பன்மைத்துவத்தை மறுக்கும் பா.ஜ.க. அரசியல்!


## ‘மின்னம்பலம்’ இணையதளத்தில் பேராசிரியர் ராஜன் குறை கிருஷ்ணன் சிறப்புக் கட்டுரை!

பன்மைத்துவம் என்பது ஆபத்தானதோ, ஒற்றுமைக்கு எதிரானதோ அல்ல. சாதாரணமாக ஒரு குடும்பத்துக்குள்ளேயே சகோதர, சகோதரிகளுக்கு இடையே உள்ள வேறுபாட்டைக் குறிக்க “ஐந்து விரல்களும் ஒன்று போலவா இருக்கின்றன?” என்று கேட்பார்கள். விரல்களின் அளவு வேறுபட்டு இருப்பதால் அவை கரத்திலிருந்து பிரிந்து போவதில்லை. பாமர மக்களே இவ்வளவு தெளிவாக பன்மையைப் புரிந்து கொண்டாலும், பா.ஜ.க. பன்மையைக் கண்டு அஞ்சுகிறது. வரலாற்று ரீதியாக மக்களிடையே பல்வேறு சமூகவியல் வித்தியாசங்கள், வேறுபாடுகள் உருவாகியுள்ளதை அங்கீகரிக்காமல், அதனடிப்படையில் அவர்கள் தேவைகளை புரிந்துகொண்டு சட்டத் திட்டங்களை வகுக்காமல் நாட்டை ஒன்றுபடுத்துவதோ, அனைவரையும் உள்ளடக்கிய முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதோ கடினம். BJP’s politics of rejecting pluralism

இரண்டு அம்சங்கள், ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த அம்சங்கள் இன்று இந்திய அரசியலில் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒன்று ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள ஜாதிகளின் எண்ணிக்கையை மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூலம் அறிவது. இரண்டாவது அதற்கேற்றார்போல பின் தங்கிய வகுப்பினருக்கு கல்வி, வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் இட ஒதுக்கீடுகளை மேற்கொள்ள, பொருளாதார நலத்திட்டங்களை மேற்கொள்ள மாநிலங்களுக்கு சுயாட்சி உரிமைகளை வழங்குவது. வரி விதிப்பதிலும், நிதி மேலாண்மையிலும் மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்கினால்தான் அந்தந்த மாநிலங்களில் உள்ள பின் தங்கிய, ஏழை மக்களுக்கான திட்டங்களை மாநில அரசுகளால் உள்ளூர் சூழ்நிலைக்கு ஏற்றபடி திட்டமிட்டுச் செயல்படுத்த முடியும். ஆனால் பா.ஜ.க. இந்த முக்கியமான அரசியல் பிரச்சினைக்கு முகம் கொடுக்க மறுப்பதுடன், அதிகாரத்தை ஒன்றிய அரசிடம் குவிப்பதிலும், ஜாதிகளுக்கு இடையேயுள்ள இடைவெளியை மறுப்பதிலும் முனைப்புக் காட்டுகிறது.

**ஜாதிகளின் இருப்பை மறுக்கும் பிரதமர்**

**சட்டீஸ்கர் மாநில தேர்தல் பிரசாரத்தில் பேசும்போது பிரதமர் மோடி, “இந்தியாவில் ஒரே ஒரு ஜாதிதான் உள்ளது - அது ஏழை ஜாதி” என்று பேசியுள்ளார். கேட்பதற்கு முற்போக்காகத் தெரியும் இந்தப் பேச்சு, இந்தியா கூட்டணி ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை வலியுறுத்துவதை மறுக்கத்தான் என்பது வெளிப்படையானது. எதனால் இப்போது ஜாதிவாரியாக சென்சஸ் எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுகிறது என்பதை நாம் புரிந்துகொள்வதும் முக்கியம்.**




**சமகால உலகில் பல்வேறு புதிய தொழில்கள், சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற திறன்கள் உருவாகியுள்ளன. ஆனால் இவற்றில் பங்கேற்பது பெரும்பாலும் முன்னேறிய வகுப்பினராகவே உள்ளனர். பின் தங்கிய வகுப்பினர் மக்கள் தொகையில் பெரும்பாலானோராக இருந்தாலும் அவர்கள் உயர்கல்வியிலோ, மதிப்புமிக்க, செல்வாக்கு மிக்க தொழில்களோ அதிகம் இடம்பெறுவதில்லை. நாடு சுதந்திரம் அடைந்தவுடன் முதலில் பட்டியல் இனத்தவருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டாலும், அவர்களும் இன்னும் பிற சமூகத்தினர் போல உயர்பதவிகளில், சமூக மதிப்புமிக்க, அதிகாரமுள்ள பணிகளில் இடம்பெறுவது கணிசமாக இல்லை. பிற்படுத்த வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு சுதந்திரம் பெற்று நாற்பதாண்டுகளுக்கு பிறகுதான் நடைமுறைப் படுத்தப்பட்டது. ஆனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட 27% என்பது போதுமானவரை அவர்களை பல்வேறு துறைகளில் உள்ளடக்கவில்லை.**

உதாரணமாக கடந்த ஐந்தாண்டுகளில் உயர் நீதிமன்றங்களுக்கு நியமிக்கப்பட்ட நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை 604 என்னும்போது அதில் 458 பேர் முன்னேறிய வகுப்பினர் என்றும், பதினெட்டு பேர் பட்டியல் ஜாதியினர், ஒன்பது பேர் ஆதிவாசிகள், 78 பேர் பின் தங்கிய வகுப்பினர் என்றும் ஒரு தகவல் கூறுகிறது. இது



போல பல்வேறு துறைகளில் இன்னமும் பல்வேறு ஜாதியினர் பங்கேற்க இயலாமல்தான் உள்ளது. இதையெல்லாம் சரி செய்யவும், அனைத்து ஜாதியினரும் அனைத்து துறைகளிலும் பங்கேற்கும் சூழலை உருவாக்கவும், ஜாதிவாரி கணக்கெடுப்பு என்பது அவசியமாகும்.

இந்தக் கணக்கெடுப்பை மாநில அரசுகள் செய்தால் அது அதிகாரபூர்வமானதாக அங்கீகரிக்கப்படாமல் போகலாம். ஏனெனில் மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது ஒன்றிய அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்ட பட்டியலில்தான் உள்ளது. எனவேதான், அதிகாரபூர்வமான சென்சஸ் கணக்கெடுப்பில் ஜாதியை உள்ளடக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுகிறது.

**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*



இவ்வளவு சிக்கலான ஒரு பின்னணியை உதாசீனம் செய்யும் வகையில் பிரதமர் நாட்டில் உள்ள ஒரே ஜாதி ஏழைகள் என்ற ஜாதிதான் என்று பேசியிருப்பது தவறான போக்காகும். ஏழ்மை என்பது வேறு; சமூக ஏற்றத்தாழ்வு, விலக்கம் என்பது வேறு. இந்த வேறுபாட்டை புரிந்து கொள்ளாததுபோல நடிப்பதன் மூலம்தான் பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான இட ஒதுக்கீடு என்ற, அரசியலமைப்பு சட்டத்துக்குப் புறம்பான ஓர் இட ஒதுக்கீட்டை முன்னேறிய வகுப்பினரில் ஏழைகளுக்காக பா.ஜ.க. அரசு கொண்டுவந்தது. இட ஒதுக்கீடு என்பது பொருளாதார வறுமையைப் போக்கும் திட்டம் அல்ல. சமூக ஏற்றத்தாழ்வை, விலக்கங்களை சரிசெய்யும் முறை என்பதை திட்டமிட்டே குழப்புவதற்கான முயற்சிதான் Economic Weaker Section என்ற பெயரில் முன்னேறிய வகுப்பினரில் பொருளாதார நலிவுற்றோருக்கு இட ஒதுக்கீடு வழங்கியது.

பல்வேறு வகையான சமூக அடுக்குகளில், கலாச்சார வெளிகளில் இயங்கும் ஜாதிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்து பொதுவாழ்வில் அவர்கள் பங்களிப்பை அதிகரிக்க செய்வதற்கு பதிலாக, எல்லோரையும் ஏழைகள் என்ற ஒற்றைப் பிரிவில் வைத்து பார்ப்பது மிகவும் பிற்போக்கான பார்வையாகும். இது சமூகப் பன்மையை மறுப்பதன் மூலம் சமூக நீதியை மறுப்பதாகவே இயங்கும்.

அப்படி உண்மையிலேயே மோடியும், பா.ஜ.க.வும் ஏழைகளுக்காக கவலைப்படுவதாக இருந்தால் ஏன் இந்த அரசு நூறு நாள் வேலைத்திட்டத்தை பலவீனப் படுத்துகிறது? அதை விரிவுபடுத்தி ஏழைகளுக்கு அதிக வருவாய் கிடைத்திட வழிவகை செய்யலாமே? ஏழை மக்களின் நலனுக்காக எத்தனை திட்டங்களை பாஜக நடைமுறை படுத்தியுள்ளது? கார்ப்பரேட்டுகளின் கடன்களை தள்ளுபடி செய்யவும், அவர்களுக்கு வங்கிகளிலிருந்து ஆயிரக்கணக்கான கோடிகளை அள்ளி அள்ளித் தரவும், வரிவிலக்குத் தரவும் முன்னுரிமை தரும் அரசு, ஏழை மக்களுக்கு முன்னுரிமை அளித்து என்னவெல்லாம் செய்தது என்று கூற முடியுமா?

**ஜாதீய சமூகங்களும், மாநில அரசியலும்**

ஒவ்வொரு மாநிலத்திலும் ஜாதீய சமூக அடுக்குகள், கலாச்சாரப் பின்புலங்கள் வேறுபடுவதைக் காணமுடியும். இவற்றினுள் சில ஒப்புமைகளைக் காணலாம் என்றாலும், ஒவ்வொரு மாநிலத்தின் சமூக கட்டமைப்பும் நீண்ட நாள் பண்பாட்டு வரலாற்றின் விளைபொருள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். உதாரணமாக ராஜஸ்தான் மாநிலத்தில் குஜ்ஜர் சமூகத்தினரின் சமூக நிலை என்ன, அந்த சமூகத்தில் உட்பிரிவுகள் உண்டா, இவர்களது தேவைகள் இன்றைய நிலையில் என்ன, இவர்களது கோரிக்கைகள் என்ன என்பதை அந்த மாநிலத்தின் சமூக அரசியல் பொருளாதாரப் பின்னணியில்தான் புரிந்துகொள்ள முடியும்.




அதே போல, குஜராத் மாநிலத்தில் உள்ள படிதார் வகுப்பினர் மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு விதமான வாழ்வியல் சூழல்களில் உள்ளனர் என்றால், அவர்களை எப்படி வகைப்படுத்தி, அவர்களுக்குத் தேவையான முன்னுரிமைகளை எப்படி வழங்குவது என்பதை அந்த மாநிலத்தின் அரசியல் சூழலில்தான் தீர்மானிக்க முடியும். BJP’s politics of rejecting pluralism


பஞ்சாப் என்று வந்தால் சீக்கியர்களில் உள்ள தலித் பிரிவினர், விவசாய சமூகத்தினர் போன்ற வகைப்பாடுகளை பிற மாநிலத்தவர் புரிந்துகொள்வது கடினம். அந்த மாநில அளவிலான புரிதலை ஒட்டியே அங்கே சமூக நீதிக்கோட்பாட்டை உருவாக்க முடியும்.

இதையெல்லாம் கணக்கில் கொண்டு பார்த்தால் சமூக நீதி என்பதும், மாநில உரிமைகள், மாநில சுயாட்சி என்பதும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாதவை என்பதைத் துல்லியமாக உணரலாம். தமிழ்நாட்டில் திராவிட கட்சிகளின் ஆட்சி என்பது சமூக நீதி பார்வையை தொடர்ந்து கடைப்பிடித்ததால், அனைத்து ஜாதிகளும் பரவலாக முன்னேற்றத்தில் பங்கேற்கும் சூழல் உருவாகியது. இது முழுக்க முழுக்க மாநில அரசியல் முன்னெடுப்பில் மட்டுமே நிகழ முடியும். இதன் விளைவாகத்தான் மருத்துவக் கல்விக்கு நீட் தேர்வு என்பது போன்ற சமூக வடிகட்டல் முயற்சிகளை எதிர்ப்பதில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது.

**மக்களாட்சி முறையில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் என்பது மாநில மக்களின் அதிகார பங்கேற்பிற்கு அதிக முக்கியத்துவம் என்பதாகவே பொருள்படும். அந்த நிலையில்தான் அனைத்து ஜாதியினருக்குமான சமூக நீதி என்பதும் செயலூக்கம் பெறும். அதிகாரம் ஒன்றியத்தில் குவியும்போது இயல்பாகவே முன்னேறிய வகுப்பினருக்கே அது சாதகமாக மாறும். பா.ஜ.க. காண மறுக்கும், அல்லது மறைக்கும் உண்மை இதுதான்.**

**இந்திய மாநிலங்களும், உலக நாடுகளும்**

இந்திய மாநிலங்கள் 28இல், 19 மாநிலங்கள் ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்டவை. பத்து மாநிலங்கள் ஐந்து கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்டவை. இதை உலகிலுள்ள நாடுகளுடன் ஒப்பிட்டால், 192 ஐக்கிய நாடுகள் சபை உறுப்பினர் நாடுகளில் நூறு நாடுகளுக்கும் அதிகமானவை ஒரு கோடிக்கும் குறைவான மக்கள் தொகை கொண்டவை. முப்பது நாடுகள் மட்டுமே ஐந்து கோடிக்கு அதிகமான மக்கள் தொகை கொண்டவை. உலக அரசியல் அமைப்பு இப்படி அமைந்திருக்கும்போது நூற்று நாற்பது கோடி மக்களைக் கொண்ட இந்தியா ஒற்றை ஒன்றிய அரசால் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று பாரதீய ஜனதா கட்சி நினைப்பது எவ்வளவு முரண்பாடானது என்பதை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது.



மாநிலங்களின் அரசியல் முக்கியத்துவத்தை குறைப்பதற்காகத்தான் “ஒரே நாடு, ஒரே தேர்தல்” என்ற விபரீத திட்ட த்தை செயல்படுத்த முனைகிறது பாஜக அரசு. மாநிலங்களுக்கான தேர்தல் தனியாக நடக்கும் போது, அந்த மாநிலத்தின் அரசியல் அமைப்பு, சமூகப் பரப்பு, அதிலுள்ள ஜாதீய சமூகங்கள், அவர்கள் கோரிக்கைகள் ஆகியன அனைத்தும் மக்களின் கவனத்திற்கு வரும். ஊடகங்களில் அலசப்படும். அது மாநிலங்களின் உரிமைக் கோரிக்கைகளை வலுப்படுத்தும். மாநில சுயாட்சி என்ற இன்றியமையாத கோரிக்கையை நோக்கி அனைவரையும் கொண்டு செல்லும்.

அனைத்து மாநிலங்களுக்கும், ஒன்றியத்திற்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடந்தால் தனித்தனி மாநிலங்களின் அரசியல் வடிவமைப்பிற்கு கவனம் கிடைக்காது. அந்தந்த மாநிலங்களின் சமூகவியல் தனித்துவம் வெளியில் தெரியாமல், வலுப்பெறாமல் போகும். ஒன்றியத் தேர்தலில் கவனம் குவித்து, மாநில தேர்தல்களுக்கு முக்கியத்துவமின்றி போகச் செய்யலாம் என்பதே, ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பதன் நோக்கம்.

இப்போதே ஒரு விஷயம் துல்லியமாகத் தெரிகிறது. குஜராத், உத்தரப் பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களைத் தவிர, வேறு எந்த மாநிலத்திலும் பா.ஜ.க.வால் தன் செல்வாக்கை வளர்த்துக்கொண்டு முதல் பெரிய கட்சியாக பரிணமிக்க முடியவில்லை. அதாவது ஐந்து கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட பத்து மாநிலங்களில், இரண்டில்தான் அதன் செல்வாக்கு வலுவாக உள்ளது. மற்ற எட்டு மாநிலங்களிலும் அது பின் தங்கித்தான் உள்ளது. மூன்று மாநிலங்களில் அது ஆட்சி செய்ததே இல்லை.

**சுருக்கமாகச் சொன்னால் மாநில அரசியல் என்பது பின் தங்கிய வகுப்பினர், பட்டியலினத்தவர் ஆகியோரின் அரசியல் அணியாக்கத்தில் இருப்பதால் பாரதீய ஜனதா கட்சியால் அவற்றில் கால்பதிக்க முடியவில்லை. “ஒரே நாடு, ஒரே மதம்” என்றெல்லாம் கூறி, பாகிஸ்தானுக்கும், முஸ்லிம்களுக்கு எதிரான போலியான பகையுணர்வைத் தூண்டி மக்களை தன் வசம் ஈர்ப்பதைத் தவிர அதற்கு வேறு அரசியல் தெரியாததால்தான் அது பன்மைத்துவத்தைக் கண்டு அஞ்சுகிறது. மிரள்கிறது. பன்மைத்துவத்தை மறுதலிக்கிறது.**

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்

---

ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிரான வழக்கு!

# நவ.10 ஆம் தேதியே விசாரிக்க வேண்டும்!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு!

*புதுடெல்லி, நவ. 7-*

*ஆளுநருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தொடர்ந்துள்ள வழக்குகள் மீது வருகிற 10ஆம் தேதியே விரைந்து விசாரணை நடத்த வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு முறையீடு செய்துள்ளது.*

*தமிழ்நாடு அரசின் கோப்புகள் மற்றும் சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்கள் மீது ஆளுநர் முடிவெடுக்க உரிய காலக்கெடு நிர்ணயிக்க வலியுறுத்தி உச்சநீதிமன்றத்தில் கடந்த மாதம் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்தது.*

*மேலும் மாநில அரசு அமைத்த தெரிவுக் குழுக்களின் பரிந்துரையை ஏற்று பல்கலைக்கழக துணைவேந்தர்களை நியமிக்க ஆளுநருக்கு உத்தரவிடக் கோரியும் மனு தாக்கல் செய்யப்பட்டது.*

*தமிழ்நாடு அரசின் இந்த மனுக்களை விசாரணைக்கு பட்டியலிடும் வகையில் வழக்கு எண்ணும் வழங்கப்பட்டுள்ளது. வரும் 10ம் தேதி இந்த வழக்குகள் விசாரணைக்கு வர வாய்ப்புள்ளதாக உச்சநீதிமன்றம் தெரிவித்திருந்தது.*

*இந்நிலையில் ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிரான வழக்குகளை விரைந்து விசாரிக்க கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் முறையீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் வில்சன், வழக்குகளை 10 ஆம் தேதி அன்றே விசாரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.*




சென்னை கலைவாணர் அரங்கத்தில், நேற்று (06.11.2023) வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், நடைபெற்ற சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், வேலூர் மற்றும் கடலூர் கோட்டங்களைச் சார்ந்த வணிகர்களுக்கான சமாதானத் திட்டம் 2023 விழிப்புணர்வு மற்றும் திட்ட விளக்க நிகழ்ச்சியில், வணிகர்களுக்கு வரி நிலுவை தள்ளுபடிக்கான ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்வின் போது, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, வணிகவரித்துறை ஆணையர் முனைவர் டி.ஜகந்நாதன், மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

விருதுநகர் மாவட்டத்தில்

# சாலை விபத்தில் உயிரிழந்த குடும்பத்தினருக்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.7-

விருதுநகர் மாவட்டம் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:

விருதுநகர் மாவட்டம் மற்றும் வட்டம், செங்குன்றாபுரம் கிராமம், மூளிப்பட்டி விலக்கு அருகில் கடந்த 05.11.2023 அன்று மாலை மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், முருகனேரி கிராத்தைச் சேர்ந்த பெண்கள், விவசாயப் பணிகளை முடித்துவிட்டு திரும்பும்போது செங்குன்றாபுரம் கிராமம் மூளிப்பட்டி சாலையின் அருகில் அமர்ந்திருந்தபோது அழகாபுரியிலிருந்து விருதுநகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த கார் எதிர்பாராத விதமாக தடம்மாறி பெண் தொழிலாளர்கள் மீது மோதிய விபத்தில் மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், ஆறுமுகனேரி கிராமத்தைச் சேர்ந்த திருமதி.பேச்சிம்மாள் (வயது 55) க/பெ. சோனைமுத்து மற்றும் திருமதி.முத்துச்செல்வி (வயது 42) க/பெ. பவுன்ராஜ் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்துள்ளார்கள் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து விருதுநகர் அரசு மருத்துக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், ஆறுமுகனேரி கிராமத்தைச் சேர்ந்த 4 நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நான்கு நபர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.



விக்டோரியா பொது அரங்கில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.32.62 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகளை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (06.11.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது தலைமைப் பொறியாளர் (பொது) எஸ்.ராஜேந்திரன் உட்பட அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கண்ணீர் அஞ்சலி

கும்மிடிப்பூண்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்
கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் – சென்னை மண்டலப் பொறுப்பாளர்

**C.H.சேகர்** அவர்களின் தாயாரும்



நினைவில் வாழும். C.H.அப்பல் நாயுடு

*அவர்களின் மனைவியுமான*

## திருமதி. C.H. கிருஷ்ணவேணி

மறைவு : 6 - 11 - 2023 ( வயது : 69 )

அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அம்மையாரின்
**இறுதி ஊர்வலம் ( 08.11.2023, புதன்கிழமை, காலை 10 மணியளவில் )**
அவர்களின் இல்லத்தில் இருந்து புறப்படும்.

முகவரி : எண்.1, ஜெயின்ஹிந்த் நகர், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம் – 601 201.

*நீங்கா துயரத்துடன்...*

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

## மற்றும் குடும்பத்தினர் – உறவினர்கள்

# முக்கடலில் இருந்து முத்தமிழ்த் தேர்!

**கடலில் இருந்து கப்பல் வரும். ஆனால் கடலில் இருந்து முத்தமிழ்த் தேர் புறப்பட்டு இருக்கிறது!**

**காரணம், புறப்பட்ட இடம் முப்பால் தந்த வள்ளுவன் நிற்கும் முக்கடல் சூழ்ந்த இடம் என்பதால் முத்தமிழ்த் தேர் புறப்பட்டு வருகிறது. முத்தமிழ்த் தேர் என்றாலே அது முத்தமிழறிஞரின் தேர் என்பதைச் சொல்லத் தேவையில்லை.**



அந்தளவுக்கு மொத்தத் தமிழையும் தன்னுள் அடக்கி ஆண்டவர் கலைஞர். அவரது நூற்றாண்டு விழாவை, ஒரு விழாவாக எடுத்தல் முடியாது, தகாது என்பதால் 12 வகைப்பட்ட விழாவாக நடத்தத் திட்டமிட்டார் 'திராவிட மாடல்' முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு விதமாய் கலைஞரைக் கண்டு வருகிறது. பல்லாண்டுகளாக தலைவர் கலைஞரின் உதவியாளராக இருந்த அண்ணன் செயல்மணி ஒருமுறை சொன்னார்: 'ஐம்பது வருஷமா தலைவரை பக்கத்துல இருந்து பார்க்கிறேன். இன்னும் முழுசா பார்த்து முடிக்கலை" என்றார். அப்படி கோடி ஜோடிப் பார்வைக்கும் புலப்படாத அறிவாளுமை கொண்டவர் கலைஞர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைத்த ஒரு குழு **'எழுத்தாளர் கலைஞர்'** என்பது ஆகும். மாண்புமிகு அமைச்சர் பெரிய கருப்பன் அவர்களைத் தலைவராகவும், மாண்புமிகு அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கயல்விழி செல்வராஜ் ஆகியோரை துணைத் தலைவர்களாகவும் கொண்ட இக்குழுவில் ஆர். பூரணலிங்கம், ஆர்.பாலகிருஷ்ணன், ஏ. எஸ்.பன்னீர்செல்வம், கலாப்ரியா, எஸ்.ராமகிருஷ்ணன், இமையம், அறிவுமதி, வி.எம். எஸ்.சுபகுணராஜன், சல்மா, தமிழ்மகன், பொதிய வெற்பன் ஆகியோருடன் நானும் உறுப்பினராக இடம்பெற்றிருந்தேன்.

**ப.திருமாவேலன்**

கலைஞரின் படைப்புகளைத் தாங்கிய ஒரு வாகனத்தை தயாரித்து அதனை தமிழ்நாடு முழுவதும் வலம் வரச் செய்வது எங்கள் குழுவினரின் சிந்தனை. அதனை செயல்வடிவம் கொடுத்துக் காட்டினார் கலை இயக்குநர் சரவணன் . அனைத்துப் பணிகளையும் தனது தோளில் சுமந்தார் மக்கள் தொடர்பு அதிகாரியான இராஜா. கடந்த 4 ஆம் நாள் அன்று குமரி முனையில் இருந்து மாண்புமிகு அமைச்சர்கள் பெரியகருப்பன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மனோ தங்கராஜ், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் 'முரசு' அறைந்து வாகனத்தை இயக்கி வைத்தார்கள். கொடி அசைத்தல், ரிப்பன் வெட்டுதல் என்பதெல்லாம் கலைஞரின் முரசு தமிழுக்கு ஒவ்வாது என்பதால் முரசு முழங்கியது.

**வாகனத்தின் வடிவமே 'பேனா'தான். கலைஞரின் பேனா, திறந்த வடிவில் இருக்கிறது. கலைஞரின் கண்கள் திறந்திருக்கும் நேரமெல்லாம் பேனாவும் திறந்தே இருக்கும். முள் முனை தலை கவிழும் போது, தமிழினம் தலை நிமிரும். 'உடைந்த வாளாக இருந்தாலும் ஒரு வாள் தாருங்கள்' என்று அந்த முனைதான் எழுதியது. 'வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்' என்று அந்த முனைதான் எழுதியது.**



உள்ளே நுழைந்தால் கோபாலபுரம் வீட்டில் கலைஞரின் ஆளுமை அரசவை. அதில் அவர் நடுநாயகமாக அமர்ந்திருக்கிறார். அவரது புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அவையே நூலகம் போல இருக்கிறது. எழுத்தாளர் இமையம் தயாரித்த **'எழுத்தாளர் கலைஞர்'** குறும்படம் ஓடிக் கொண்டே இருக்கிறது. 13 வயதில் கலைஞரின் கையெழுத்து முதல் 90 ஆம் ஆண்டை கடந்த கையெழுத்து வரை சுவராக இருக்கிறது. இதைப் பார்க்கும்போது ஆயிரமாண்டு சித்திரச் சுவர் போல இருக்கிறது. வாகனத்தைச் சுற்றிலும் கலைஞரின் புத்தகத் தலைப்புகள் எழுதப்பட்டுள்ளன. 'ஒரு லாரிக்கு எழுதிக் குவித்திருக்கிறார்' என்று சொல்லத்தக்க அளவுக்கு அத்தனை தலைப்புகள்.

**இதோ படைப்பாளி கலைஞரின் வாகனம் தமிழ்நாடு முழுவதும் வலம் வரப் போகிறது. கலைஞர் எந்த ஊர்க்காரரும் இல்லை. எல்லா ஊர்க்காரரும் அவர். எல்லா ஊர்களிலும் அவரது அரசியல் பயணம் இருந்துள்ளது. எல்லா ஊர்களிலும் அவர் தனது ஆட்சி காலத்து முத்திரைத் திட்டங்களைக் கொண்டு வந்துள்ளார். அவர் உருவாக்கிய நவீன தமிழ்நாட்டை 'முத்தமிழ்த்தேர்' ஊர்ந்து வருகிறது. டிசம்பர் 4 தலைநகர் சென்னையை அடைய இருக்கிறது.**

**உள்ளே நுழைந்து வெளியில் வரும் போது … 'உடன்பிறப்பே' என்ற ஒற்றைச் சொல்லை உங்கள் இதயம் கேட்கலாம். 'தென்றலைத் தீண்டியதில்லை, தீயைத் தாண்டி இருக்கிறேன்' என்பதை உங்கள் உதடுகள் உச்சரிக்கலாம். குறளோவியத் தொல்காப்பியப் பூங்காவில் தென்பாண்டிச் சிங்கத்தின் உறுமலைக் கேட்கலாம். அந்தக் கரகரக் குரல் உங்களை காந்தமாக மீண்டும் அந்தத் தேருக்குள் இழுக்கலாம்.**

## ஒட்டன்சத்திரம் கள்ளிமந்தையத்தில்

# 200 கர்ப்பிணிகளுக்கு சமுதாய வளைகாப்பு விழா!

## அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடந்தது!

*திண்டுக்கல், நவ. 7 -* கள்ளிமந்தையத்தில் 200 கர்ப்பிணிகளுக்கு சமுதாய வளைகாப்பு விழா அமைச்சர் அர.சக்கர பாணி தலைமையில் நடைபெற்றது.

சமுதாய வளைகாப்பு விழா ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கள்ளிமந்தையத்தில் சமுதாய வளைகாப்புவிழாநடைபெற்றது. நிகழ்ச்சிக்கு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தலைமை தாங்கி, கர்ப்பிணிகளுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கி பேசினார். அப்போது அவர் பேசியதாவது: ஒட்டன்சத்திரம் மற்றும்

தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய பகுதிகளைச் சேர்ந்த தலா 100 கர்ப்பிணிகள் வீதம் மொத்தம் 200 பேருக்கு வளைகாப்பு நடத்தப்பட்டு, சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மகப்பேறு ஊட்டச்சத்து பெட்டகங்களும் வழங்கப்பட்டுள்ளன. கர்ப்பகாலத்தில்பெண்கள் நல்ல ஊட்டச்சத்து உள்ள உணவுகளை தொடர்ந்து சாப்பிட வேண்டும். அப்போது தான் குழந்தைகள் மிக ஆரோக்கியமாக இருக்கும்.

**பெண்கள் வளர்ச்சி திட்டங்கள்!**

மாவட்டத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் சார்பில் 15 வட்டாரங்கள் உள்ளன. இவற்றில் தொப்பம்பட்டி வட்டாரத்தில் உள்ள 121 குழந்தைகள் மையங்களில் 498 கர்ப்பிணிகள், 419 பாலூட்டும் தாய்மார்கள், 6 மாதம் முதல் 6 வயது வரை உள்ள 5,340 குழந்தைகள் பயன் அடைந்து வருகின்றனர். ஒட்டன்சத்திரம் வட்டாரத்தில் உள்ள 120 குழந்தைகள் மையங்களில் 442 கர்ப்பிணிகள். 453 பாலூட்டும் தாய்மார்கள், 6 வயது வரை உள்ள 5.840 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். பெண்கள் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை முதல் அமைச்சர் மு.க.ஸ்டா லின் செயல்படுத்தி வருகி றார்.

**அரசு கல்லூரிகள்!**

திண்டுக்கல் மாவட்டத்தில் மாணவ, மாணவிகளின் உயர் கல்விதரத்தை மேம்படுத்துவ தற்காக ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் 2 கல்லூரிகள், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் 2 கல்லூரிகள் மற்றும் விருப்பாட்சியில் தொழிற்பயிற்சி நிலையம் ஆகியவை தொடங்கப்பட்டுள்ளன. மேலும் பழனியில் சித்தா மருத்துவக்கல்லூரி, கொடைக்கானலில் கூட்டு றவு மேலாண்மை பயிற்சி மையம் ஆகியவை அமைக்கப்பட உள்ளன. இவ்வாறு அமைச்சர் அர. சக்கரபாணி பேசினார்.

சமூக நல அலுவலர் புஷ்பகலா, துணை இயக்குனர் (சுகாதாரப்பணிகள்) அனிதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில், பழனி ஆர்.டி.ஓ. சரவணன், ஒட்டன்சத்திரம் ஒன்றியக் குழுத் தலைவர் அய்யம்மாள். தொப்பம்பட்டி ஒன்றியக்குழுத் தலைவர் சத்தியபுவனா ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சிக் குழு துணைத் தலைவர் பொன்ராஜ், ஒட்டன்சத்திரம் நகராட்சி துணைத் தலைவர் வெள்ளைச்சாமி, மாவட்ட சமூக நல அலுவலர் புஷ்பகலா, துணை இயக்குனர்( நலப் பணிகள் )அனிதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கள்ளிமந்தையம் அம்மன் திருமண மண்டபத்தில் நேற்று முன்தினம் (05.11.2023) சமுதாய வளைகாப்பு விழாவில் 200 கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். உடன் ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி மு.அய்யம்மாள், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி இரா.சத்தியபுவனா ராஜேந்திரன், துணை இயக்குநர்(சுகாதாரப்பணிகள்) மரு.அனிதா, குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் திருமதி அமுதகலா, திருமதி அபராஜிதா உட்பட பலர் உள்ளனர்.



நீட் எதிர்ப்புக் களத்தில் முன் வரிசையில் நிற்கிற தமிழ்நாட்டின் குரலாக, கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவரணி சார்பில் 'நீட் விலக்கு நம் இலக்கு' கையெழுத்து இயக்கத்தின் ஒரு பகுதியாக, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. அவர்களை நேரில் சந்தித்து, அவரிடமும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி முன்னணியினரிடமும், நீட் எதிர்ப்புக்கான கையெழுத்துகளை பெற்றார். அதுபோது ரவிக்குமார் எம்.பி., ஆளூர் ஷாநவாஸ் எம்.எல்.ஏ., எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ. உள்ளிட்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 2022–2023'ஆம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வித்துறை சார்பாக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு கல்வி இணைச் செயல்பாடுகளுக்கான போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் வெற்றிபெற்ற 100 மாணவர்கள் 03/11/2023 அன்று ஜப்பான் நாட்டிற்கு பயணமானார்கள். அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியும் மாணவச் செல்வங்களோடு ஜப்பான் நாட்டிற்கு பயணமானார். அங்கு மாணவச் செல்வங்களை அழைத்துக்கொண்டு தலைநகர் டோக்கியோவில் நவீன அறிவியல் தொழில்நுட்பங்களோடு உலக புகழ் பெற்று விளங்கும் மிராய்கான் அருங்காட்சியகம் மற்றும் இந்திய தேசிய பள்ளிக்கு சென்றார். மிராய்கான் அறிவியல் அருங்காட்சியகம் தொடர்ந்து பல அறிவியல் சாதனைகளைப் படைத்து வருகின்றது. இந்திய தேசிய பள்ளிக்கு சென்ற அமைச்சர் அவர்களை அப்பள்ளி நிர்வாகத்தினரும், மாணவர்களும் அன்போடு வரவேற்றுள்ளார்கள். அங்கிருந்த நூலகம், வகுப்பறை மற்றும் கற்பித்தல் முறைகளைப் பற்றி அமைச்சரும், மாணவர்களும் பார்வையிட்டார்கள்.

# கற்றுத் தெளிவோம் கலைஞரின் இயக்கவியல்!

■ நீரை.மகேந்திரன்

ஓவியம் : ரவி பேலட்



**க**லைஞரின் காலம் குறித்து, அறிந்துகொள்வதற்கு முயற்சிக்கையில், 1977-ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின்னர், 1989-ஆம் ஆண்டு தி.மு.க. மீண்டும் ஆட்சி அமைக்கும் வரை, சுமார் 13 ஆண்டு காலம் அவரின் அரசியல் முடக்கம் இருந்ததாக ஒரு மாயத் தோற்றத்தை சிலர் உருவாக்கியுள்ளதை வாசிக்க முடிந்தது.

தனது இறுதிக் காலம் வரை தொடர்ச்சியாக ஆற்றலுடன் இயங்கிக் கொண்டிருந்த கலைஞர், அந்தக் குறிப்பிட்ட காலகட்டத்தில் வெளிப்படுத்திய ஆற்றல் அணுத்துகள்களுக்கு நிகரான வீச்சினைக் கொண்டிருந்தது. ஆனால், போலியான வரலாற்றுக் குறிப்புகளைத் தொடர்ந்து பேசி வருபவர்களுக்குத் தரவுகள் அச்சம் தரலாம்.

நெருக்கடி நிலை காலத்துக்குப் பின்னர், 1977-ஆம் ஆண்டு தேர்தலில், சட்டமன்றத்துக்கான ஆட்சி அதிகாரத்தினை கழகம் பெறவில்லை என்றாலும், மத்தியில் ஜனநாயகம் வென்றதாக தொண்டர்களுக்குக் கடிதம் எழுதினார். ஜனநாயக வெற்றியைக் கொண்டாடும்படியும் அழைப்பு விடுக்கிறார். அதனால், தேர்தல் வெற்றி தோல்விகள் அவரை நிலைகுலைய வைத்ததில்லை என்பதைப் புரிந்து கொள்வது எளிது. அதேநேரத்தில், அதன் பின்னர் அவரிடமிருந்து வெளிப்பட்ட பேராற்றலே கற்றுக் கொள்ள வேண்டிய பாடமாக உள்ளது.

## மீண்டும் எழுந்த தேசிய அரசியல்

தேசிய அரசியலின் செல்வாக்கைத் தளர்த்தி, மாநிலக் கட்சிக்கான வரலாற்றை எழுதுகிறது கழகம். ஆனால், 1977-ஆம் ஆண்டு உருவான தேசிய அரசியல் சூழல், அப்போது எம்.ஜி.ஆருக்குச் சாதகமானது. நாடாளுமன்றத்துக்கு ஒரே ஓர் உறுப்பினரை மட்டுமே கழகத்தால் அனுப்ப முடிந்தது.

தேர்தல் தோல்வியை முன்வைத்து, கழகத்திலிருந்து கலைஞர் விலக வேண்டும் என அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு கையெழுத்து இயக்கத்தையே நடத்தியுள்ளனர். அவரைச் சுற்றிப் பின்னப்பட்ட அவ்வளவு சூழ்ச்சிவலைகளும், தமிழ்நாட்டு வரலாற்றில் இருந்து கழகத்தை அப்புறப்படுத்தக் கொடுக்கப்பட்ட அழுத்தங்கள் என்பதை வரலாறெழுதிகள் குறிப்பிடத் தவறியவை.

ஆனால், நிகழ்ந்தது என்னெவெனில், தி.மு. கழகத்தில் இருந்து கலைஞரை நீக்க வேண்டும் என விருப்பப்பட்டவர்கள்தான் வெளியேற நேர்ந்தது. ஏனெனில் தொண்டர்கள் கலைஞரின் பக்கம் நின்று இருந்தனர். **‘காத்திருக்கிறேன், கண் பூத்துப் போகும் வரையில்’** என அவர்களுக்குக் கடிதம் எழுதினார் கலைஞர்.

1969-ஆம் ஆண்டுகளில் கழகத்தின் தலைமைக்கு ஏற்பட்ட போட்டியையும் நெருக்கடிகளையும் வென்று, தனது ஆளுமையை நிரூபித்தவர் கலைஞர். ஆனால், 77-ஆம் ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட அழுத்தம், பல சூழ்ச்சிகளைக் கொண்டதாக இருந்தது. அவற்றைச் சமாளித்து வெளிவந்ததுதான் அவர் ஆற்றலுக்குச் சான்று.

முக்கிய நிர்வாகிகள் கழகத்திலிருந்து விலகியதால் ஏற்பட்ட சலசலப்பு, அதன்பின்னர் அவர் மீது பொய்வழக்குகளால் கொண்டுவரப்பட்ட விசாரணை கமிஷன், இவ்வளவு சங்கடங்களுக் கிடையே சட்டமன்ற ஜனநாயக நடவடிக்கைகள் என அவர் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கிறார்.

## வழிநடத்திய கலைஞர்

உதாரணமாக, இந்தித் திணிப்பு விவகாரத்தை எடுத்துக் கொள்ளலாம். 1967-ஆம் ஆண்டில் அரசு அலுவலகங்களில் இந்தி மொழியைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர வேண்டும் என அப்போதைய பிரதமர் மொரார்ஜி தேசாய் முயற்சி செய்தார். அதை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில்தான் எம்.ஜி.ஆர் அரசு இருந்தது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் என்கிற முறையில், அதற்கு எதிராக மிகப்பெரிய சட்டமன்றப் போராட்டத்தை முன்னெடுத்தார் கலைஞர்.

1979-ஆம் ஆண்டில், இட ஒதுக்கீடு சட்டத்தை நீர்த்துப்போகச் செய்யும் வகையில் பொருளாதார அடிப்படையிலான இட ஒதுக்கீடு முன்வரவு சட்டமன்றத்தில் முன் வைக்கப்படுகிறது. 70 ஆண்டுகாலச் சமூகநீதிப் போராட்டத்தில் மிகப்பெரிய பின்னடைவை உருவாக்கக் கூடியது என, அதற்கு எதிராக மிகச்செறிவான போராட்டங்களை நடத்துகிறார்.

அப்போது சட்டமன்றத்தில் கலைஞர் ஒரு மணி நேரம் பேசினால், அவருக்குப் பதில் அளிக்க அமைச்சர்களுக்குப் பலமணி நேரம் தேவைப்பட்டது என்கிற நெருக்கடியை உருவாக்கினார்.

## அவதூறுகளுக்கு எதிராக

சட்டப் போராட்டம், சட்டமன்றப் போராட்டங்கள் மட்டுமல்ல, அவருக்கு எதிராகச் சமூக வெளிகளில் தொடுக்கப்பட்ட அவதூறுகளுக்கு எதிராகவும் அவர் ஒருவரே போராடியதைப் பார்க்கலாம். அவரைத் தாக்குவதற்காகவே பத்திரிகைகள் வளைக்கப்பட்டன. புதிய பத்திரிகைகள் தொடங்கப்பட்டு, அதில் தொடர்ந்து அவரைப் பழித்துச் செய்திகள் வந்தன.

1980-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி மொத்த தொகுதிகளையும் வென்றது. அதுபோல், அப்போது நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கழகம் வெற்றி பெற வேண்டியது. ஆனால், சில சூழ்ச்சிகளால் வெற்றிபெற முடியவில்லை. அந்தச் சூழலை **‘ஒரு மகத்தான தவறு’** என ‘நெஞ்சுக்கு நீதி’யில் குறிப்பிடுகிறார் கலைஞர்.

> **அரசியல், மக்கள் வாழ்க்கையில் மாற்றங்களை உருவாக்க வேண்டும் எனில், ஒரு தலைவன் எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.**

1981-ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழர்களின் மீதான தாக்குதல்களுக்கு எதிராக, தமிழ்நாட்டில் மிகப்பெரிய போராட்டத்தை நடத்தியது கழகம். தடையை மீறி, மறியல் போராட்டத்தை நடத்தி சிறைச் சென்றார் கலைஞர். கைது செய்யப்பட்டு 15 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டார். உணர்ச்சிப் பெருக்கில் பல தொண்டர்கள் தீக்குளித்தனர். அவை உணர்வுபூர்வமான நாட்களாக இருந்தன. இந்தப் போராட்டம் செப்டம்பர் மாதம் நடந்தது எனில், அடுத்த நான்கு மாதங்களில் தமிழ்நாட்டையே முடக்கிய ‘திருச்செந்தூர் நடைப்பயண’ப் போராட்டத்தினை முன்னெடுத்தார்.

திருச்செந்தூர் கோயிலில், அறநிலையத்துறை அதிகாரியின் மர்ம மரணத்துக்கு நீதி கேட்டு 1982-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கிய நடைப் பயணப் போராட்டம், தென் தமிழ்நாட்டில் மிகப்பெரிய உணர்ச்சி அலைகளை உருவாக்கிய போராட்டமாக இருந்தது.

1983-ஆம் ஆண்டு, ஜூலை மாதத்தில் ஈழத் தமிழர்களுக்காக மிகப் பிரமாண்டமான ஊர்வலத்தை நடத்தினார். அதே காலகட்டத்தில் ஈழத் தமிழர் போராட்டத்துக்காக கலைஞர், பேராசிரியர் ஆகியோர் தங்கள் எம்.எல்.ஏ. பொறுப்புகளைத் துறந்தனர். அந்த ஆண்டில் மட்டும் இரண்டு முறை சிறை நிரப்பும் போராட்டங்கள் நடைபெற்றன. 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட கழகத்தினர் சிறை சென்றனர்.

## அலைகளை உடைத்த தலை

1984 - ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் களம் மிகப்பெரிய அனுதாப அலையை உருவாக்கி இருந்தது. தி.மு.க உயிரோட்டமாக இருந்தும் எதிர்க்கட்சியாகவே அமர முடிந்தது. ஆனால், சட்டமன்றத்துக்கு எழுந்த அனுதாப அலை, அடுத்த இரண்டு ஆண்டில் அறிவிக்கப்பட்ட உள்ளாட்சித் தேர்தலில் வேலை செய்யவில்லை.

1986-ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலில் கழகம் புது பலத்துடன் எழுந்து நின்றது. நகர சபை தேர்தல்களில் 97 இடங்களில் 63 இடங்களைத் தி.மு. கழகம் கைப்பற்றியது. நகரப் பஞ்சாயத்துத் தேர்தல்களில் 217 இடங்களிலும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தேர்தலிலும் தி.மு.கழகமே முன்னணியில் இருந்தது. இப்படியாகக் கட்சியின் உயிரோட்டத்தையே தனது மூச்சாகக் கொண்டு செயல்பட்ட தலைவராக எழுந்து நின்றார் கலைஞர்.

ஆட்சியில் இல்லாத போதும் இந்திக்கு எதிரான மிகப்பெரிய போராட்டங்கள், அநீதி சட்டங்களை எதிர்த்து கண்டன முழக்கம், ஆர்ப்பாட்டம், பேரணி, ஒன்றிய, மாநில அரசியலுக்கு எச்சரிக்கை என ஒவ்வொரு நாளும் மக்களின் கவனத்தை ஈர்த்தவராக, தொண்டர்களை இயக்கியவராக இருந்தவர்.

எம்.ஜி.ஆரின் ஆட்சி என்பது 1977 -ஆம் ஆண்டு ஜூன் 30-ஆம் தேதி தொடங்கி அவர் மரணம் அடையும் வரை 1987-ஆம் ஆண்டு டிசம்பர் 24-ஆம் தேதி வரை நீடித்தது. அந்தப் பதினோரு ஆண்டுகளும் 1987 க்குப் பிறகு 1989 வரையிலான இரண்டு ஆண்டுகளும் தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப் பெரிய தேக்கத்தை உருவாக்கி இருந்தன. ஆனால், மிகப்பெரிய அலை இருந்ததாகக் கூறப்படும் எல்லாவற்றையும் உடைத்து கழகத்தை உயிரோட்டமான இயக்கத்தில் வைத்திருந்தவர் கலைஞர்.

அரசியல், மக்கள் வாழ்க்கையில் மாற்றங்களை உருவாக்க வேண்டும் எனில், ஒரு தலைவன் எப்போதும் இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும். அந்த இயக்கவியலை கலைஞரிடமிருந்து கற்றுக் கொள்வது நம்மை வழிநடத்தும்.

---

## திராவிட இயக்க இதழ்கள் - மாலைமணி!



1949-ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்படுவதற்கு முன், அதற்கான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது கழகத்துக்கென்று ஓர் ஏடு இல்லையே என்ற குறை, பேரறிஞர் அண்ணாவுக்கு இருந்தது. அதைப் போக்கும் வகையில், சுயமரியாதை வீரர் டி.எம்.பார்த்தசாரதி என்பவர், சென்னை மண்ணடி முத்துமாரி செட்டித் தெரு என்ற முகவரியிலிருந்து 1949-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் வாரத்தில் ‘மாலைமணி’ என்ற நாளேட்டைத் தொடங்கினார். அதற்கு ஆசிரியராக அண்ணா இருந்தார். பிறகு, பல்வேறு காலகட்டங்களில் நாவலர் நெடுஞ்செழியன், கே.ஜி.இராதாமணாளன் ஆகியோர் இருந்தனர். இதழ் வெளிவந்து, சில ஆண்டுகளுக்குப் பிறகு நஷ்டம் ஏற்பட்டதால் நின்றுபோனது.

சில ஆண்டுகள் கழித்து, பி.எஸ்.இளங்கோ என்ற கழகத் தோழர் ‘மாலைமணி’யை வார இதழாக அரசு அனுமதி பெற்று நடத்தினார்.

அந்த இதழ் 1 X 4 என்ற டெம்மி சைஸ் அளவில் 16 பக்கங்களுடன் முழுக்க முழுக்கத் தலைவர்களின் உரைவீச்சுகளை மட்டுமே தாங்கி வந்தது. ‘அறிஞர் அண்ணா அவர்களின் ஒரே ஒரு பேச்சை மட்டுமே வாரா வாரம் வெளியிட்டதால், 50 ஆயிரம் பிரதிகள் விற்றன’ என்று என்.வி.கலைமணி என்பவர் தனது **‘இதழியல் கலை அன்றும் இன்றும்’** என்ற நூலில் பதிவு செய்துள்ளார்.

மேலும் அவர், ‘அண்ணா அவர்கள் பேச்சை நேரில் கேட்டு இன்புறுவது போல, கட்சித் தோழர்களும், தலைவர் அவர்களே என்று அண்ணா பேச ஆரம்பித்ததிலிருந்து, அவர் முடிக்கும் வரையுள்ள பலதரப்பட்ட கருத்துகளைக் கட்சிக்காரர்கள் ஒருசேரப் படிக்கும் ஒரு வழக்கம் இருந்தது என்கிறார்.

நாளிதழாக வந்தபோது இதழின் பெயருக்குக் கீழே ‘திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்’ என்ற வரியைத் தாங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

## :ப்ளாஷ்பேக்



## தலைவருடன் சிறை!

**க**ழகம் களம் கண்ட இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் என் தாத்தா திருமால் அவர்களும் பங்கேற்றுப் போராடியுள்ளார். 1953-ஆம் ஆண்டு நடைபெற்ற மும்முனைப் போராட்டத்தில், கலைஞர் தலைமையில் நடைபெற்ற கல்லக்குடி ரயில் மறியல் போராட்டத்தில் கலைஞருடன் என் தாத்தாவும் சிறை சென்றார். சிறையிலிருந்து விடுவிக்கப் பட்ட பிறகு, இந்தப் படம் எடுக்கப்பட்டது. என் வீட்டை இன்றைக்கும் அலங்கரிக்கும் புகைப்படமாக இந்தப் படம் விளங்குகிறது.



பூபாலன்

**-பூபாலன், மணப்பாறை, திருச்சி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### ஓய்வறியா சூரியன்!

**1951-ஆம் ஆண்டு தொடக்கத்தில், ‘பிரச்சாரம்’, ‘பொதுக்கூட்டம்’, ‘நாடகம்’, ‘மாநாடு’ எனத் தொடர் பணிகளால் ‘ப்ளூரசி’ நோயால் பாதிக்கப்பட்டார் கலைஞர். ஓராண்டு காலம் ஓய்வெடுக்க வேண்டும் என மருத்துவர்கள் எச்சரிக்கை செய்தனர். கலைஞரை சந்தித்து நலம் விசாரித்த அறிஞர் அண்ணா, கலைஞர் பூரண நலம்பெறும் வரை, ஓராண்டு காலத்துக்குப் பொதுக்கூட்ட நிகழ்ச்சி களுக்கு அழைக்க வேண்டாம் எனத் ‘திராவிட நாடு’ இதழில் அறிவிப்பு வெளி யிட்டார். மருத்துவர்களின் அறிவுரை, அண்ணாவின் வேண்டுகோள் ஆகிய வற்றை மீறி, ஜூலை மாதத்தில் இருந்தே மீண்டும் பழைய வேகத்தில் இயங்கத் தொடங்கினார் கலைஞர்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 293




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131